பக்கங்கள் : பன்னிரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 ஆடி 25 திங்கட்கிழமை (09-08-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:258

## ஜி.சீ.ஈ உயர்தரப் பெறுபேறுகள் வேம்படி மாணவிகளே முன்னணி

### மொத்தம் 12 பேர் 3 'ஏ' சித்தி பெற்றனர்

யாழ்ப்பாணம்,ஒக.9

யாழ். மாவட்டப் பாடசாலைகள் ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சையில் மூன்று பாடங்களிலும் அதிவிசேட சித்தி (ஏ) பெற்ற மேலும் சில மாணவர்களின் பெயர் விவரங்கள் கிடைத்திருக்கின்றன.

இதன்படி, மாவட்டத்தில் முன்னணிப் பெறுபேறு பெற்ற பாடசாலை என்ற பெருமையை வேம்படி மகளிர் கல்லூரி தனக்குரியதாக்கி உள்ளது.

வேம்படி மகளிர் கல்லூரியைச் சேர்ந்த ஜெரீனா தங்கவேல் (கலை), ரமாவித்தியா ராமச்சந்திரன் (உயிரியல்) ஆகிய மாணவிகளும் மூன்று பாடங்களிலும் அதிவிசேட சித்தி பெற்றிருக்கின்றனர். இவர்களோடு சேர்த்து மொத்தம் பன்னிரண்டு மாணவிகள் மூன்று 'ஏ' சித்தி பெற்று கல்லூரிக்குப் பெருமை சேர்த்திருக்கின்றனர்.

வேம்படி மகளிர் கல்லூரியில் 10 மாணவிகளே 3'ஏ' சித்தி பெற்றனர் என்ற தகவல் நேற்றைய உதயனில் வெளியாகியிருந்தது தெரிந்ததே. சனிக்கிழமை பின்னிரவு கொழும்பிலிருந்து உதயனுக்குக் கிடைத்த தகவலின் போது அதிவிசேட சித்திபெற்ற சில மாணவர்களின் பெறுபேறுகள் விடுபட்டுவிட்டன.

யாழ். சென்ஜோன்ஸ் கல்லூரியிலும் மேலும் ஒரு மாணவன் 3'ஏ' சித்தி பெற்றிருக்கிறார்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## வன்னியில் 15 மாணவருக்கு 3'ஏ': கிளிநொச்சி 6, முல்லைத்தீவு 9

### புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயம் முன்னணியில்

கிளிநொச்சி,ஒக.9

ஜி.சீ.ஈ. உயர்தரப்பரீட்சையில் தோற்றிய வன்னி மாணவர்களின் பெறுபேறுகளும் நேற்று பாடசாலைகளுக்குக் கிடைத்தன.

நேற்றுக் கிடைக்கப்பெற்ற தகவல்களின்படி கிளிநொச்சி மாவட்டத்தில் 6 மாணவர்களும் முல்லைத்தீவு மாவட்டத்தில் 9 மாணவர்களுமாக மொத்தம் 15 பேர் மூன்று பாடங்களிலும் அதிவிசேட சித்தி (3 ஏ) பெற்றிருக்கின்றனர்.

வர்த்தகத்துறையில் தோற்றிய மாணவர்களே இவ்வாறு மூன்று பாடங்களிலும் விசேட சித்திபெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

கலைத்துறையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் வரலாற்றுப் பாடத்தில் நூற்றுக்கு நூறு வீதமானோர் சித்தியடைந்திருக்கின்றனர் என்றும் - உயிரியல், கணிதம், கலை ஆகிய துறைகளில் அதிவிசேட சித்திகள் வீழ்ச்சி கண்டுள்ளன எனவும் -

கல்வியியலாளர்கள் குறிப்பிட்டனர். மூன்று பாடங்களிலும் அதிவிசேட சித்திபெற்ற மாணவர்களின் பெயர்கள் வருமாறு:-

**கிளிநொச்சி**

★ பூநகரி ம.வி. - பாலசிங்கம் கருணாநிதி,

★ முழங்காவில் ம.வி. - நாகராசா விஜிதரன், நவரத்தினசிங்கம் சுகந்தினி.

★ அக்கராயன் ம.வி. - இரத்தினசிங்கம் கமல்ராஜ்.

(12ஆம் பக்கம் பார்க்க)

# ஜே.வி.பி. கட்சிக்குள் குத்துவெட்டு ஆரம்பம்

## தலைமைக்கு எதிராகப் போர்க்கொடி

கொழும்பு,ஒகஸ்ட்9

**மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) கட்சிக்குள்ளும் குத்து வெட்டுக்கள் ஆரம்பித்துவிட்டன. கட்சித் தலைமைக்கு எதிராகப் புதிய வரவுகள் போர்க்கொடி தூக்கிவிட்டன.**

பாதுகாப்பாகப் பதுக்கி வைக்கப்பட்ட பல கோடி ரூபா பெறுமதியான தங்கத்திற்கு என்ன நடந்தது என்று கேள்வி கேட்க ஆரம்பித்து விட்டனவாம் புதிய வரவுகள்.

உட்கட்சி நெருக்கடிகளை எதிர்கொள்ளும் கட்சித்தலைவர் சோமவன்ஸ அமரசிங்க மீண்டும் லண்டனுக்கு நாசூக்காகத் திரும்பிச்சென்றுவிட இரகசியமாக ஏற்பாடுகளைச் செய்து வருகிறார் என்றும் கூறப்படுகின்றது.

கட்சியின் கடந்த கால வரலாறு தெரியாத பல இளவட்டங்கள் இப்பொழுது மாகாணசபை உறுப்பினர்களாகவும் நாடாளுமன்ற உறுப்பினர்களாகவும் கட்சிக்குள் முக்கியத்துவம் பெற்றுவிட்டன. அதனால்தான் கட்சித் தலைமைக்குத் தலையிடி என்று கூறப்படுகின்றது.

(12ஆம் பக்கம் பார்க்க)

## 9 தமிழ் அகதிகள் மன்னார் வருகை

மன்னார்,ஒக.9

தமிழ்நாடு, இராமேஸ்வரம் அகதிமுகாமில் இருந்து மூன்று குழந்தைகள் உட்பட 9 இலங்கைத் தமிழ் அகதிகள் நேற்று திங்கட்கிழமை மன்னாருக்கு வந்து சேர்ந்திருக்கிறார்கள்.

இவர்களை ஏற்றிவந்த இந்தியப் படகுகள் கடலில் மணல்பிட்டிகளில் இவர்களை இறக்கி விட்டுச் சென்றுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

(ஐ-9-13)

## இராணுவப் புலனாய்வுப் பணிப்பாளர் நேரகாலத்துடனேயே சேவை விலகல்!

### கருணா விவகாரம் காரணமா?

இராணுவப் புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளர் பிரிகேடியர் கபில ஹெந்தரவிதான முன்கூட்டியே ஓய்வில் செல்வதற்கு விண்ணப்பித்திருக்கின்றார்.

கருணா விவகாரத்தைத் தவறாகக் கையாண்ட காரணத்தால் அவரை அப்பதவியிலிருந்து மாற்றுவதற்கு அரசுத் தலைமை ஆராய்ந்து வருகின்றது என்றும் -


அதன் காரணமாக எழக்கூடிய அவமானத்தைத் தவிர்ப்பதற்காக அவர் தாமாகவே முன்கூட்டியே பதவியிலிருந்து விலகுவதற்கு முடிவு செய்துவிட்டார் என்றும் ஒரு தகவல் தெரிவித்தது.

ஆனால், அவரது முடிவுக்கும் கருணா விவகாரத்துக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்றும் -

அவருக்கு கனிஷ்ட நிலையில் இருந்த பிரிகேடியர் ஒருவருக்கு இவரை முந்திக்கொண்டு மேஜர் ஜெனரல் தர பதவி உயர்வு வழங்கப்பட்டதே அவரது அதிருப்திக்கும் முன்கூட்டிய ஓய்வுக்கும் காரணம் என்றும் -

(12ஆம் பக்கம் பார்க்க)




வன்னி தொழில்நுட்ப நிறுவனத்தின் முதலாவது தொகுதி மாணவர்களின் பட்டமளிப்பு விழா நேற்று கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள்.

விழாவில் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், நிறுவன முதல்வர் சிவகோபால் ஆகியோர் உரையாற்றுவதையும் படங்களில் காணலாம். (ஐ)

**கைதி சுடப்பட்ட சம்பவம்:**

## மட்டு. சிறைச்சாலை அதிகாரி சந்தேகத்தின் பேரில் கைது!

மட்டக்களப்பு,ஒக.9

மட்டக்களப்பு சிறைச்சாலையில் கடந்த மாதம் 15ஆம் திகதி சச்சு மாஸ்டர் என்ற கைதி சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாகச் சந்தேகத்தின் பேரில் மட்டு சிறைச்சாலையின் அதிகாரி ஒருவர் குற்றப் புலனாய்வுத்துறை அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாகக் குற்றப் புலனாய்வுத்துறை அதிகாரிகள், கைதிகள் மற்றும் சிறைச்சாலை அதிகாரிகளை விசாரணை செய்து வந்தனர்.

கடந்த மாதம் 8 ஆம் திகதி சிறைச்சாலை அதிகாரியான கே.அருளம்பலம் என்பவர் சிறைக்குள் 'பார்ஸல்' ஒன்றைக் கொண்டு வந்தார் என்ற தகவல் கிடைத்திருந்தது. அதையடுத்து நேற்றுமுன்தினம் தமது கடமையை முடித்து வீடு திரும்புவதற்குப் புறப்பட்ட சமயம் அவரைக் குற்றப் புலனாய்வுப் பொலீஸார் விசாரணை செய்தனர். பிரஸ்தாப நபர் கொண்டு வந்த பார்ஸலில் கொலைக்குப் பயன்படுத்தப்பட்ட ஆயுதங்கள் எடுத்துவரப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகம் குற்

(12ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.சிறையில் அமைதியின்மை

யாழ்ப்பாணம்,ஒக.9

யாழ். சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள 209 கைதிகளில் 172 கைதிகள் உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றை நேற்று ஆரம்பித்துள்ளனர் என்று கூறப்படுகிறது.

சிறைச்சாலை அத்தியட்சகரை வெலிக்கடைக்கு இடமாற்றும் உத்தரவை ரத்துச்செய்யுமாறு கோரியே இந்தப் போராட்டத்தைக் கைதிகள் ஆரம்பித்துள்ளனர் என்று சிறைச்சாலை அத்தியட்சகர் எஸ்.சிவசுந்தரம் தெரிவித்தார்.

நேற்றுக் காலை 157 கைதிகள் உண்ணாவிரதத்தை ஆரம்பித்தனர் என்றும் - பின்னர் மாலையில் மேலும் 15 பேர் போராட்டத்தில் இணைந்துகொண்டனர் என்றும் - அவர் தெரிவித்தார்.

(12ஆம் பக்கம் பார்க்க)

# சுதந்திர தினத்தன்று வாஜ்பாயை கொல்லப்போவதாக மிரட்டல்

## கைத்தொலைபேசி மூலம் மர்மமனிதர் விடுத்தார்

புதுடில்லி,ஓக.9

இந்தியாவின் சுதந்திரதினத்தன்று முன்னாள் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாயைக் கொலை செய்யப்போவதாக மர்மமனிதர் ஒருவர் கைத் தொலைபேசி மூலம் மிரட்டல் விடுத்துள்ளார்.

இந்தியாவின் சுதந்திர தினவிழா நிகழ்வுகள் எதிர்வரும் 15ஆம் திகதி கோலாகலமாகக் கொண்டாடப்படவுள்ளது.

சுதந்திரதின விழாவன்று புதுடில்லியில் உள்ள செங்கோட்டையில் பிரதமர் மன்மோகன் சிங் தேசியக்கொடி ஏற்றவுள்ளார். விழாவையொட்டி பொலீஸார் மற்றும் மாணவ - மாணவிகளின் அணிவகுப்பும் நடைபெறவுள்ளது. இதற்காக ஒத்திகைகள் தற்போது நடைபெற்றுவருகின்றன.

சுதந்திர தின விழாவை முன்னிட்டு பாதுகாப்பு ஏற்பாடுகளும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. சுதந்திரதின விழாவைச் சீர்குலைக்கத் தீவிரவாதிகள் சதி வேலையில் ஈடுபடலாம் என்பதால் பாதுகாப்புப் படையினர் இப்போதே கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டு வருகிறார்கள்.

அத்துடன், பாதுகாப்புப் படையினர் பல்வேறு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு புதுடில்லி முழுவதும் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்தநிலையில், பாதுகாப்புப் படையினருக்கு நேற்றுமுன்தினம் மாலை ஒரு மர்மக் கைத்தொலைபேசி அழைப்பு வந்தது. கைத்தொலைபேசியில் பேசிய அந்த மர்ம மனிதன் ஒரு நிமிடத்துக்கும் குறைவாகத்தான் பேசினார் என்று கூறப்பட்டது.

'சுதந்திரதின விழாவன்று முன்னாள் பிரதமர் வாஜ்பாயைக் கொலைசெய்யப் போகிறோம்' என்று கூறிவிட்டு அந்த மர்மமனிதர் தொலைபேசித் தொடர்பைத் துண்டித்துவிட்டார். மாலை 4.15மணியளவில் இந்த மிரட்டல் வந்தது எனத் தெரிவிக்கப்பட்டது.

பாதுகாப்புப் படையினர் இந்தக் கொலை மிரட்டலால் அதிர்ச்சி அடைந்தனர். பொலீஸ் கட்டுப்பாட்டு அறைக்கும், மற்றைய பாதுகாப்புப் படைப்பிரிவுகளுக்கும் தகவல் கொடுக்கப்பட்டது.

ஏற்கனவே, முன்னாள் பிரதமர் வாஜ்பாய் உட்பட பல்வேறு தலைவர்களுக்குச் சிறப்பு அதிரடிப்படை பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளது. இந்தக் கொலை மிரட்டலைத் தொடர்ந்து வாஜ்பாய்க்குப் பாதுகாப்பு மேலும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

வாஜ்பாய் இப்போது புதுடில்லியில் கிருஷ்ன் மேனன் மார்க் பகுதியில் உள்ள புதிய வீட்டுக்கு குடிபோயிருக்கிறார். அந்த வீட்டைச் சுற்றிப் பொலீஸார் குவிக்கப்பட்டுள்ளனர். துப்பாக்கி தாங்கிய அதிரடிப்படையினரும் நிறுத்தப்பட்டுள்ளனர்.

வழக்கமாக மிரட்டல்போல அல்லாமல் இப்போது வந்த கொலை மிரட்டல் சற்று வித்தியாசமாக இருந்ததாகப் பொலீஸார் தெரிவித்தனர்.

கைத்தொலைபேசியில் எந்த எண்ணில் இருந்து கொலை மிரட்டல் வந்தது என்பதைப் பொலீஸார் கண்டுபிடித்துள்ளனர். ஆனால், கொலை மிரட்டல் விடுத்த மர்மமனிதன் யார் அவன் எங்கிருக்கிறான்? என்பதை இன்னும் கண்டுபிடிக்கமுடியவில்லை என பொலீஸ் தரப்பில் கூறப்பட்டது. (எ)

## கார்கில் போர் பற்றி முஷாரப் கருத்து

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே ஏற்பட்ட கார்கில் போரில் இந்திய இராணுவத்துக்கே அதிக உயிரிழப்பு ஏற்பட்டது என்று பாகிஸ்தான் அதிபர் பர்வேஷ் முஷாரப் தெரிவித்தார்.

'டான்' பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் முஷாரப் இவ்வாறு கூறியுள்ளார். அவர் தமது பேட்டியில் மேலும் தெரிவித்ததாவது:-

இந்தியாவுக்கு எதிராக முன்பு நடந்த இரு போர்களை விட கார்கில் போரில் பாகிஸ்தான் வீரர்கள் அதிக எண்ணிக்கையில் உயிரிழந்தனர் என்று பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப் கூறியுள்ளார். ஷெரீப்பின் கருத்தை நான் மறுக்கிறேன். முன்னாள் பிரதமர் ஒருவர் இத்தகைய கருத்தைக் கூறி சொந்த வீரர்களையே குறைகூறுவது மனதைப் புண்படுத்துகிறது.

கார்கில் போரில் இந்திய இராணுவத்துக்கே அதிக உயிரிழப்பு ஏற்பட்டுள்ளது. வெளியுறவு அமைச்சர் நட்வர் சிங்குடன் அண்மையில் நடத்திய பேச்சின்போது காஷ்மீர் பிரச்சினைக்குத் தீர்வுகாண காலக்கெடு நிர்ணயிப்பது பற்றி நான் விவாதிக்கவில்லை. எனினும், இந்தப் பிரச்சினையில் விரைந்து செயற்பட்டால்தான் இரு தரப்பிலும் நம்பிக்கை ஏற்படும். இல்லையெனில் காஷ்மீர் பிரச்சினையில் எவ்வித முன்னேற்றமும் ஏற்படாது.

பேச்சுக்கள் எவ்வளவு காலம் நீடிக்கும் என்பது பற்றி கூறுவதற்கில்லை. எனினும், பல ஆண்டு இழுத்தடிக்கும் என்று கருதவில்லை. 3 ஆண்டுகளுக்கு முன்பேகூட பிரச்சினைக்குத் தீர்வு கண்டுவிடலாம் - என்றார். (எ)

### ஈராக்கிய கைதிகள் துஷ்பிரயோகம்:

## பெண் சிப்பாய் மீதான விசாரணை தற்காலிகமாக இடைநிறுத்தம்

ஈராக்கிய சிறைக்கைதிகளைத் துஷ்பிரயோகம் செய்ததான குற்றச்சாட்டுத் தொடர்பாக அமெரிக்கப் பெண் சிப்பாய் லின்டி இங்லன்ட் என்பவர் தொடர்ந்தும் விசாரணைக்குட்படுத்தப்படவேண்டுமா என்பதைத் தீர்மானிப்பதற்காக அவர் மீதான விசாரணையை இராணுவ நீதிபதி தற்காலிகமாக நிறுத்தி வைத்துள்ளார்.

லின்டி இங்லன்ட் மீதான வழக்கில் மேலும் பல இராணுவ ஜெனரல்கள் மற்றும் அரசியல்வாதிகள் உட்பட ஏராளமான சாட்சிகளை விசாரிக்க அனுமதிக்கும்படி லின்டியின் வழக்கறிஞர்கள் கோரிக்கை விடுத்துள்ளதை அடுத்து இராணுவ விசாரணை அதிகாரி கேணல் டெனிஸ் ஆர்ன் இந்தக் கோரிக்யைப் பற்றித் தீர்மானிப்பதற்காக விசாரணையை ஒத்திவைத்தார். இந்த விசாரணையில் உப அதிபர் டிக்செனி மற்றும் பாதுகாப்புச் செயலாளர் ரொனால்ட் ரம்ஸ்பீல்ட் ஆகியோர் உட்பட பல முக்கியஸ்தர்கள் விசாரிக்கப்பட்ட வேண்டும் என லின்டியின் வழக்கறிஞர்கள் கூறியுள்ளனர்.

லின்டி இங்லன்ட் தனது உயர் அதிகாரிகளின் உத்தரவின்படியே நடந்து கொண்டுள்ளார் என்று வழக்கறிஞர்கள் கூறியுள்ளார்கள்.

இவ்வழக்கில் லின்டி மீதான குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டால் 38 வருடசிறைத்தண்டனை விதிக்கப்படலாம். லின்டி இங்லன்ட் ஈராக்கிய கைதிகளை முறைகேடாக நடத்த சதி ஆலோசனை நடத்தினார்; அவர்களைத் தாக்கினார்; ஒழுக்கக்கேடான விதத்தில் நடந்தார்; அசிங்கமான செயல்களில் ஈடுபட்டார்; உத்தரவுக்குக் கீழ்ப்படிய மறுத்தார்; பால் நிலை மறைக்கப்படாத படங்களை வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளமை தெரிந்ததே. (எ-ப)

## அமெரிக்கப் பிரஜாவுரிமையை துறக்கவிரும்பும் உலக வீரர்

டோக்கியோ,ஓக.9

முன்னாள் உலக சதுரங்க விளையாட்டு சம்பியனான டொபி பிங்சர் தனது அமெரிக்க பிரஜாவுரிமையைக் கைவிடப்போவதாக ஜப்பானிலுள்ள அமெரிக்க அதிகாரிக்கு அறிவித்துள்ளார்.

பிங்சர் கடந்த மாதம் ஜப்பானிலிருந்து காலாவதியான கடவுச்சீட்டைப் பயன்படுத்தி வெளியேறுவதற்கு முயற்சி செய்தார் என்ற குற்றச்சாட்டின் மீது தடுத்துவைக்கப்பட்டிருந்தார்.

அவர் ஏற்கனவே, ஜப்பானில் அடைக்கலம் கோரி விண்ணப்பித்துள்ளார். அவரை அமெரிக்காவுக்கு நாடுகடத்துவதற்கு எடுக்கப்படும் முயற்சிக்கு எதிராக பிங்சர் மேன்முறையீடு செய்துள்ளார். அவர் நாடுகடத்தப்படுவாரானால் அமெரிக்காவில் அபராதம் விதிக்கப்படலாம் அல்லது சிறைத்தண்டனைக்குள்ளாகவும் நேரலாம்.

1992ஆம் சர்வதேச தடையையும் மீறி யூகோஸ்லாவியாவில் சதுரங்கப்போட்டியொன்றில் கலந்துகொண்டமைக்காக அமெரிக்க அதிகாரிகள் அவர் மீது நடவடிக்கை எடுக்கக் காத்திருக்கிறார்கள். ஆனால், பத்து வருடங்களுக்கு மேலாக பிங்சர் அமெரிக்க அதிகாரிகளின் கண்களில் மண்ணைத் தூவிவிட்டு வெளிநாடுகளில் இருந்துவருகிறார்.

போதும் என்றால் போதும். இனிமேலும் அமெரிக்க பிரஜையாக நான் இருக்க விரும்பவில்லை என்று அவர் தனது சட்டத்தரணி மூலம் விடுத்த அறிக்கையில் தெரிவித்திருக்கிறார். (ப)

# முகாமைத்துவ பட்டதாரிகள் இன்று மறியல் போராட்டம்!

யாழ்ப்பாணம்,ஓக.9

பட்டதாரிகள் நியமனத்தில் யாழ். உயர் தேசிய கணக்கியல் வர்த்தக முகாமைத்துவ டிப்ளோமா பட்டதாரிகள் புறக்கணிக்கப்படுவதைக் கண்டித்து இன்று யாழ்.செயலகம் முன்பாக மறியல் போராட்டம் ஒன்று இடம்பெறவுள்ளது.

இன்று காலை 7மணி முதல் இந்தப் போராட்டம் இடம்பெறும்.

இந்தப் போராட்டத்திற்கு தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஆதரவு வழங்க முன்வந்துள்ளனர்.

தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான எஸ்.கஜேந்திரன், திருமதி பத்மினி சிதம்பரநாதன் ஆகியோர் யாழ்.உயர் தேசிய கணக்கியல் வர்த்தக முகாமைத்துவ பட்டதாரிகள் சங்கத்தினரை நேற்றுச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

மாணவரின் போராட்டத்துக்குப் பூரண ஆதரவை வழங்குவதாக நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

இன்றைய மறியல் போராட்டத்துக்கு உயர் தொழில்நுட்பக்கல்வி நிறுவகத்தின் மாணவர் ஒன்றியம் ஆதரவு தெரிவித்து அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இன்றைய போராட்டத்துக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் விரிவுரைகளைப் பகிஷ்கரித்து மறியலில் இணையவிருக்கின்றோம்.

அரசினால் 90ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம 30ஆம் திகதிவெளியிட்ட 46ஆம் இலக்க வர்த்தமானி அறிவுறுத்தலின்படி உயர் தேசிய கணக்கியல் வர்த்தக டிப்ளோமாவினை அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றின் வர்த்தக மாணியின் சாதாரண சித்திக்கு ஒப்பானது எனக் குறிப்பிட்டுள்ளது.

அதன் பிரகாரம், அத்துறைகளில் பட்டம் பெற்றவர்களைத் தற்போது வழங்கப்படும் நியமனங்களின்போது உள்வாங்கப்படவேண்டும். ஏற்கனவே இத்துறைகளில் பட்டம் பெற்றவர்களுக்கு அரச துறைகளில் பட்டதாரிகளாக நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

பல்கலைக்கழக அனுமதி கிடைக்கத் தவறிய பெரும் எண்ணிக்கையான மாணவர்கள் இவ்வாறான நான்கு வருட டிப்ளோமா கற்கை நெறியினை மேற்கொண்டு வருகிறார்கள்.

தற்போதைய அரசின் வேலைவாய்ப்பு வழங்கும் திட்டத்தில் இத்தகைய பட்டதாரிகளைப் புறக்கணிப்பதனால் அவர்களுடைய எதிர்காலம் கேள்விக்குறியாகியுள்ளது.

எனவே, வெளியேறிய பட்டதாரிகளினதும் எமது எதிர்காலத்தையும் கருத்திற்கொண்டு சம்பந்தப்பட்டவர்களைப் பட்டதரிகளுக்குள் இணைத்து அவர்களுக்கு நியமனம் வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என சம்பந்தப்பட்டவர்களைக் கேட்டுக்கொள்கின்றோம்.

இன்று மேற்கொள்ளப்படும் போராட்டம் வெற்றி அளிக்காத சந்தர்ப்பத்தில் அவர்களால் முன்னெடுக்கப்படும் அடுத்த கட்ட நடவடிக்கைளுக்கு நாம் பூரண ஒத்துழைப்பை வழங்குவோம். அத்துடன், இன்றைய போராட்டத்திற்கு யாழ். மாவட்டத்திலுள்ள பொது அமைப்புக்களும் தமது ஆதரவை வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றோம். இவ்வாறு அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ-5-7-74)




லண்டன் ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் ஆலய நம்பிக்கை நிதியத்தின் நிதி உதவியுடன் சாவகச்சேரி டச்சு வீதியில் நேற்று இலவச கணனிப் பயிற்சி நிலையம் திறந்து வைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் தமிழ் தகவல் தொழில்நுட்ப ஒழுங்கமைப்பு பணிப்பாளர் சபையைச் சேர்ந்த உ.ஜெயதீபன் நிலையத்தை நாடா வெட்டித் திறந்துவைப்பதை முதலாவது படத்திலும் சாவகச்சேரி வணிகர் கழகத் தலைவர் வைத்தியகலாநிதி சு.சி. அருளானந்தம் கணனி ஆழியை அமர்த்தி கணனியை இயக்கி வைப்பதை இரண்டாவது படத்திலும் காணலாம். யாழ். இந்துக் கல்லூரி ஆசிரியர், சி.கிருஷ்ணகுமார், லண்டன் பல்கலைக்கழக கணனித்துறை விரிவுரையாளர் கே.சிவாப்பிள்ளை ஆகியோர் முதலாவது படத்திலும் உள்ளனர். *(படங்கள்: சாவகச்சேரி செய்தியாளர்)*

## அபரக் கிரியைகள் பற்றிய இரு நூல்கள் வெளியீடு

வலிகாமம்தெற்கு,ஓக.9

காரைநகர் அமரர் பிரம்மஸ்ரீ க.மங்களேஸ்வரக் குருக்களின் ஞாபகார்த்தமாக சுன்னாகம் மயிலணி பிரம்மஸ்ரீ ச.சோமாஸ்கந்தக் குருக்கள் எழுதிய "அபரக் கிரியைகள்-சில விளக்கங்கள்", "சைவ அபரக்கிரியைகளின் சில விளக்கங்கள்" ஆகிய இரு நூல்களின் வெளியீட்டு வைபவம் நேற்று பிற்பகல் நல்லூர் சிவன் கோவில் மண்டபத்தில் இடம்பெற்றன.

அமரர் பிரம்மஸ்ரீ க.மங்களேஸ்வரக் குருக்களின் ஞாபகார்த்தமாக பிரம்மஸ்ரீ கலாநிதி க.வைத்தீஸ்வரக் குருக்கள் (ஈழத்துச் சிதம்பரம் காரைநகர்) நியந்த்ரியின் அனுசரணையுடன் இந்நூல்களை வெளியிட்டுள்ளார்.

பேராசிரியர் கலாநிதி ப.கோபாலகிருஷ்ண ஐயர் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில், நியந்த்ரியின் உபதலைவர் ந.சதாசிவஐயர் வரவேற்புரை நிகழ்த்தினார்.

நூலின் அறிமுக உரையை இணுவில் தர்ம சாஸ்தா குருகுல அதிபர் பிரம்மஸ்ரீ தா.மகாதேவக் குருக்கள் நிகழ்த்தினார்.

காரைநகர் கலாநிதி தியாகராஜா மத்திய மகாவித்தியாலய அதிபர் பண்டிதர் மு.க.வேலாயுதபிள்ளை சிறப்புரையாற்றினார்.

நூல் முதற் பிரதியை பிரம்மஸ்ரீ இ.சுப்பிரமணியக்குருக்கள் பெற்றுக்கொண்டார்.

ஏராளமான அந்தண சிவாச்சாரியார்களும் காரைநகரைச் சேர்ந்த மக்களும் விழாவுக்கு வருகைதந்திருந்தனர். (ஐ-152)

## பல்கலைக்கழகத்தில் இசை நாடகம்

யாழ்.பல்கலைக்கழக 'வெறுவெளி' அரங்கக்குழுவின் தயாரிப்பான 'காலனை வென்ற காரிகை' என்னும் இசை நாடகம் நாளைமறுதினம் புதன்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் இடம்பெறவுள்ளது.

நா.விமலநாதன் இந்த நாடகத்தை நெறியாள்கை செய்துள்ளார். (ஐ)

## எழுச்சிப் பேரவை செயலக திறப்பு விழா

சாவகச்சேரி,ஓக.9

தென்மராட்சிக் கோட்ட எழுச்சிப் பேரவையின் செயலகத் திறப்பு விழா இன்று திங்கட்கிழமை காலை 10மணிக்கு சாவகச்சேரி அரச மருத்துவமனைக்கு முன்பாக அமைந்துள்ள கந்தையா வீதியில் திறந்துவைக்கப்படவுள்ளது. இந்நிகழ்வில் பொதுச் சுடரேற்றல், தேசியக் கொடி ஏற்றல், சிறப்புரைகள் என்பன இடம்பெற உள்ளன. (ஐ-30-31-204)

உதயன்

## ஆயிரம் மலர்கள் மலரட்டுமே!

தமிழ்மக்களின் வாழிடங்களை உயர்பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் இலங்கை அரச படைகள் ஆக்கிரமித்திருப்பதற்கு எதிராகச் சட்டரீதியாக வழக்குப் போட்டு நிவாரணம் பெறுவதற்கு வாய்ப்பு இருப்பது குறித்து நீண்ட பல காலமாக இப்பத்தியில் வலியுறுத்திவந்தோம்.

காலதாமதத்தின் பின்னர் ஒருவாறு வழக்குகள் போடப்பட்டன. இப்போது முதலாவது வழக்கு இறுதிக்கட்டத்துக்கு வந்துவிட்டது. எனினும், இப்பிரச்சினைக்கு ஒட்டுமொத்த தீர்வு இந்த வழக்கில் கிடைக்காமல் செய்து - ஆக, அந்த வழக்கைத் தாக்கல் செய்த மனுதாரர் ஒருவருக்கு மாத்திரம் நிவாரணம் வழங்குவதற்கு இணங்கியதன மூலம் - இச்சர்ச்சைக்கு இப்போதைக்குத் தற்காலிகமாக இடைநிறுத்தல்புள்ளி வைத்திருக்கின்றது அரசுத் தரப்பு.

தீர்ப்பு நிலையை எட்டியுள்ள முதலாவது வழக்கில் மனுதாரரான பன்னாலைவாசி தமது வீட்டுக்குத் திரும்பிச் செல்லலாம். அதற்கு எமக்கு ஆட்சேபனை இல்லை என்று நீதிமன்றத்தில் தெரிவித்திருக்கின்றது படைத்தரப்பு.

"படையினருக்கு எந்த ஆபத்தும் இல்லை என்றால் அவர் தமது வீட்டுக்குச் செல்வதற்கு எமக்கு ஆட்சேபனை ஏதும் இல்லை. ஆனால், அவரது பாதுகாப்புக்கு அவர்தான் பொறுப்பு" - என்றும் படைத்தரப்பு நீதிமன்றத்தில் பொடிவைத்துகருத்து வெளியிட்டிருக்கின்றது.

பொதுமக்களின் வீடு, வாசல்களைப் படைத்தரப்பு சட்டவிரோதமாக ஆக்கிரமித்திருப்பதை ஆட்சேபித்து நீதிமன்றத்தில் நிவாரணம் கோரினால், அந்த வழக்கைத் தாக்கல்செய்த மனுதாரர் தமது வீட்டுக்குப் போவதற்கு ஆட்சேபனை ஏதும் இல்லை என்று நீதிமன்றத்தில் தெரிவித்து, இச்சர்ச்சை தொடர்பான சட்டவிவாதம் ஒன்றையும் அது சம்பந்தமாக உயர்நீதிமன்றத்தின் சட்டத்தீர்ப்பு ஒன்றையும் கிட்டாமல் நாசூக்காகத் தவிர்க்கப்பண்ணி விட்டது படைத்தரப்பு.

ஆனாலும், இந்த வழக்குத் தீர்ப்பைக் காட்டி, இது போனற ஏனைய வழக்குகளிலும் நிவாரணம் அளிக்கப்பட வேண்டும் என்று கோரக்கூடாது எனத் தீர்ப்பில் குறிப்பிடும்படி அரசுத் தரப்பினாலும் இராணுவத் தரப்பினாலும் விடுக்கப்பட்ட கோரிக்கையை பிரதம நீதியரசர் தலைமையிலான மூன்று நீதியரசர்களைக் கொண்ட ஆயம் அடியோடு நிராகரித்திருப்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

'இதுபோன்ற ஒவ்வொரு வழக்கும் அதனதன் முக்கியத்துவத்திற்கேற்ப (on its own merit) தனித்தனியாக விசாரிக்கப்படும். இந்தத் தீர்ப்பு அடுத்த வழக்குக்கு வழிகாட்டியாகவோ அல்லது அதைக் கட்டுப்படுத்துவதாகவோ அமையாது' என்றும் திட்டவட்டமாகத் தமது தீர்ப்பில் குறிப்பிட்டிருக்கின்றனர் நீதியரசர்கள்.

இதுபோன்று ஆக, மேலும் இரண்டு வழக்குகளே உயர்நீதிமன்றத்தில் தற்போது நிலுவையில் உள்ளன.

படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள மாவிட்டபுரத்தைச் சேர்ந்தவரான மாவைசேனாதிராஜா எம்.பி., கொலலங்கலட்டி, கிளானையைச் சேர்ந்த வி.இராஜதுரை ஆகியோரே அந்த இரு வழக்குகளினதும் மனுதாரர்கள் ஆவர். இவர்களது இந்த வழக்குகள் ஒக்ரோபர் 28 ஆம திகதயன்று உயர்நீதிமன்றத்தில் விசாரணைக்கு வரவிருக்கின்றன.

தமிழர் தாயகத்தைப் பலவந்தமாகப் பிடுங்கி, அங்கிருநத மக்களை அகதிகளாகக் துரத்திவிட்டு, அவர்களின் வீடு, வாசல்கள், உடைமைகள், நிலபுலன்களைக் கபளீகரம் செய்துநிற்கும் அரசுப் படைகள், தமது ஆக்கிரமப்புக்கு நீதிமன்றத்தில் சட்டரீதியான நியாயத்தைக் காட்ட முடியாமல் திண்டாடுகின்றன.

இந்தநிலையில், ஏனைய இரண்டு வழக்குகளிலும் கூட, மனுதாரர்கள் தத்தமது வீடுகளுக்குச்சென்று மீளக்குடியேறுவதற்குத் தமக்கு ஆட்சேபனை இல்லை என்று நீதிமன்றத்தில் அறிவித்து இணக்கத் தீர்ப்பு ஒன்றை ஏற்படுத்துவதன் மூலம் இந்த ஆக்கிரமிப்பு நடவடிக்கைக்கு எதிராக நிரந்தரச் சட்டத்தீர்ப்பு ஒன்று வெளிவராமல் அரசுத் தரப்புப் பார்த்துக்கொள்ள முயலலாம்; முயலும்.

ஆக, உயர்பாதுகாப்பு வலயம் என்ற பெயரிலான ஆக்கிரமிப்புக்கு எதிராக மூன்று வழக்குகள் போடப்பட்டன. மூன்று வழக்கினதும் மனுதாரர்களை மீளக்குடியமர ஆட்சேபனை இல்லை என்று அரசுத் தரப்பில் கூறப்பட்டதை ஏற்று உயர்நீதிமன்று வழக்கு விவாதத்தை அத்துடன் இணக்கமாகத் தீர்த்து வைத்துவிட்டால், இந்த ஆக்கிரமிப்பால் வீடு, வாசல்கள், வாழிடங்களை இழந்து பரிதவிக்கும் லட்சக்கணக்கான தமிழர்களின் பிரச்சினைக்குத் தீர்வுவந்துவிடுமா? அவர்களுக்குத் தீர்வுதான் என்ன?

முதலாவது வழக்கில் இணக்கமாக விடயத்தைத் தீர்த்து வைக்கும் நீதிமன்றத்தின் பாதையில் பார்த்தால் இந்த விவகாரத்தில் பாதிக்கப்பட்ட அனைத்து மக்களுக்கும் சாதகமான - நியாயமான - நிரந்தரத் தீர்வு ஒன்று கிட்டவேண்டுமானால் ஒரேயொரு வழிதான் உள்ளது.

'ஆயிரம் மலர்கள் மலரட்டுமே!' என்பது போல உயர்பாதுகாப்பு வலய ஆக்கிரமிப்பால் வீடு, வாசல்களை இழந்து பரிதவிக்கும் பல்லாயிரக்கணக்கானோர் தமக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு எதிராக ஒரே சமயத்தில் நீதிமன்றத்திடம் செல்வதுதான் ஒரேவழி.

அப்போது வேறுவழியின்றி அனைத்து வழக்குகளுக்கும் தீர்வுதரக்கூடிய ஒரு திட்டவட்டமான உத்தரவை வழங்குவதைத் தவிர வேறு வழியில்லை என்ற நிலைக்கு நீதித் தேவதை தள்ளப்படுவாள் என்பது உறுதி.

# பயிற்சி முடித்த கல்விக்கல்லூரி ஆசிரியரை வடக்கு-கிழக்கில் நியமனம் செய்யவேண்டும்

### தமிழர் ஆசிரியர் சங்கம் கோரிக்கை

திருகோணமலை,ஓக.9

கல்வியியற் கல்லூரிகளில் பயிற்சியை நிறைவு செய்தவர்களுக்கு ஆசிரிய நியமனம் வழங்கும்போது அவர்களை வடக்கு - கிழக்கு மற்றும் மலையகப் பாடசாலைகளில் நியமிக்க வேண்டும் என்று இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் கோரியுள்ளது.

இன்றும் நாளையும் யாழ்ப்பாணம், வவுனியா, மட்டக்களப்பு மற்றும் ஸ்ரீபாதக் கல்லூரி ஆகிய கல்வியியற் கல்லூரிகளில் பயிற்சியை நிறைவுசெய்தவர்களுக்கு நேர்முகப் பரீட்சைகள் நடைபெறவுள்ளன. இந்நேர்முகப் பரீட்சையில் தெரிவுசெய்யப்படுபவர்களுக்கே வடக்கு - கிழக்கு மற்றும் மலையகப் பாடசாலைகளுக்கு நியமனம் வழங்கவேண்டும் என்று கல்வி அமைச்சின் செயலாளருக்கு மேற்படி சங்கம் கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளது.

வடக்கு - கிழக்கில் தமிழ் ஆசிரியர்களுக்கு அநேக வெற்றிடங்கள் உள்ளன. குறிப்பாக, 6 ஆயிரம் ஆசிரியர்களுக்கான வெற்றிடங்களும், மலையகத்தில் 3 ஆயிரம் ஆசிரியர்களுக்கான வெற்றிடங்களும் உள்ளன. இவ்வாறான நிலையில், மேற்படி நியமனங்களை வேறு மாகாணப் பாடசாலைகளுக்கு வழங்காமல் வெற்றிடங்கள் உள்ள பாடசாலைகளுக்கே வழங்கவேண்டும் என்று அந்தக் கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

பயிற்சியின் நிறைவில் இவர்களிடம் இருந்து பணியாற்ற விரும்பும் பிரதேசம் உட்படப் பல விவரங்களைப் படிவம் ஒனறில் பெற்றுக்கொண்டபோதிலும், தற்பொழுது அவர்களின் விருப்பத்துக்கு மாறாக வேறு பிரதேசங்களுக்கு நியமனம் வழங்க முனைவதைத் தமது சங்கம் வன்மையாகக் கண்டிக்கிறது - என்று அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.(எ-10)

## நடுநிலைத் தீர்ப்பாளர் நியமனம்

வலி.மேற்கு,ஓக.9

நீதி அமைச்சினால் பயிற்றப்பட்ட நடுநிலைத் தீர்ப்பாளராக யாழ்ப்பாண வர்த்தக தொழில்துறை மன்றத்தின் தொழில் முயற்சி அபிவிருத்தியாளர் எஸ்ஜே. செலவராஜா அதிகார நியமனம் பெற்றுள்ளார்.

சகல வர்த்தக நிறுவனங்கள், தொழில துறை நிறுவனங்கள், கூட்டுறவு நிறுவனங்கள், பொதுத்துறை நிறுவனங்கள் என்பனவற்றில் ஏற்படும் உள்வாரி, வெளிவாரிப் பிணக்குகள், சச்சரவுகள் என்பவற்றினை நடுநிலைத் தீர்ப்புக்குட்படுத்தல் என்பவற்றுடன் தனிமனிதர்களுக்கிடையிலான பிணக்குகள், சச்சரவுகள் யாவற்றையும் தீர்த்துவைப்பது இவரது பணி எனக்கூறப்பட்டது. (எ-175)

## பெறுபேறுகள் வெளியாகின

எழுதுவினைஞர்களைத் தெரிவுசெயவதற்காக நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் சித்தி அடைந்தவர்களுக்கான பரீட்சைப் பெறுபேறுகள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னா வடக்கு - கிழக்கு மாகாண சபையினால் நடத்தப்பட்ட பரீட்சையின் பெறுபேறுகளே தற்போது வடக்கு - கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. (எ-86)

# வலி.மேற்கில் நான்கு கிராமங்கள் கெயர் உதவியுடன் அபிவிருத்தி

வலி.மேற்கு,ஓக.9

வலிகாமம் மேற்குப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள பல்லசுட்டி, பனிப்புலம், மூளாய், அராலி தெற்கு ஆகிய கிராமங்கள் 'கெயர்' நிறுவனத்தினரால் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

இதற்கான ஆரம்பக்கட்ட நடவடிக்கைகளைப் பிரதேச செயலக திட்டமிடல் பகுதியினர் மேற்கொண்டுள்ளனர்.

இந்தக் கிராமங்களைச் சேர்ந்த மக்களின் பொருளாதார, விவசாய சமூக மட்ட மேம்பாடுகளுக்கு கெயர் நிறுவனத்தினர் பல அபிவிருததித் திட்டஙகளை மேற்கொள்ளவுள்ளன.

கெயர் நிறுவனத்தினராலும், பிரதேச செயலகத் திட்டமிடல் பகுதியினராலும் இந்தக் கிராமங்களின் தேவை மதிப்பீடு மிக விரைவில் மேற்கொள்ளப்படவுள்ளது.

வலி.மேற்குப் பிரதேச செயலர் சீ.ஏ. மோகன்ராஸ் இந்த நான்கு கிராமமக்களின் அடிப்படை வசதிகள் குறித்தும் மக்களின் தேவைகள் பற்றியும் மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தித் திட்டங்கள் பற்றியும் 'கெயர்' நிறுவனத்தின் அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டுவந்ததை அடுத்து இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

(எ-175)

# பெருந்திருவிழாச் செய்திகள்

யாழ்ப்பாணம்,ஓக.9

வரலாற்றுப் பிரசித்திபெற்ற தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்கையம்மன் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா எதிர்வரும் 17ஆம் திகதி முற்பகல் 11மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

இந்தப் பெருந்திருவிழாவில் எதிர்வரும் 26ஆம் திகதி பிற்பகல் 3மணிக்குச் சப்பரமும் 27ஆம் திகதி காலை 9மணிக்குத் தேர்த்திருவிழாவும் 28ஆம் திகதி காலை 8.30 மணிக்கு துர்க்கா புஷ்கரணி தீர்த்தத் தடாகத்தில் தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

திருவிழாக் காலங்களில் ஆலயத்துக்கு வரும் பெண்களும் குழந்தைகளும் நகைகள அணிந்து வருவதை இயன்றவரை குறைத்துக் கொள்வதுடன், சைவத்தமிழ் பண்பாட்டுக்கு மாறாக உடைகள் அணிந்து வருவதைத் தவிர்த்துக்கொள்ளவேண்டுமென அடியவர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

ஆலயத்துக்குவரும் அடியவர்களின் நலன்கருதி, ஆலயச் சுற்றாடலில் குடிதண்ணீர் மற்றும் முதலுதவி வசதிகள் செய்யப்படவுள்ளதுடன் - ஒழுங்குமுறைகளை நடைமுறைப்படுத்தவும் அடியார்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்யவும் எனத் தொண்டர்கள் பணியில் ஈடுபடுத்தப்படுவர்.

அத்துடன், விசேடப் போக்குவரத்துச் சேவைகளை வடபிராந்தியப் போக்குவரத்துச் சபையினர் நடத்தவுள்ளனர்.(எ-10)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஓக.9

வரலாற்றுச் சிறப்புமிக்க தொண்டைமானாறு ஸ்ரீசெல்வச் சந்நிதி ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழா எதிர்வரும் 16ஆம் திகதி திங்கட்கிழமை காலை 7.45 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 14தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 19ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8மணிக்கும் மாலை 4மணிக்கும் விநாயகர் வேலவர் எழுந்தருள்வர்.

பெருந்திருவிழாவில் பூங்காவனம் 24ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9மணிக்கும் கைலாச வாகனம் 25ஆம் திகதி புதன்கிழமை காலை 8மணிக்கும் -

சப்பரம் 28ஆம் திகதி சனிக்கிழமை மாலை 6மணிக்கும் தேர்த்திருவிழா 29ஆம திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8மணிககும் தீர்த்தத் திருவிழா 30ஆம் திகதி திங்கட்கிழமை காலை 7மணிக்கும் நடைபெறவுள்ளன.

தினமும் காலைத்திருவிழா 8மணிக்கும மாலைத் திருவிழா மாலை 4.30 மணிக்கும் நடைபெறும்.

உற்சவ தினங்களிலும் தேர்த்திருவிழா மற்றும் தீர்த்தத் திருவிழா முதலிய முக்கிய தினங்களிலும் வட பிராந்தியப் போக்குவரத்துச் சபையின் பஸ்களும் தனியார் மினிபஸ்களும் சேவையில் ஈடுபடும்.

ஆலயத்துக்கு வருகைதரும் அடியவர்களுக்கு அன்னதான வசதிகளும் செய்யப்பட்டுள்ளன.

(எ-7)

# மாவட்ட முன்பள்ளி மாணவரிடையில் அடுத்தமாதம் ஆக்கப்பொருள் கண்காட்சி

### கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் நடக்கும்

யாழ்ப்பாணம்,ஓக.9

யாழ்.மாவட்டத்தில் உள்ள முன்பள்ளி மாணவர்கள், ஆசிரியர்களுக்கிடையிலான மாபெரும் கண்காட்சி ஒன்று அடுத்த மாதம் 4ஆம், 5ஆம் திகதிகளில் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் நடைபெறவுள்ளது.

யாழ்.கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்தக் கண்காட்சியில் கற்றல், கற்பித்தல் தொடர்பான ஆக்கங்கள் காட்சிப்படுத்தப்படவுள்ளன.

யாழ்.மாவட்டத்திலுள்ள அனைத்து முன்பள்ளிகளும் கலந்துகொள்ளவுள்ள இந்தக் கண்காட்சிக்கு முன்பள்ளி ஆசிரியர்கள், மாணவர்களை தயார்செய்து கொள்ளுமாறு யாழ்.வலயக் கல்வி முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி யோகராசா லோகேஸ்வரி வேண்டியுள்ளார்.

(எ-13)

## ஆளணி அதிகரிப்பு

வடமராட்சி,ஓக.9

மந்திகை அரசினர் வைத்தியசாலையில் மேற்பார்வையாளர் பதவிக்கான ஆளணி அதிகரிக்கப்பட்டுள்ளது.

இரண்டுபேர் கொண்ட ஆளணி நான்காக மாற்றப்பட்டதைத் தொடர்ந்து தெல்லிப்பழை மாவட்ட அரசினர் வைத்தியசாலையில் மேற்பார்வையாளராகப் பணியாற்றிய எஸ்.இராமச்சந்திரன் மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலைக்கு இடமாற்றப்பட்டுள்ளார்.

(எ-173)

### நாளை

ஆடி 26
செவ்வாய்க்கிழமை
(10.08.2004)
திதி : தசமி
முன்னிரவு 11.09 வரை.
நட்சத்திரம் : ரோகிணி
முன்னிரவு 9.38 வரை.
சுபநேரம்: 10.34 - 12.04
ராகுகாலம்: 3.04 - 4.34
(பழைய நேரப்படி)

# முகமாலையில் தவறவிடப்பட்டவை மினிபஸ் சங்க அலுவலகத்தில்

### உரியவர்களை வந்து பெறுமாறு அறிவுறுத்து

தென்மராட்சி,ஓக.9

யாழ்ப்பாணம் - முகமாலை சேவையில் ஈடுபட்ட மினிபஸ்களில் தவறவிடப்பட்ட தங்கநகை, பயணப்பொதிகள, அடையாள அட்டைகள் என்பன சாவகச்சேரியில் உள்ள தென்மராட்சி தனியார் சிற்றூர்திச் சேவைகள் சங்க அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இவற்றினைத் தவறவிட்டவர்கள் பிரதி வியாழக்கிழமைகளில் பிப. 3 மணி தொடக்கம் 5 மணிவரை வந்து பெற்றுக்கொள்ளலாமென அறிவிக்கப்பட்டுள்ளது.

**தேசிய அடையாள அட்டைகள்**

▲ இரத்தினம் ஜெயநேசன் - கொலனி, நவக்கிரி, புத்தூர்.

▲ மரியதாசன் ஜெனற் பபியுலா திருக்குடும்ப கன்னியர்மடம் - பெரிய பன்றிவிரிச்சான், மடுக்கோவில்.

▲ தவராசா ரேணுகா - கற்குளி ஒழுங்கை, முஸ்லிம் கல்லூரி வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம்.

▲ அழகர்சாமி நாகேந்திரம் - மானிப்பாய் வீதி, சோனகதெரு, யாழ்ப்பாணம்.

**விசேட அடையாள அட்டை**

▲ இரத்தினேஸ்வரன் பிரதீபன் - வீரபத்திரர் கோவிலடி, காங்கேசன்துறை.

**அஞ்சல் அறிமுக அட்டை**

▲ கிருஸ்ணசாமி செல்வச்சந்திரன் உப்புக்குளம் வடக்கு, மன்னார்.

**வங்கிக் கணக்குப் புத்தகம்**

▲ என்.ரவியுடீன் - 169/3, அம்புகம ரோட், நாவலப்பிட்டி - ஹற்றன் நஷனல் வங்கி - யாழ்ப்பாணம்.

(எ-117)

### உதயவாக்கு

ஒருவனின் வெற்றி தன்னுள் உள்ள திறமைகளை இனங்காணும் போதுதான் வெளிவருகிறது.

# உசன் மக்கள் நடத்தும் மறியலுக்கு தேசிய விழிப்புணர்வுக் கழகம் ஆதரவு

யாழ்ப்பாணம்,ஓக9

உசன்பகுதி மக்கள் தமது சொந்த இடங்களில் மீளக் குடியமர அனுமதிக்குமாறு கோரி இன்று திங்கட்கிழமை தென்மராட்சி பிரதேச செயலகம் முன்பாக நடத்தவுள்ள மறியல் போராட்டத்துக்குத் தமிழ்த் தேசிய விழிப்புணர்வுக் கழகம் பூரண ஆதரவை வழங்கும்.

இதுவிடயமாக மேற்படி கழகம், பத்திரிகைச் செய்திக் குறிப்பு ஒன்றையும் விடுத்துள்ளது.

அந்தச் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

நீண்டகால யுத்தத்தின் விளைவாக ஸ்ரீலங்கா ஆக்கிரமிப்பு படைகளின் பல்வேறுபட்ட துன்புறுத்தல்களினால் பாதிக்கப்பட்டுப் பல்லாயிரக்கணக்கான மக்கள் இன்றும் அகதி வாழ்க்கையையே வாழ்ந்துவருகின்றனர்.

அத்துடன், இயல்பு வாழ்க்கை மீளக்குடியமர்வை வலியுறுத்தி பல எழுச்சி நிகழ்வுகள் மூலமும், எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் மூலமும் தமிழ் மக்கள் தமது உரிமைகளைப் பெற்றுக்கொள்ளவும் போராடி வருகின்றனர்.

இந்தச் சந்தர்ப்பத்தில் ஸ்ரீலங்காப் படைகளால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள தாயகப் பூமியில் மீளக்குடியமர அனுமதிக்கக்கோரி தாக்கல்செய்யப்பட்ட மனுதொடர்பாக மனுவைத் தாக்கல்செய்தவர்கள் மட்டுமே மீளக்குடியமரலாம் என ஸ்ரீலங்காவின் உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. இது பாரம்பரிய தாயகப் பூமியில் தமிழர்கள் சுதந்திரமாக வசிக்க ஸ்ரீலங்கா அரசு அனுமதிக்கமாட்டாது என்பதையே தெளிவாகக் காட்டுகின்றது.

அனைத்து மக்களும் இவ்விடயம் தொடர்பாகச் சிந்தித்து மீள்குடியமர்வை வலியுறுத்தி ஸ்ரீலங்கா எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபடவேண்டும்.

இன்று உசன் பகுதி மக்கள் நடத்தும் போராட்டத்தில் மீள்குடியமர்விற்காகக் காத்திருக்கும் அனைத்து மக்களும், ஒட்டுமொத்த தமிழ்ச் சமூகமும் கலந்துகொள்ளவேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றோம் - என்று அதில் உள்ளது. (எ-204)



நாட்டுப்பற்றாளர் ஐ.நடேசனின் நினைவுநாள் நிகழ்வுகள் நேற்றுமுன்தினம் வவுனியாவில் நடைபெற்றன. இந்நிகழ்வில் ஊடகவியலாளர் க.ரவீந்திரன், அமரர் நடேசனின் மனைவியிடம் ஒரு தொகைப் பணத்தை அன்பளிப்பாக வழங்குவதைப் படத்தில் காணலாம். *(படம்: வவுனியாச் செய்தியாளர்)*

# தென்மராட்சியில் இரு பிரதான வீதிகளை புனரமைக்கக்கோரி பலருக்கும் மகஜர்கள்

## கச்சாய் பொது அமைப்புகள் அனுப்பிவைத்தன

கொடிகாமம்,ஓக.9

சாவகச்சேரி - கச்சாய் வீதியையும் கொடிகாமம் - கச்சாய் வீதியையும் புனரமைக்குமாறுகோரி கச்சாய் பிரதேச பொது அமைப்புக்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

இது தொடர்பான மகஜர்கள் பிரதேச செயலர், பிரதேச சபையின் செயலாளர் மற்றும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பிரதம பொறியியலாளர் ஆகியோருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

அந்த மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

இற்றைக்கு இரு தசாப்தகாலமாக மேற்படி இரு வீதிகளும் திருத்தப்படாது பாரிய குண்டுங்குழியுமாகக் காணப் படுகின்றன. இதனால் பாடசாலை மாணவர் களும் விவசாயிகள், பொதுமக்கள் ஆகியோரும் பெரும் கஷ்டங்களை அனுபவித்து வருகின்றனர்.

இதனால், குறித்த நேரத்திற்குக் குறிப்பிட்ட இடத்திற்குச் செல்லமுடியாதுள்ளதுடன், வாகனங்களின் போக்குவரத்தால் வீதி புகை மண்டலமாகக் காணப்படுகிறது. இதனால், போக்குவரத்துச் செய்யமுடியாது பாடசாலை மாணவர்கள் பல இன்னல்களை எதிர்நோக்குகின்றனர்.

சாவகச்சேரி - கச்சாய் வீதி கிளாலிக்கும் கொடிகாமம் - கச்சாய் வீதி கச்சாய் துறைமுகத்திற்கும் செல்கின்றன. சாவகச்சேரி - கச்சாய் வீதி சாவகச்சேரியில் இருந்து 2 கிலோமீற்றர் தூரம் திருத்தப்பட்டு ஏனைய 7 கிலோமீற்றர் நீளமான கிளாலி வரையான வீதி புனரமைக்கப்படாமலுள்ளது.

இதேபோல் கொடிகாமம் - கச்சாய் வீதி கொடிகாமத்தில் இருந்து ஒரு கிலோமீற்றர் தூரம் திருத்தப்பட்டு ஏனைய 6 கிலோமீற்றர் தூரம் திருத்தப்படாமலுள்ளது.

மேற்படி இரு வீதிகளைப் பயன்படுத்தியே சாவகச்சேரிச் சந்தைக்கும் கொடிகாமம் சந்தைக்கும் விவசாயிகள் செல்வதுடன், சாவகச்சேரி இந்துக்கல்லூரி, டிறிபேர்க் கல்லூரி, கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயம் ஆகியவற்றுக்கு மாணவர்களும் சென்று வருகின்றனர். அத்துடன், இவ்வீதியில் கச்சாய் அரசினர் தமிழ் வித்தியாலயம், கச்சாய் றோ.க.பாடசாலை, சரஸ்வதி அ.த.க.பாடசாலை என்பனவும் உள்ளன.

கச்சாய், பாலாவி, அல்லாரை, தவசிகுளம், கெற்போலி, விடத்தற்பளை ஆகிய பகுதி மக்களும் இந்த வீதிகளையே பயன்படுத்தி வருகின்றனர். மேற்படி கிராமங்கள் அதிகமாக விவசாயிகள் வசிக்கும் பிரதேசங்களாகும். எனவே, விவசாயப் பொருள்களைச் சந்தைப்படுத்துவதற்கும் இந்த வீதிகளே பயன்படுத்தப்பட்டு வருகின்றன - என்று அதில் உள்ளது. (எ-74)


## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

| | | |
|---|---|---|
| சீட்டிழுப்பு வாரம் | 601 | டிக்கட்டின் நிறம் - சிவப்பு |
| திகதி | 06-08-2004 | செல்லுபடியாகும் தொடர் இல. 5820351-5835274 |

வெற்றி இலக்கங்கள் 03 19 23 42

லக்கினம் மீனம்

ஜக்பொட் பரிசு ரூபா.61,95,525/- வெல்லப்படவில்லை. இந்த செவ்வாய்க்கிழமை ஜக்பொட் ரூபா. 65,65,600/-

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரூ.) | மொத்தப் பரிசுத் தொகை(ரூ.) |
|---|---|---|---|
| 1.இல | 3,31,711 | 10/- | 33,17,110/- |
| 2.இலக்கங்கள் | 30,335 | 20/- | 6,06,700/- |
| 1.இல + லக்கினம் | 29,911 | 30/- | 8,97,330/- |
| 2.இல + லக்கினம் | 2,786 | 100/- | 2,78,600/- |
| 3.இலக்கங்கள் | 799 | 500/- | 3,99,500/- |
| 3.இல + லக்கினம் | 80 | 5,000/- | 4,00,000/- |
| 4.இலக்கங்கள் | 04 | 1,00,000/- | 4,00,000/- |
| 4.இல + லக்கினம் | - | 61,95,525/- | - |
| மொத்தம் | 3,95,626 | - | 62,99,240/- |

மொத்த பரிசுத் தொகை ரூபா. 62,99,240/-

தொடர் இல. 4858809 க்கு மேற்பட்ட நீல நிற டிக்கட்டுக்கள் 2004 ஆகஸ்ட் 10ம் திகதி செவ்வாய்க்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்

வளமான வாழ்வுக்கு

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33 சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03.

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

5833671-0-53
5820351-5-53
5827517-3-75
5827962-5-17
5829716-8-83


## மரண அறிவித்தல்

### வீரவாகு தில்லைவனம்



தாவடி தெற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட வீரவாகு தில்லைவனம் 07.08.2004 சனிக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற செ.வீரவாகு அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற தங்கம்மா, இராசம்மா, சிவகங்கை ஆகியோரின் அன்புச் சகோதரியும் செல்வராசா, காலஞ்சென்ற சண்முகநாதன் மற்றும் இரத்தினமணி ஆகியோரின் தாயாரும் காலஞ்சென்ற மகேந்திரம் மற்றும் திருமதி சண்முகநாதன் பரஞ்சோதி (ஹொலண்ட்), கனகாம்பிகை ஆகியோரின் மாமியாரும் பாஸ்கரன், பிரபாகரன், கிருபாணி, சுதாகரன (சுவிஸ்), வசிகரன், ஞானகாந்தன், பரமேஸ்வரன் (ஹொலண்ட), தயாபரன் (ஹொலண்ட்), ரங்கநாதன் (ஹொலண்ட்), சத்தியநாதன் (ஹொலண்ட்) ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (08.08.2004) ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

*தாவடி தெற்கு,*
*கொக்குவில்.*

தகவல்:
திருமதி இ.மகேந்திரன் (மகள்)
பொறுப்பாளர், அரச சிறுவர் இல்லம்.

(35049) (14-16-24)

## காணி கொள்வனவுக்கு நிதியுதவி

கைதடி,ஓக.9

கைதடி மத்தி வள்மதி சனசமூக நிலையத்தின் மைதானத்திற்கான காணி ஒன்றைக் கொள்வனவு செய்வதற்கென நிலையத்தின் அங்கத்தவரும், தற்போது சுவிஸில் வசிப்பவருமான க.தர்மலிங்கம் தொண்ணூறாயிரம் ரூபாவை அண்மையில் நிலைய நிர்வாகிகளிடம் நேரடியாக அன்பளிப்புச் செய்துள்ளார் என நிலையத்தின் செயலாளர் தெரிவித்துள்ளார். (எ-75)

## மாநகரசபை நடத்தும் கட்டுரைப் போட்டி

யாழ்ப்பாணம்,ஓக.9

உள்ளூராட்சி வாரத்தையொட்டி மாநகர சபையினர் மாணவர்களுக்கிடையில் கட்டுரைப் போட்டியை நடத்தவுள்ளனர்.

எதிர்வரும் 14 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ள இக்கட்டுரைப்போட்டியில் மாநகர சபைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள பாடசாலை மாணவர்கள் பங்குபற்றலாம்.

கீழ்ப்பிரிவு, மேற்பிரிவு என இரண்டு பிரிவுகளாகப் போட்டிகள் நடைபெறும். கீழ்ப்பிரிவில் தரம் 7,8,9 மாணவர்களும் மேற்பிரிவில் தரம் 10,11,12 ஆகிய உயர் வகுப்பு மாணவர்களும் உள்ளடக்கப்படுவர் என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-13)

## அறநெறி மாணவருக்கு பரிசில் வழங்கப்பட்டது

தென்மராட்சி,ஓக.9

சாவகச்சேரி, டச்சு வீதி ஸ்ரீபழனி ஆண்டவர் ஆலய அலங்கார உற்சவத்தை முன்னிட்டு அறநெறிப் பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்பட்டன.

ஆலய பரிபாலனசபைத் தலைவர் வை.இராசரத்தினம் தலைமையில் ஆலய மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வில் பரிசில்கள் வழங்கப்பட்டன எனத் தெரிவிக்கப்பட்டன. (எ-117)


## வெற்றிடங்கள்

27 வருடங்களாக இயந்திரத் தயாரிப்பில் முன்னோடியாக விளங்கும் எமது ஸ்தாபனத்தில் பின்வரும் வெற்றிடங்கள் நிரப்பப்படவுள்ளன.

1. உருக்கிணைப்பாளர்கள் (Arc Welders & Tig Welders)
2. பொருத்துநர்கள் (Fitters)
3. பப்ரிகேட்டர்ஸ் (Fabricators)
4. தகட்டு வேலையாள்கள் (Sheet Metal Workers)

மேற்படி வெற்றிடங்களுக்கு சுயமாகச் சிந்தித்துச் செயற்படும் ஆற்றலுள்ள, உள்நாட்டு அல்லது வெளிநாட்டு அனுபவமுள்ள தரமாக வேலைசெய்வதில் ஆர்வமுள்ள தொழிலாளர்கள் தேவை.

கல்வித் தகைமை:
தேசிய தொழில் பயிலுநர் சபை சான்றிதழ்கள்/தேசிய தொழில்நுட்பக் கல்லூரி சான்றிதழ்கள் பெற்றிருந்தால் நலம்.

அனுபவம்:
குறைந்தது 5 வருடங்கள்.
திறமைக்கேற்ற சம்பளம் வழங்கப்படும்.

மேற்படி வெற்றிடங்களுக்கு நற்சாட்சி விவரம் கோரக்கூடிய உறவினர் அல்லாத இருவரின் பெயர், விலாசத்துடன் விண்ணப்பிக்கவும்.

நிர்வாக இயக்குநர்,
புறோமோட்டர்ஸ் எஞ்ஜினியரிங் கம்பனி லிமிடெட்,
844, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

(F-3666)(34-13-19-26)



## சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

செல்லுபடியாகும் டிக்கட் தொடர் இல. 3686674 இலிருந்து 3703551 வரை

சீட்டிழுப்பு இல. 1528
திகதி 07.08.2004

வெற்றி எண்கள் 26 36 42 55 57

போனஸ் எண் 16

ஜக்பொட் பரிசு ரூபா.15,00,000/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | மொத்த பரிசுத்தொகை |
|---|---|---|---|
| 5 | - | 15,00,000/- | - |
| 4 எண்களுடன் போனஸ் எண் | 02 | 1,00,000/- | 2,00,000/- |
| 4 | 97 | 10,000/- | 9,70,000/- |
| 3 | 5,310 | 500/- | 26,55,000/- |
| 2 | 88,468 | 20/- | 17,69,360/- |
| சீட்டிழுப்பில் ஆகக்குறைந்த 26ம் எண் (போனஸ் எண் தவிர்ந்து) | 108,552 | 10/- | 10,85,520/- |

இந்த புதன்கிழமை ஜக்பொட் Rs. 23,37,700/-

வெல்லப்பட்ட மொத்த தொகை ரூ. 66,78,880/-

தொடர் இல. 2751450 க்கு மேற்பட்ட மஞ்சள் நிற டிக்கட்டுக்கள் 2004 ஆகஸ்ட் 11 ஆம் திகதி புதன்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33,சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

சனிக்கிழமை அதிர்ஷ்டச் சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் சுமார் 1,00,000/- பெறுமதியான தங்க நகை, தையல் இயந்திரம் மற்றும் சைக்கிளை வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

3697856-9-02
3700100-5-57
3693053-5-44
3688146-0-75
3701156-1-29

# பத்திரிகையாளன் அநீதிக்குத் துணைபோகலாகாது; அவனது பேனாவும் ஒருபொழுதேனும் கறைபடியக்கூடாது

## மூத்த பத்திரிகையாளர் செல்லப்பா நடராசா அறிவுறுத்து



கோண்டாவில்,ஓக.9

பத்திரிகையாளர்கள் ஒருபோதும் அநீதிக்குத் துணைபோகலாகாது. அவர்களது பேனாவும் ஒருபொழுதேனும் கறைபடியவும் கூடாது. பத்திரிகையாளர்களைப் பொறுத்தவரை அவர்கள் சத்தியம், நேர்மை, உண்மைத்தன்மை, தர்மம் என்பனவற்றுக்குக் கட்டுப்பட்டு பணியாற்ற வேண்டும்.

- இவ்வாறு அறிவுறுத்தினார் மூத்த பத்திரிகையாளரும் எழுத்தாளருமான செல்லப்பா நடராசா.

இணுவில் - கோண்டாவில் காரைக்கால் சிவன்கோயில் பூங்காவனத் திருவிழாவன்று (கடந்த திங்கட்கிழமை) பத்திரிகைத் துறையில் நுழைந்து ஐம்பது ஆண்டுகளைப் பூர்த்தி செய்தவரும் எழுத்தாளருமான செல்லப்பா நடராசாவைக் கௌரவிக்கும் விழா நடைபெற்றது.

ஆலய அம்பலவாணர் கலையரங்கில் நடைபெற்ற விழாவுக்குச் செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் தலைமை வகித்தார்.

செல்லப்பா நடராசா தமது ஏற்புரையில் மேலும் தெரிவித்ததாவது:-

எந்தத் துறையைச் சார்ந்த எழுத்தாளர்கள் என்றாலும் அவர்களுடைய எழுத்திலே சத்தியம், நேர்மை, உண்மை இருப்பது முக்கியம். இவற்றைக் கொண்டிராத எழுத்தாளன் வாசகர்களுக்கோ சமுதாயத்துக்கோ பயனுள்ளவனாக அமையமாட்டான்.

ஒரு பத்திரிகையாளன் யாருக்கும் தலை வணங்கியோ பின்னால் போகும் தன்மையோ கொண்டிருக்கக்கூடாது. நேர்மையற்ற வழிகளில் சென்று பெரும் பணம் தேடக்கூடிய வாய்ப்புகள் இருந்தும் பத்திரிகையாளனாக நான் நேர்மையாக நடந்து கொண்டுள்ளமையால் தான் எனக்கு இன்று இந்தக் கௌரவம் கிடைத்துள்ளது.

பத்திரிகையாளனுக்கும் பத்திரிகைக்கும் துணிச்சல் இருக்கவேண்டும். 'உதயன்' பத்திரிகை ஒரு துணிச்சலான பத்திரிகை என்று பாராட்டுப் பெற்றுள்ளது. உண்மையாகவும் நேர்மையாகவும் உள்ளதை உள்ளபடி கூறும் துணிச்சல் காரணமாகவும் பத்திரிகைத் தர்மத்தைக் கடைப்பிடித்தமையாலும் இப்பாராட்டை உதயன் பெற்றது - என்று கூறினார்.

ஆறு.திருமுருகன் தமது தலைமையுரையில்-

செல்லப்பா நடராசா அவர்கள் நூற்றுக் கணக்கான கட்டுரைகளை எழுதியவர். இந்த நாட்டிலே உள்ள பல பேரறிஞர்களால் கௌரவிக்கப்பட்டவர். இலங்கை நாடாளுமன்றத்திலே பணியாற்றுகின்ற காலத்தில் மொழி, இனம், மதம் தாண்டி பலருடைய நட்புகளைப் பெற்றவர். மிகச் சிறிய வயதில் தினகரன் பத்திரிகையில் தனது பத்திரிகைப் பணியை ஆரம்பித்தவர். பின்பு, உதயன், தினக்குரல், ஈழநாடு என சகல பத்திரிகைகளிலும் பல கட்டுரைகளை எழுதிப் பாராட்டுக்களைப் பெற்றவர். இன்னும் தொடர்ந்து எழுதி வருகிறார் - என்று சொன்னார்.

ஆசிரியமணி பஞ்சாட்சரம் தனது பாராட்டுரையில் தெரிவித்ததாவது:-

செல்லப்பா நடராசா பத்திரிகைத்துறையில் ஐம்பது ஆண்டுகள் பணியாற்றியவர். 1954 ஆம் ஆண்டு தினகரன் பத்திரிகையில் நுழைந்தவர். இன்று 2004ஆம் ஆண்டு வரை அந்தப் பணியை ஆற்றிவருகிறார். "எனது நோக்கில் இலங்கை பாராளுமன்றம்" என்ற நூலை எழுதிப் பெயர்பெற்றவர். நாடாளுமன்றத்தில் பல வகைகளில் பிரதிநிதித்துவப்படுத்தியவர்கள் கவனிக்காத விடயத்தை எழுத்தில் எழுதியவர் இவர். இந்த நூல் இலங்கை நாடாளுமன்றத்தைப் பற்றி வெளிவந்த முதலாவது நூலாகும். இந்த நூலை இந்தியாவின் 'இந்து' போன்ற பத்திரிகைகள் பாராட்டியிருந்தன. செல்லப்பா நடராசா அவர்கள் தற்பொழுது ஆலயங்கள், தான் வாழ்ந்த கிராமங்களுக்குத் தொண்டாற்றி வருகிறார். இவருக்கு வழங்குகின்ற பாராட்டு எதிர்வரும் காலத்தில் கொண்டாடப் படவிருக்கின்ற.பவளவிழா, அமுதவிழா என்பவற்றுக்கான ஆரம்ப விழாவாக அமைந்திருக்கிறது - என்றார்.

இணுவில் மத்திய கல்லூரி அதிபர் துரை எங்கரசு தமது பாராட்டுரையில் -

செல்லப்பா நடராசா எழுதிய கட்டுரைகளை இப்போது பார்க்கும்போது ஆச்சரியமாக இருக்கிறது. அவற்றில் நகைச்சுவை, கிராமியப் பண்பு, மாணவர்களுக்குத் தேவையான விடயங்கள், அரசியல் போன்றவை பல கோணங்களில் கூறப்பட்டிருப்பதைக் காணமுடிகிறது. "எனது பார்வையில் இலங்கைப் பாராளுமன்றம்" என்ற இவரது நூல் பலரது அறிவுத் தேடலைப் பூர்த்திசெய்துள்ளது. அது இவருடைய வாழ்வுக்கு மகுடம் சூட்டியுள்ளது - என்று தெரிவித்தார்.

### சமூகப் பணியும் ஆற்றுபவர்

கலாநிதி கா.அமிர்தலிங்கம் உரையாற்றுகையில் -

செல்லப்பா நடராஜா எமது பிரதேசத்தின் அரிமாக்கழக உறுப்பினராக இருந்து சமய, இலக்கிய பணிகளுடன் சமூகப்பணிகளும் ஆற்றிவருகின்றார். அரிமாக் கழகத்தால் முன்னெடுக்கப்படும் இலவச கண்பரிசோதனை முகாம் மற்றும் மரம் நடுகை போன்ற செயற்றிட்டங்களுக்குப் பெரும்பணி ஆற்றிவருகிறார் செல்லப்பா நடராசா - என்று கூறினார்.

உதயன் - சஞ்சீவி பிரதம ஆசிரியர் ம.வ. கானமயில்நாதன் தமது பாராட்டுரையில் தெரிவித்ததாவது:-

ஒருவர் பத்திரிகையாளராவது இலகுவான காரியமல்ல. அது பயிற்சி, முயற்சி, திறமை என்பவற்றால் வருவது. கீழைத்தேசத்தில் பத்திரிகையாளர்கள் மதிக்கப்படுவது குறைவு. மேலைத்தேசத்தில் ஒரு பத்திரிகையாளன் அரசியல்வாதிக்கும் மேலாக மதிக்கப்படுகிறான். அவன் ஒரு சமூகத்தை வழிநடத்துபவன் என்ற வகையில் அவனது மதிப்பு மேலைநாடுகளில் மேலோங்கி நிற்கிறது.

பத்திரிகையாளன் எல்லோரையும் பாராட்டுவான். அவர்களை ஏணியிலே ஏற்றி உச்சத்திலே கொண்டுபோய் விடுவான். ஆனால், பத்திரிகையாளனைப் பாராட்டுபவர்களோ மதிப்பவர்களோ மிகக் குறைவு.

எங்கள் நாட்டிலே பத்திரிகையாளன் என்றால் இயலாத் தன்மையால் பத்திரிகையில் இணைந்தவன் என்று கருதுபவர்களும் உள்ளனர். ஒரு சமூகத்தின் பலதுறை சார்ந்த வாழ்வியலை, சமூகவியலைப் பதிவுசெய்யும் பெரும் பணி பத்திரிகையாளன் மூலமே நிகழ்ந்து வருகிறது என்பதனை மிகப் பலரும் உணர்வதில்லை. எனினும் இப்பொழுது ஊடகத்துறை வளர்ந்து வருவதால் அந்த நிலை மெல்ல மெல்ல மாறிவருகிறது.

பேராசிரியர் கைலாசபதி காலத்திலே தினகரன் பத்திரிகைக்கு ஓர் எழுச்சி இருந்தது. அந்தக் காலத்தில் கட்டுரைகள் பலவற்றை எழுதிக் குவித்தவர்தான் செல்லப்பா நடராசா. அவர் சிங்களத்தில்கூட எழுதாத ஒரு நூலை எழுதி வெளியிட்டவர். "எனது பார்வையில் இலங்கைப் பாராளுமன்றம்" என்ற அந்த நூலை ஒரு பத்திரிகையாளனாக இருந்தபடியால்தான் அவரால் எழுத முடிந்தது என்று கருதலாம்.

### காலத்தின் பதிவாளன்

தமிழனின் பண்டைய மரபை, வாழ்வை, கலை, கலாசாரப் பண்பை, இணைத்து ஒரு கட்டுரையை இன்றைய சந்ததி படிக்கும்படியாக எழுதும் திறன் செல்லப்பா நடராசாவுக்கே உரியது. செல்லப்பா நடராசாவைக் காலத்தின் பதிவாளனாக - பண்பாட்டின் பதிவாளனாக - தமிழரின் வாழ்வின் பதிவாளனாகவே பார்க்கின்றேன். இத்தகைய திறமை உள்ளவரைப் பாராட்டுகின்ற பண்பு உங்களுக்கு இருப்பதையிட்டு நான் உங்களுக்கு நன்றி கூறுகிறேன்.

இப்போது சமூகம் மாறிக்கொண்டிருக்கிறது. மாற்றம் நல்ல மாற்றமானதாக இல்லை என்பதனை எல்லோரும் அறிவர். சமூக அக்கறை உள்ளவர்களின் மனது புண்பட்டு வேதனைப்படும் அளவுக்கு அந்த மாற்றம் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. சமூகக் கட்டுக்கோப்புக் குலைந்து கொண்டிருக்கிறது. எவர் எதனைச் சொன்னாலும் சமூகம் திருந்துவதாக இல்லை. அதைத் திருத்தியாக வேண்டும். இப்படியானவர்களின் எழுத்துக்களினால்தான் திருத்த முடியும். முன்னையகால மக்களின் வாழ்க்கை முறையை சரிவர அறிந்தால் இன்றைய இளம் சமூகம் திருந்துவதற்கான திருப்புமுனை ஏற்படும் - என்று தெரிவித்தார்.

ஆலயத்தினரால் நடத்தப்பட்ட சமய அறிவுப் போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசுகளும் இவ்விழாவில் வைத்து வழங்கப்பட்டன.

கலை நிகழ்வுகளாக பண்ணிசை, எழுச்சிக கீதங்கள், நாட்டிய நிகழ்வு, பட்டிமன்றம் என்பனவும் நடைபெற்றன.

(எ-49-152)

# கல்விச் செயற்பாடுகளுக்குத் தடையாக இருப்போர் மாணவர்களின் உரிமை பற்றிப்பேசுவது வேடிக்கை

## கல்விக் கழகப் பொறுப்பாளர் தெரிவிப்பு



வடமராட்சி கிழக்கு,ஓக.9

பாடசாலைகள் மீது குண்டுகளை வீசி மாணவர்களைக் கொன்றவர்கள், கட்டடங்களை அழித்தவர்கள், இன்றும் பாடசாலைகளில் குந்தி இருந்து கொண்டு கல்விச் செயற்பாட்டுக்குத் தடையாக உள்ளவர்கள் மாணவர்கள் அரசியல் நிகழ்ச்சிகளில் பங்குபற்ற வைக்கப் படுகிறார்கள் என்று கூறுவது வேடிக்கையானது.

தமிழீழக் கல்விக் கழகப் பொறுப்பாளர் வெ.இளங்குமரன் தமிழீழ வரலாற்றுத் தேர்வில் தேசிய, வலய மட்டத்தில் கூடிய புள்ளிகளைப் பெற்று வெற்றியீட்டியவர்களுக்கும் கடந்த டிசெம்பர் மாதம் நடத்தப்பட்ட ஜி.சீ.ஈ சாதாரண தரப்பரீட்சையில கடல்வளப் பாடத்தில் மிகு திறன் சித்தியினைப் பெற்ற மாணவர்களுக்கும் இடம்பெற்ற பரிசளிப்பு வைபவத்தில் சிறப்புரை நிகழ்த்திய போது இவ்வாறு தெரிவித்தார்.

கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவைத் தலைவர் வண.பிதா பிரான்சிஸ் ஜோசப் அடிகளார் தலைமையில் இவ்வைபவம் நடைபெற்றது.

இவ்வைபவத்தில் தமிழீழக் கல்விக் கழகப் பொறுப்பாளர் வெ.இளங்குமரன் தொடர்ந்து உரையாற்றும்போது:-

1971 இல் சிங்கள அரசினால் தமிழ்மாணவர்களுக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட தரப்படுத்தல்தான் இன்றைய தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு ஆரம்பமாக விளங்கியது. கரும்புலிகள் தினத்தில் மாணவர்கள் பங்கேற்றது




தொடர்பாக மாணவர்கள், அரசியல் நிகழ்ச்சியில் ஈடுபடுத்தப்பட்டார்கள் என ஸ்ரீலங்கா படைதரப்பு மனித உரிமைகள் நிறுவனத்திடம் புகார் செய்துள்ளது.

கடந்த காலங்களில் பாடசாலைகள் மீது குண்டுகளை வீசி மாணவர்களைக் கொன்றார்கள்; பாடசாலைக் கட்டடங்களை அழித்தார்கள். இன்றும் பல பாடசாலைகளில் குந்தி இருந்து கொண்டு கல்விச் செயற்பாட்டுக்குத் தடையாக உள்ளார்கள். இவ்வாறு மாணவர்களுக்கு அச்சுறுத்தலாகவும் தடையாகவும் உள்ளவர்கள் மாணவர்கள் பற்றிக்கூறுவது வேடிக்கையானதாகும்.

ஸ்ரீலங்கா அரசு காலங்காலமாகத் தமிழ் மாணவர்களின் கல்வியில் பின்னடைவினை ஏற்படுத்துவதற்குப் பலவழிகளில் செயற்பட்டு வருகின்றது - என்றார்.

(ப-182)

# இடம்பெயர்ந்த மக்களுக்கு மாவை எம்.பி. அளித்த வாக்குறுதி



வலி.தெற்கு ஓக.09

வலி. தெற்கு பிரதேச செயலர் பிரிவில் உள்ள இடம் பெயர்ந்தோர் முகாம்களில் வாழும் மக்களுக்குத் தேவையான மலசலகூட வசதிகளைச் செய்துகொடுக்க விரைவில் நடவடிக்கை எடுப்பதாக யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா உறுதியளித்துள்ளார்.

வலிகாமம் தெற்குப் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் அவர் கலந்து கொண்டு பிரதேச அபிவிருத்தி தொடர்பான கருத்துக்களை வழங்கினார்.

பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற இக்கூட்டத்துக்குப் பிரதேச செயலர் சி.திருவாகரன் தலைமை வகித்தார்.

சுன்னாகம் சபாபதிப்பிள்ளை நலன்புரி முகாமில்மலசல கூடப் பிரச்சினைகளும், குடிதண்ணீர்ப் பிரச்சினைகளும் காணப்படுகின்றன. இவற்றினால் அம்முகாமில் தங்கிவாழும் குடும்பங்களின் சுற்றுப்புற சூழல் பாதிக்கப்பட்டு தொற்றுநோய்கள் ஏற்படும் நிலை காணப்படுகினறது. இவர்களுக்குத் தேவையான மலசல கூடவசதிகளையும் குடிதண்ணீர் பிரச்சினைக்குத் தேவையான கிணறுகளையும் அமைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்வேன் என மாவை சேனாதிராசா தெரிவித்தார். (ப-152)

### எமது அடையாளத்தை இழக்காமலிருக்க

# இலக்கியப் பொக்கிசங்களை பாதுகாத்துக்கொள்ளவேண்டும்

## 'தேட்டம்' அறிமுகவிழாவில் நந்தி

யாழ்ப்பாணம்,ஓக்.9

நாம் எமது இலக்கியப் பொக்கிசங்களைப் போற்றிப் பாதுகாத்துக்கொள்ளவேண்டும் இல்லையென்றால் எமது அடையாளத்தை இழந்து விடுவோம்.

- இவ்வாறு தெரிவித்தார் யாழ். பல்கலைக் கழக மருத்துவபீட வாழ்நாள் பேராசிரியர் எஸ். சிவஞானசுந்தரம் (நந்தி).

யாழ். பொதுநூலகக் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற என்.செல்வராஜாவின் 'தேட்டம்' நூல் இரண்டாம் தொகுதி அறிமுகவிழாவில் உரையாற்றுகையிலேயே பேராசிரியர் சிவஞானசுந்தரம் இக்கருத்தை வெளியிட்டார்.

ஈழத்து எழுத்தாளர்களின் நூல்களை ஆவணப்படுத்தும் முயற்சியில் செல்வராஜா ஈடுபட்டிருப்பதை அவர் வெகுவாகப் பாராட்டிப் பேசினார்.

தென்னிந்தியத் திருச்சபைப் பேராயர் கலாநிதி எஸ்.ஜெபநேசன் அடிகளார் பேசுகையில்-

பல்கலைக்கழக மட்டத்தில் மேற்கொள்ளப் படவேண்டிய ஒரு பணியை செல்வராஜா தனி ஒருவராகச் செய்துள்ளார் என்று குறிப்பிட்டதுடன், அவரது இந்த முயற்சிக்குத் தாம் தன்னாலான அனைத்து உதவிகளையும் புரியத் தயாராய் இருப்பதாகவும் கூறினார்.

மூதறிஞர் கலாநிதி சொக்கன் கருத்துத் தெரிவிக்கையில்-

ஏதாவது நிறுவனங்களால் செய்யப்பட வேண்டிய வேலையைத் தனிமனிதனாக நின்று செல்வராஜா செய்துள்ளார் என்றும் இதற்குத் தனது சொந்தப்பணத்தையும் நேரத்தையும் பயன்படுத்தியுள்ளார் என்றும் தெரிவித்தார்.

அருட்திரு. ரூபன்மரியாம்பிள்ளை அடிகளார் தமதுரையில்:-



தேசிய சுவடிகள் காப்பகம் இலங்கையில் வெளிவரும் நூல்களைப் பற்றிய விவரங்களைத் தொகுத்து வெளியிட வேண்டும். அது அவர்களது கடமை. ஆனால், அவர்கள் அதை ஒழுங்காகச் செய்வதில்லை.

அதிலும் தமிழ் நூல்கள் விடயத்தில் ஏனோ தானோ என்று செயற்படுகிறார்கள். இந்த நேரத்தில் செல்வராஜா தனி ஒரு மனிதனாக இதைச் செய்திருப்பது வரவேற்கப்படவேண்டிய ஒரு விடயம் - என்றார்.

செல்வராஜா தமது பதிலுரையில், இரண்டு ஆண்டுகளுக்கு முன் தாம் நூல் தேட்டம் தொகுதி ஒன்றை வெளியிட்டபோது, ஓர் எழுத்தாளர் நாங்கள் தரும் நூல்களைக் கொழும்பில் வைத்துவிட்டுச் சென்றுவிடுவீர்கள் என்று சொன்னார். அவர் இன்று இங்கு வரவில்லை. ஆனால், அவரது நூல்கள் யாவும் இந்த இரண்டாவது தொகுதியில் இடம்பெற்றுள்ளன - என்றார். அத்துடன், ஒவ்வொன்றும் ஆயிரம் நூல்களைப் பற்றிய விவரங்களடங்கியதாக மேலும் ஒரே தொகுதிகளை மொத்தம் ஒன்பது தொகுதிகளை வெளியிடவுள்ளதாகவும் அவர் சொன்னார்.

யாழ். பொதுநூலக நூலகர் எஸ்.தனபாலசிங்கம் விழாவுக்குத் தலைமை வகித்தார். யாழ். மாநகர பொதுசன தொடர்பு அதிகாரி இ.இரத்தினசிங்கமும் விழாவில் கலந்துகொண்டார்.

(ப-30)

இன்று எமது இனத்தவரிடையே வளர்ந்தோர், குழந்தைகள், சிறியோர் வரை கூடுதலான விகிதாசாரத்தில் இரத்தச் சோகையினால் பாதிப படைந்து காணப்படுகின்றனர். இதனை வைத்தியசாலை ஆய்வுகூட அறிக்கைகள் சான்று பகர்கின்றன. இதற்குக் காரணம் சரியான அளவில் ஊட்டச்சத்துக்கள், விற்றமின்கள் உட்கொள்ளாமையாகும்.

# விற்றமின் குறைவால் ஏற்படும் தாக்கங்கள்

மனித உடலுக்குத் தேவையான குருதி உற்பததியினை மேற்கொள்வதற்கு அயன், புரதம் போன்ற சத்துள்ள உணவுகளை உட்கொள்வதன மூலம் குருதி உற்பத்தியினைப் பெருக்கி இரத்தச் சோகை நோயிலிருந்து தப்பித்துக்கொளள முடியும். இல்லாவிடில் செயற்கையான அயன் வில்லைகளையும் வைத்திய ஆலோசனைப்படி பாவித்தும் சீர்செய்து கொள்ளமுடியும்.

சிறுவர்களுக்கு, குழந்தைகளுக்கு விற்றமின் குறைபாட்டால் பலவகையான தாக்கங்கள் உண்டாகின்றன. மூளைவளர்ச்சி குன்றுதல், உடல் ஆரோக்கியம் குறைதல், நோய் எதிர்ப்பு சக்தி குறைதல் போன்றவை ஏற்பட வாய்ப்புண்டாகின்றது. குழந்தைகளுக்குப் புரதச்சத்து சரியான அளவில் கிடைக்கப்பெறாவிடத்தில் (PEM) குவாசியோகர், மரஸ்மஸ் போன்ற நோய்கள் ஏற்பட வாய்ப்பு உண்டாகின்றது. இதனைப் போக்குவதற்கு இயற்கையான புரத உணவுகளை, விற்றமின்களை உள் எடுப்பதனால் இந்நோயில இருந்து தப்பித்துக் கொள்ளமுடியும் என வளர்முக நாடுகளின் வைத்திய அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

மனித அவயவங்கள் சீராகவும், நோயின்றியும் இயங்க வேண்டுமாயின் சரியான அளவில் உரிய முறையில் இயற்கை உணவு வகையிலிருந்து உரிய சத்துக்கள், விற்றமின்களைப் பெற்றுக்கொள்ளல்வேண்டும்.

### மனித உடலுக்குத் தேவையான உணவு வகைகள்

1) **மாப்பொருள்:** மாவகை உணவுகள், கோதுமை மா, அரிசி, கிழங்கு வகைகள்.

2) **கொழுப்பு உணவு:** மரக்கறி எண்ணெய், இறைச்சி வகைகள், பால், தேங்காய்.

3) **புரதச்சத்துள்ள உணவு:** இறைச்சி வகை, மீன், நிலக்கீழ் கிழங்கு வகைகள், சோயா, பால், முட்டை.

4) **நார்த்தன்மையுள்ள உணவு:** வாழைப் பொத்தி, கீரைவகைகள், பழவகைகள் (மாம்பழம்).

5) **இரும்புச்சத்துள்ள உணவு:** அகத்தியிலை, பச்சைக் கீரைவகைகள்.

6) **அயடீன் சத்துள்ள உணவு:** கடல் உணவுகள், மீன், அயடீன் கலந்த உப்புக்கள்.

இந்தச் சத்துக்களை உடலுக்குக் கொண்டு செல்வதற்கும், கழிவுப்பொருள்களை வெளியேற்றுவதற்கும், உடலின் நீர்த்தன்மையினைப் பேணுவதற்குமாக நாம் உடலுக்குப் போதியளவு நீரினை உட்கொள்ளுதல்வேண்டும். குறைந்தது சராசரி 5 லீற்றர் தொடக்கம் 6 லீற்றர் வரை உட்கொள்ளுதல் வேண்டும். இல்லாவிடில் நீர்ப் பற்றாக்குறையால் பலவிதமான உடல் மாற்றங்கள், நோய்கள் ஏற்பட வாய்ப்பு உண்டாகும்.

### குவாசியோகர் (Kwashiorkor)

தாய்ப்பால் சிறந்த ஊட்டச்சத்து நிறைந்த உணவாகும். குழந்தைகளுக்கு தாய்மார் 3-4



மாதம் வரை தொடர்ந்து ஊட்டுவார்கள். இதற்கு மேல் குழந்தைகளுக்கு தாய்ப்பால் போதியதாக அமையாததினால் குழந்தைகளுக்கு ஊட்டப்படும் உணவுகளுடன் சேர்த்து புரதம், விற்றமின்கள் வழங்கப்படல் வேண்டும். அப்படி வழங்கப்படாவிடில் இப்புரதசசத்துக் குறைவினால் (PEM) குவாசியோகர் நோய ஏற்பட வாய்ப்புண்டாகின்றது.

### இந்நோய்க்குள்ளாக்கப்பட்ட குழந்தைகள்

★ கால்கள், முகம், உடல் போன்றவை வீங்கிக்காணப்படும்.



★ தலைமயிர்கள் நீட்டிக்கொண்டிருக்கும்.

★ மெலிந்து உடல் நிறம் மெல்லிய மண்ணிறமாகவோ, சிவப்புக் கலந்த மண்ணிறமாகவோ (Red-Brown) காணப்படும்.

★ தோல் துடிப்பாகவும், செதில்கள் (Flaky) போன்றவையாகவும் இருக்கும்.

★ இரத்தச் சோகை உடையவர்களாகக் காணப்படுவர்.

செ.செல்வரட்ணம்,
பதவிநிலைத் தொழில்நுட்ப உத்தியோகத்தர்,
யாழ். பல்கலைக்கழகம்.

★ புரதத்தின் அளவு இரத்தத்தில் குறைந்து காணப்படும்.

### மரஸ்மஸ் (Marasmus)

இந்நோய் புரதச்சத்துக் குறைவால் ஏற்படும நோயாகும். இதில் இரண்டுவகை உண்டு. ஆரம்பகால மரஸ்மஸ், பிந்திய மரஸ்மஸ் ஆகும்.

### ஆரம்பகால மரஸ்மஸ் (Early Marasmus)

குழந்தையின் ஆரம்பகால முதல் வருடத்தில் போதியளவு ஊட்டச்சத்துப் பற்றாக்குறையே இதற்குக் காரணம். பாலூட்டும் தாயிடம் போதியளவு பால் உற்பத்திக் குறைவே காரணமாகும். இதற்குத் தாய் வசதியின்மை காரணமாக போதியளவு புரதச்சத்து, விற்றமின்கள் உள்ள உணவுகள் உட்கொள்ளாமையே முக்கிய காரணமாகும். இதனால், குழந்தைக்குச் சரியான முறையில் தாய்ப்பாலை வழங்கமுடியாத நிலையில் இந்நோய் ஆரம்பகாலத்தில் ஏற்பட வாய்ப்புண்டாகின்றது.

*(வளரும்)*

---

# மனிதனை உளரீதியாக தாக்கும் மனநோய்...

*(சென்ற வாரத் தொடர்ச்சி)*

**இஸ்கிக்சோபிரினியா (உளப் பிளவு நோய்)**

இந்நோயானது இளம் பராயத்தினருக்கு ஏற்படுவது. இதன் குணங்குறிகளை அவதானித்ததும் உடன் சிகிச்சையளிக்க வேண்டும். இதன அறிகுறிகளாக அவர்கள் தொழிலில் நாட்டமில்லாதவாகளாக இருப்பர். தமது சுகாதாரத்தைப் பேணமாட்டார்கள். தனித்து இருப்பர், திடீரென ஆத்திரப்படுவர். பிதற்றுதல், சிரித்தல் என்பவற்றில் ஈடுபடுவர். பிறர் தன்னைக் கேலி செய்வதாக நினைப்பர், சந்தேகத்தை தமக்குள்ளே வளாபர் தன்னை யாரோ கொலை செய்வதாக அல்லது மிரட்டுவதாக அவதிப்படுவர்.

**(2) மெனிக் டிப்றசில் சைக்கோஸிஸ.**

இந்நோயாளி அதிக குதூகலத்துடன் காணப்படுவார். குதூகலமாயிருக்கும் போது ஆட்டம், பாட்டு, பிதற்றல் என்பன ஏற்படும். தன்னைத் தானே அழித்துக்கொள்ளத் தற்கொலையையும் நாடுவர். எனவே, இவர்களை உடன் சிகிச்சைக் குட்படுத்த வேண்டும்.

இலங்கையில் பல நோயாளர்கள் விபத்துக்களாலும், தொற்று நோய்களாலும் மூளை நரம்பு பாதிக்கப்பட்டவர்களாக மனநோயாளரா கின்றனர். மிதமிஞ்சிய மதுப்பாவனையும், போதைப் பொருள் பாவனையும், பாலியல் பாதிப்புக்களும், போர் பாதிப்புக்கள், இடம்பெயர்வுகள், தனிமைப்படல் போன்றன மனநோய்களை ஏற்படுத்துகின்றன.

இன்று மனநோயைக் குணப்படுத்த பல சிகிச்சை முறைகள் உள்ளன. மருந்துகள், மின அதிர்ச்சி முறை, உளவியல் சிகிச்சை, நடத்தையில் சிகிச்சை, தொழில் முறைச் சிகிச்சை, ஆலோசனைச் சேவை, புனர்வாழ்வளிப்பு மற்றும் செயல்திறன், ஊக்குவித்தல் என்பன இதற்காக கையாளப்படுகின்றன. எதற்கும் உடன் வைத்தியரை நாடினால் அதற்கேற்ப சிகிச்சை அளிக்கப்படும். வைத்திய ஆலோசனைகளின்படி முறையான சிகிச்சை பெற்றால் மீண்டும் பழைய வாழ்க்கை முறைக்குத் திரும்ப இடமுண்டு. சிலர் வைத்தியத்தை அரைகுறையில் நிறுத்த முற்படுவர். அப்படி அரைகுறையில் நிறுத்தாது பூரண சிகிச்சை பெற்றால் மன நோயைக் குணப்படுத்த இடமுண்டு.

இலங்கையில் சனத்தொகையில் ஒரு வீத மானவர்கள் அதீத மனநோய்க்கு ஆளாகியுள்ளனர். பன்னிரண்டரை வீதம் உள்ளவர்கள் சிறிய அளவிலான மனநோய்க்கு உட்பட்டுள்ளனர். உலகில் பார்ப்பின் 400 மில்லியன் மக்கள் ஏதாவது மனநோய்க்கு ஆளாகின்றனர்.

மனநோய் ஏற்பட்டால் நாம் கூடிய விரைவில் வைத்தியரை நாடவேண்டும். வைத்தியர் கூறும் ஆலோசனைகளைக் கடைப்பிடிக்க வேணடும். உரிய நேரங்களில் மருந்துகளைப் பயன் படுத்தவேண்டும் தேவையேற்படின் வைத்தியர் உளவியற் சிகிச்சை அல்லது புனருத்தாரண நிலையங்கள் மூலம் சிகிச்சையளிக்க முற்படுவார். மனநோயாளரை அன்றாட வாழ்க்கையில் ஈடுபட நாம் உற்சாகம் அழிக்க வேண்டும் அவர்களை அநாவசியமாக விமர்சிக்கக்கூடாது. அவருக்கும் அவரது குடும்பத்துக்கும் உதவுங்கள், ஆதரவளியுங்கள். ஓரளவு குணமடைந்த நோயாளியை குடும்ப ஏனைய உறுப்பினர்கள் போன்று




கவனியுங்கள். வேறுபாடு காண்பித்தலாகாது. பெரும்பாலும் மனநோயாளரை கேலி செய்வதையும், இரசிப்பதையும், விமர்சிப்பதையும் தவிர்க்கவேண்டும். மன நோயாளிக்கு இன்பகரமான, சந்தோசமான இனிய சூழலை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும். மனநோயாளர் சுகமானதும் தமது ஆளுமையை வளர்க்க, ஆற்றலை விருத்திசெய்ய, இறைமையை அதிகரிக்க நாம் எம்மாலான உதவியளிக்க வேண்டும்.

'அல்ஜைமர்' நோய் என்பது மூளையில் உள்ள நரம்புக் கலங்கள் அழிவதால் அல்லது மூளைத் திசுக்களில் ஏற்படும் மிக நுண்ணிய மாற்றங்களால் ஏற்படும் ஒன்றாகும். இது மறதிநோயை ஏற்படுத்துகின்றது. மறதி நோய் மூன்று நிலைகளை உண்டுபண்ணும் முதல் நிலை கொஞ்சம் மறதி ஏற்படும். தமக்கு மறதி உள்ளது என்பதை உரியவர் ஏற்றுக்கொள்ள மறுப்பர். ஆனால், அவாது குணாதிசயங்களில் மாற்றத்தைக்காணமுடியும். இடைநிலையில் மறதி இன்னும் தீவிரம் அடையும். கோபம், இரைச்சல் என்பன ஏற்படும் பிறரை சந்தேகிப்பர், உளறித்தள்ளுவர் பிறர் உதவியின்றி வாழ முடியாதநிலை ஏற்பட இடமுண்டு.

மூன்றாவது நிலைதான் கடைசி நிலை. இந்த நிலையில் மறதி தீவிரப்படும். உறவுமுறைகள் கூட மறந்துவிடும். பேசுவது விளங்காது. புரிந்துகொள்ளமாட்டார்கள். இந்த அல்ஜைமர் நோய் சோதனைமூலம் அறிய முடியாதது. எனினும், உடனடியாக நாம் இவர்களை சோதனைககுட்படுத்த வேண்டும். இவர்களை வைத்தியர்கள முழு உடற்பரிசோதனை மூலம் மொழி கற்றல், புரிந்துகொள்ளல் என்பதை அறியும் சோதனை மூலமும், எம்.ஆர்.ஐ.ஸ்கான் மூலமும் சோதனை செய்து சிகிச்சையளிக்க முற்படுவர். மூளைக் கட்டியினால் மறதி ஏற்பட்டுள்ளதா என்பதும் அவதானிக்கப்பட்டு சிகிச்சையளிக்கப்படும். இதைவிட பிறகாரணிகளான தைரொய்ட் நோய்கள், விற்றமின் குறைபாடு, சிப்பிலிஸ் என்பவற்றால் மறதி ஏற்பட்டதா எனவும் அராய்ந்து பார்ப்பர். இதன்பின்தான் அல்ஸைமர் நோய் ஏற்பட்டுள்ளது என முடிவெடுத்து சிகிச்சை அளிப்பர்.

சொ.அமிர்தலிங்கம்
(ஆளுநரின் செயலாளர், ஆளுநர் அலுவலகம், வடக்கு - கிழக்கு மாகாணம், திருகோணமலை)

அல்ஜைமர் நோயினால், பாதிக்கப்பட்டவருககு அன்பும் ஆதரவும் தேவை. இது தவிர 'எக்சிலோன்' என்ற மருந்து உள்ளது. இது தன்னைப் பற்றியும் சுற்றாடலையும் நோயாளிக்கு உணர்ததும். நினைவாற்றலை அதிகப்படுத்தும்.

பேராசிரியர் நாலகா மெண்டிஸ், (கொழும்புப் பல்கலைக்கழகம்) என்பவரது ஆய்வின்படி 10 வீதத்தினர் நோயுற்றவர்களாகவும், ஆரோக்கியம் குன்றியவர்களாகவும் உள்ளனர். ஒரு வீதத்தினர் இறப்பை நாடியுள்ளனர். இலங்கையில் ஒரு லட்சம் பேரில் 42 பேர் தற்கொலைபுரிகின்றனர். உலகில் தற்கொலை மிகக்கூடிய ஒரு நாடாக இலங்கை உள்ளது. இலங்கையில் 1 லட்சம் பேரில் 250 பேர் மனநோய்ச்சிகிச்சைக்கு உள்ளாக நேரிடுகின்றது. இன்று மனநோயினால் பாதிக்கப்பட்ட பலர் சிகிச்சைகளின் பின் புதுப்பொலிவுடன் தமது ஆற்றலை, திறமையை, பெறுபேற்றினை நிலை நாட்டிவருகின்றனர்.

*(முற்றும்)*

---

# விளைதீர்க்கும் வேம்பின் சிறப்பு

**வே**ம்பு கைப்புப் பொருளாயினும், பித்தப் பையில் நிறைந்த பித்தநீரை வெளியாககி, காமாலை நோயைப் போக்கும். மேலும், இதன் குணமாவது வயிற்றுப் புழு பெருநோய், மாந்தம் நச்சுச்சுரம், அம்மைப் புண், சொறி, சிரங்கு ஆகிய வற்றைப் போக்கும்.

வேம்பின் இலை, ஈர்க்கு, பூ, காய், பழம். வித்து, நெய், பிண்ணாக்கு, மரப்பட்டை, வேர்ப் பட்டை, கட்டை, கல், பிசின் போன்ற அனைத்துப் பாகங்களுமே மருத்துவ குணம் வாய்ந்தவை. வேப்பமரத்தின் துளிர், முதிர்நத இலை இவற்றை நிழலில் உலர்த்தி இடித்து பொடிசெய்து இதன் எடைக்கு அரைப் பங்கு ஓமமும், உப்பும் சேர்த்துப் பொடித்து வைத்துக்கொண்டு தினமும் காலையில் வெறும் வயிற்றில் அரைக்கரண்டி அளவு எடுத்துத் தேனில் குழைத்து அருந்திவரவும். இவ்வாறு 40 நாள்கள் கடைப்பிடிக்க புழு வெட்டு, வயிற்றுப் புழு, மாலைக்கண், கண்ணிலிருக்கும் படலமறைப்பு, கழிச்சல், வெள்ளைபடுதல், கழிச்சல், கட்டிகள் போன்ற நோய்கள் அகலும்.

வேப்பிலை தனித்தேனும் சிறிது மஞ்சள் சேர்த்தேனும், வெந்நீர் விட்டரைத்து சீலையில் தடவித் தடவிவர கரப்பான், சொறி, சிரங்கு அம்மைப்புண் இவைகள் நீங்கும், எரிச்சல் அதிகம் இருந்தால் அரிசி மா கூட்டிக்கொள்ளலாம்.

மூன்று வேப்பிலையுடன் ஒன்பது மிளகையும் 2 கிராம் கற்பூரத்தையும் சேர்த்து அரைத்து தலைவலி உள்ள இடத்தில் பற்றிடப் பூரண குணமுண்டாகும்.

சேத்துப் புண் குணமாக கால் சந்துகளை நன்கு சுத்தம் செய்து விட்டு அரைத்த வேப்பிலையைத் தடவிவர எரிச்சல் நீங்கி குணமடையும், மேலும கால்களில் ஏற்படும் பித்த வெடிப்புக்கு இலையையும் சம அளவு மஞ்சலையும் சேர்த்தரைத்து பற்றிட ஐந்தே நாள்களில் குணம் காணலாம். கட்டி, சிலந்தி இவற்றுக்குப் பற்றிட பழுத்து உடைந்து குணமாகும். மேலும், தீப்புண்களுக்கு தடவிவர வெகு சீக்கிரம் புண் ஆறிவிடும்.

வேப்பங் குச்சிகளைக் கொண்டு பல் துலக்கி வந்தால் ஆயுள் வரை பற்களை இழக்காமல் பல் சம்பந்தமான நோய்கள், பல் சொத்தை இவற்றுக்கு ஆளாகாமல் வாழலாம் என்பது அனைவருக்கும் தெரிந்த ஒன்றே.

புழு, பூச்சி, செல் முதலியவைகளால் நேரிடும் துன்பங்களைப் போக்கி இலையை நிழலில் உலர்த்தி பொடித்து நெருப்பில் போட்டு புகைக்க கொசு போன்ற பூச்சியினங்கள் மடியும்.

### வேப்பம் பூ

பூவை குடிநீரிட்டு அதாவது ஒரு கொத்துப் பூவிற்கு 2 ரம்பளர் தண்ணீர் ஊற்றி 3/4 ரம்ளராகச் சுருக்கி அருந்த அது உடம்பில் தோன்றும் பலக் குறைவைப் போக்கும். குன்ம நோயைக் கண்டிக்கும். சுவையின்மை, வெறும் வயிற்றில் ஏப்பம் முதலியன படிப்படியாகக் குறையும். குழந்தைகளுக்கு வயிறு சுத்தப்படும். பசி நன்றாக எடுக்கும். வேப்பம் பூவை நெய்விட்டு வதக்கி அதனுடன் புளி, மிளகு, உப்பு, சீரகம், கறிவேப்பிலை முதலியவைகளைச் சேர்த்துத் துவையல் செய்து, சாதத்துடன் சேர்த்துச் சாப்பிட்டு வரப் பித்த நீர் சுரப்பதை கட்டுப்படுத்தும். இதனால்

ஆரோக்கியன்

காமாலை ஏற்பட வாய்பிருக்காது.

குழந்தைகளுக்கு வாரத்திற்கு ஒருமுறை எண்ணெய் முழுகச் செய்யும் நாள்களில் ஒரு சுண்டைக் காயளவு இந்தத் துவையலை வெந்நீரில் கரைத்துத்தர வயிற்றிலுள்ள கிருமிகள் நாசமடையும். இரவில் குழந்தைகள் தூங்கும்போது பற்களைக் கடிக்கமாட்டார்கள்.

### மகோதரத்துக்கு அற்புத சிகிச்சை

வேப்பம் பூ 35 கிராம் சீரகம் 30 கிராம் இரண்டையும் ஒரு சட்டியில் போட்டு லேசாக வறுத்து, புகைவரும் சமயம் 400 மி.லீ. தண்ணீர் விட்டுக் கொதிக்க வைத்துப் பாதி சுண்டிய பின் வடிகட்டிக் கொடுக்கவும். இவ்வாறு 2 வேளையும் அருந்த ஈரல் நன்கு வேலை செய்யத்தொடங்கி வயிறு வீக்கம் வற்றும். அதிகமான சீதளத்தினால் பாதிக்கப்பட்டுத் தொண்டைப்புண் ஏற்பட்டால் வேப்பம் பூ ஒரு கொத்து, வெண்டிக்காய் 12, தண்ணீர் 1/4 லீற்றர் எடுத்துக்கொண்டு வெண்டிக்காயை சிறு சிறு துண்டுகளாக வெட்டி கொதிக்கும் நீரில் போட்டு, பூவையும் சேர்த்து மூடிவிடவும். 15 நிமிடம் கழித்து வெந்நீர் ஆவியை தொண்டையினுள் நன்றாகச் செல்லும்படி வாயைப் பாத்திரத்தின் விளிம்பருகே வைத்து ஆவி பிடிக்க வேண்டும். உடனே குணம் காணலாம்.

வேப்பம் பட்டை உடலைக் கெட்டிப்படுத்தி இரத்த நாளத்தைப் பலப்படுத்தி நரமபுகளுககு முறுக்கேற்றி வலுவுண்டாக்கும் தன்மையுடையது. தொடர்ந்து போகும் வயிற்றுப் போக்கை நிறுத்த 10 கிராம் வேப்பம் பட்டையையும் 10 கிராம் நாவல்ப் பட்டையையும் பொடித்துக் கொள்ள வேண்டும். பின்பு இத்துடன் 5 கிராம் மிளகுத் தூளும் சேர்த்து 2 ரம்ளர் நீர் ஊற்றி அருந்த குணமாகும். மலச்சிக்கல் நீங்க 5 கிராம் வேப்பம் பட்டைத் தூளை 200 மி.ல. பசுபாலில் கலந்து காலையில் மட்டும் 7 நாள்கள் தொடர்ந்தும் சாப்பிட நீங்கும். பின் இயற்கையாக தினசரி மலங்கழியும்.

சிறுநீரில் இரத்தம் கலந்து வெளியேறுகிற நோய்களுக்கு 10 கிராம் வேப்பமரப் பிசினுடன் 10 கிராம் கசகசா காயவைத்துக் கொள்ளவேணடும். ஒரு நாளைக்கு 3 வேளையாக 100 மி.லீ. பசும் பாலில் அரைத் தேக்கரண்டி அளவு இத் தூளைப் போட்டு கலக்கி தொடர்ந்து 3 நாள்கள் கொடுக்க சிறுநீரில் இரத்தம் வருவது நீங்கும்.

# எமது விடுதலைப் போராட்டத்துக்கு வலுச்சேர்த்தவர்கள் கூட்டுறவாளர்களே!

## கூட்டுறவு தின விழாவில் துணைப் பொறுப்பாளர் தங்கன் உரை



வட்டக்கச்சி,ஓக.9

எமது தாயகத்தில் விடுதலைப் போராட்டம் நடைபெற்ற காலங்களில் கூட்டுறவாளர்களே எமது வலது கரமாகச்செயற்பட்டார்கள். இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் சோ.தங்கன் தெரிவித்தார்.

கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்ற கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவுதின விழாவில் சிறப்புரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:-

போர் நடைபெற்ற காலங்களில் தமது உயிரையே துச்சமென மதித்து களம் சென்று செயற்பட்டவர்கள் இக் கூட்டுறவாளர்களே. புலம்பெயர்ந்த அனைவருக்குமே தமது சேவைகளை அளித்து உதவி புரிந்துள்ளனர்.

இவர்களது சேவைக்கு நாம் தலைவணங்கி நிற்பதுடன் தேசியத்தலைவர், தளபதிகள், பொறுப்பாளர்கள், போராளிகள் சார்பில் எமது வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

இவர்கள் தொடர்ந்தும் எமது தேசத்துக்குப் பல சேவைகளை ஆற்றவேண்டும் என்றார்.

அன்று காலை 9.30 மணிக்கு ஆரம்பமான மேற்படி விழாவில் அரசியல்துறைத் துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் தமிழீழத் தேசியக் கொடியையும், கிளிநொச்சி மாவட்டக்கூட்டுறவுச் சபைத் தலைவர் அகேதீஸ்வரன் மாவட்டக் கூட்டுறவுச் சபைக் கொடியையும் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கந்தசாமி கிளிநெச்சி கூட்டுறவுத் திணைக்களக் கொடியையும் ஏற்றிவைத்தனர். அடுத்து மாவட்டக் கூட்டுறவுச் சங்கங்களின கொடிகளை அவ்வவ் கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள் ஏற்றிவைத்தனர்.

தொடர்ந்து விழாக்குழுத் தலைவர் க.தர்மசூரியர் தலைமையில் ஆரம்பமான நிகழ்வில் தேசிய கூட்டுறவுச்சபைத் தலைவர் பன்துரணவக, தமிழ்க்கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் கி.சிவனேசன், கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரச அதிபர் நா.வேதநாயகம் ஆகியோர் சிறப்புரைகளை நிகழ்த்தினார்கள். மாவட்டக் கூட்டுறவுத்தினப் போட்டிகளில் வெற்றி பெற்றோருக்கான பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. (8-405-201)

# முல்லைத்தீவு வைத்தியசாலையில் எக்ஸ்ரே வசதி இல்லை.

ஒட்டுசுட்டான்,ஓக.9

முல்லைத்தீவு மாவட்ட அரசினர் வைத்தியசாலை இராணுவ நடவடிக்கை காரணமாக முற்றாகச் சேதமடைந்து மீண்டும் புனரமைக்கப்பட்டு இயங்கி வருகின்றது.

எனினும், மேற்படி வைத்தியசாலையில் எக்ஸ்ரே வசதிகள் இன்மையால் புதுக்குடியிருப்பு, கிளிநொச்சி ஆகிய பகுதிகளில் உள்ள நோயாளர்கள் சிகிச்சைக்காக வவுனியா செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

வன்னிப்பகுதி வைத்தியசாலைகளுக்கு குறைந்தளவு மருந்து அனுப்பிவைக்கப்படுவதால் வைத்தியர்கள், நோயாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(8-341-201)

# உள்ளூராட்சி உதவியாளர் நியமனம் இல்லை; முல்லை. மாவட்டத்தில் பணிகள் ஸ்தம்பிதம்

## உதவி ஆணையாளர் கவலை

யாழ்ப்பாணம்,ஓக.9

முல்லைத்தீவு மாவட்டத்திற்கு உள்ளூராட்சி உதவியாளர்கள் நியமனம் செய்யப்படவில்லை. இதனால், உள்ளூராட்சித் திணைக்கள வேலைகளை முன்னெடுக்க முடியாதுள்ளது. இவ்வாறு கவலை தெரிவித்தார் முல்லைத்தீவு மாவட்டப் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரி.வி.கிருஸ்ணசாமி.

நியமன விடயம் தொடர்பாக அவா மேலும் தெரிவித்ததாவது:-

பொது நிர்வாக அமைச்சின் கீழ் வடக்கு - கிழக்கில் உள்ள 72 சபைகள் உள்ளன. முல்லைத்தீவு மாவட்டத்தில் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் கீழ்வரும் 4 உள்ளூராட்சி சபைகளுக்கு மாகாண பொது நிர்வாக அமைச்சு 17.05.1999இல் நியமனம் வழங்கும்போது முல்லைத்தீவு மாவட்டத்திற்கு ஓர் உள்ளூராட்சி உதவியாளர் கூட நியமனம் செய்யப்படவில்லை.


இதனால், உள்ளூராட்சி சபை அபிவிருத்திப் பணிகளை முன்னெடுத்துச் செல்ல முடியாதுள்ளது.

எனவே, மேற்படி விடயம் குறித்துதான் உள்ளூராட்சி ஆணையாளரதும், மாகாண பொது நிர்வாக அமைச்சின் செயலாளரதும் கவனத்திற்குக் கொண்டுவந்து எதிர்காலத்தில் உள்ளூராட்சி உதவியாளரை நியமனம் செய்ய நடவடிக்கை எடுக்கவுள்ளேன்.

வன்னி மாவட்டத்திற்கு நியமனம் செய்யப்பட்டுள்ள அதேநேரம், முல்லைத்தீவு மாவட்டம் புறக்கணிக்கப்பட்டது ஏன் என்பது புரியவில்லை - என்றார் அவர்.

இதேவேளை, உள்ளூராட்சி உதவியாளர் சங்கம் வெற்றிடமாகவுள்ள சபைகளுக்கு நியமனம் வழங்குமாறு ஏற்கனவே பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் திருமதி கமலா சிவசிதம்பரத்திற்கும், மாகாண உள்ளூராட்சி உதவி ஆணையாளர் செல்வி தெ.து.விஜயலட்சுமிக்கும் கடிதம் அனுப்பியுள்ளனர்.

(8-185)





இந்திய நாட்டிய கலைஞர் ஜாகீர் உசேன் அண்மையில் கிளிநொச்சிக்கு விஜயம் செய்து பாடசாலை மாணவர்களுக்கு நாட்டியப் பயிற்சிகளை வழங்கினார். நாட்டிய முறை ஒன்றை அவர் மாணவிகளுககு செய்துகாட்டுவதையும பயிற்சியில் கலந்துகொண்ட ஒரு தொகுதி மாணவிகளையும் படங்களில் காணலாம். *(படம் : வட்டக்கச்சிச் செய்தியாளர்)*

# கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகளில் மருத்துவப் பரிசோதனைச் செயற்றிட்டம்

கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகளில் தரம்-1முதல் தரம் 5 வரை கல்வி கற்கும் அனைத்து மாணவர்களையும் மருத்துவப் பரிசோதனைக்குட்படுத்தும் பாடசாலை மருத்துவப் பரிசோதனைச் செயற்றிட்டம் ஒன்றினைக் கிளிநொச்சி மருத்துவர் சங்கம் நடைமுறைப் படுத்தவுள்ளது.

இதன்மூலம் ஆரோக்கியமான சிறுவர்களைக் கல்வியில் முன்னேற்றமுடியும் என மருத்துவர் சங்கத்தினர் தெரிவித்தனர்.

இச்செயற்றிட்டத்தின் ஆரம்பக் கட்ட நடவடிக்கையாகக் கடந்த வெள்ளிக்கிழமை மத்திய கல்லூரி, புனித திரேசா பெண்கள் கல்லூரி, கிளிநொச்சி ம.வி, கனகபுரம் ம.வி. ஆகிய பாடசாலைகளில் மருத்துவப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. இது கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகள் அனைத்துக்கும் விஸ்தரிக்கப்படும். (8-405)

## 'ரிவிபல' இராணுவ நடவடிக்கையின்போது

# சேதமடைந்த வீடுகளைப் புனரமைக்க முன்னுரிமை அளிக்கப்படவேண்டும்


## சம்பந்தப்பட்டோர் கோரிக்கை

ஒட்டுசுட்டான்,ஓக.9

'ரிவிபல' இராணுவ நடவடிக்கை மூலம் முற்றாகவும் பகுதியாகவும் சேதமடைந்த வீடுகளைப் புனரமைப்பதற்கு முன்னுரிமை அளிக்கப்படவேண்டும் என சம்பந்தப்பட்ட வீடுகளின் உரிமையாளர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

மேற்படி இராணுவ நடவடிக்கை காரணமாகப் பல பெறுமதியான உடைமைகளை இழந்தது மட்டுமல்லாது பலர் வீடுகளையும இழந்துள்ளனர். இவர்களில் சிலருக்கு மீள் குடியேற்றப் பணமாக ஒரு லட்சம் ரூபா மற்றும் 25 ஆயிரம் ரூபா தொகைகள் வழங்கபபட்டன. மீதிப்பணம்வழங்கப்படவில்லை.

எனவே, புதிய வீட்டுத்திட்டத்துக்கு முன்னர் மீதி மீள் குடியேற்றப் பணத்தை வழங்கி இழந்த, சேதமடைந்த வீடுகளின் புனரமைபபுப் பணிகளுக்கு முன்னுரிமை வழங்கவேணடும் என சம்பந்தப்பட்டோர் அரசிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (8-341-201)




# உலக வங்கியின் நிதியுதவியுடன் கிளிநொச்சியில் 100 வீடுகள்

கிளிநொச்சி,ஓக.9

கிளிநொச்சி மாவட்டத்தில் வசிக்கும் வீடற்ற மக்களுக்கு உலகவங்கி 100 வீடுகளை அமைத்துக்கொடுக்க நடவடிக்கை எடுத்துள்ளது.

உலக வங்கியின் திட்டத்தின் கீழ் கிளிநொச்சி மாவட்டத்தில் பரீட்சார்த்தமாக 100 வீடுகளை அமைத்து இருப்பிடமற்ற மக்களுக்கு வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன்முதற்கட்டமாகக் கடந்த மாதம் 14 ஆம் திகதி கிளிநொச்சி ஆனந்த நகர்ப் பகுதியில் 50 வீடுகள் அமைப்பதற்கான அடிக்கல்லினைக் கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரச அதிபர் நா.வேதநாயகம் நாட்டிவைத்தார்.

இத்திட்டததின் கீழ் பரீட்சார்த்தமாகக் கிளிநொச்சி ஆனந்தநகர்ப் பகுதியில் 50 வீடுகளும், பளை, பச்சிலைப்பள்ளியில் 25 வீடுகளும், பூநகரிப் பகுதியில் 25 வீடுகளும் அமைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது(8-7-201-411)

# பஸ்சேவை பாதை திடீரென மாற்றம்; கோணாவில் பகுதி மக்கள் சிரமம்

ஸ்கந்தபுரம்,ஓக.8

அக்கராயனில் இருந்து கோணாவில் ஊடாக நடத்தப்பட்டுவந்த பேருந்துச் சேவைகள் யாவும் தற்போது ஸ்கந்தபுரம் ஊடாக நடைபெறுவதால் கோணாவில் பிரதேச மக்கள் போக்குவரத்துக்குப் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

கோணாவில் மரப்பாலம் பழுதடைந்திருந்த காலப்பகுதியில் அக்கராயன் ஊடாக நடைபெற்று வந்த இப்பேருந்துச் சேவைகள் மரப்பாலம் பாவனைக்கு வந்தும் ஸ்கந்தபுரம் ஊடாகவே நடைபெறுகின்றன.

இதனால், கோணாவில் பகுதியில் உள்ள மாணவர்கள் உட்பட அனைத்துப் பயணிகளும் நீண்டதூரம் நடந்து அல்லது சைக்கிள்களில் சென்றுதான் பஸ் நிலையத்தை அடையவேண்டி உள்ளது.

எனவே, இதுகுறித்து உரியவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று இப்பகுதி மச்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (8-201-381-203)



பரந்தன், உமையாள்புரம் பகுதியில் முன்னைய ரயில்நிலைய வீதிக்கு அருகில் குப்பைகள், கழிவுப் பொருள்கள் கொட்டப்படுவதால் அப்பகுதியில் துர்நாற்றம் வீசுகிறது. கரைச்சிப்பிரதேச சபையினரும் உழவு இயந்திரம் மூலம் இப்பகுதியில் குப்பைகளைக் கொட்டி வருகின்றனர். இதனை இப்பகுதி மக்கள் உரியவர்களிடம் எடுத்துக்கூறியும் பயனில்லை உழவு இயந்திரம் ஒன்று குப்பை கொட்டும் காட்சி இது. *(படம்: பரந்தன் செய்தியாளர்)*

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

பெண் உத்தியோகத்தர் ஒருவரின் தனிப் பாவனையுள்ள சிவப்புநிற சாளி மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. (பழைய லான்சர் இனம்) NPGH இலக்கமுடையது. தொடர்பு: T.P.: 222 6286. (34996)

## வீடு விற்பனைக்கு

யாழ். நகருக்கு உட்பட்ட பகுதியில் OLR சேச் அருகில் 3½ பரப்பளவு கொண்ட வீடும் வளவும் விற்பனைக்குண்டு. தரகர் இன்றி தொடர்புகொள்ளவும். தொடர்பு: 680, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். T.P. 222 7193, 077 6192347. (35003)

கோண்டாவில் பஸ் டிப்போவிற்கும் உரும்பிராய் சந்திக்கும் இடையில் பலாலி வீதியிலிருந்து மூன்றாவது ஒழுங்கையொன்றில் 2½ பரப்புக் காணி தனிக்கிணற்றுடன் மாடி வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு:222 2478. (35046)

## கார் விற்பனைக்கு

வீட்டுப் பாவனையில் இருந்த நல்ல நிலையிலுள்ள 6ஸ்ரீ XXXX தொடர் இலக்கமுடைய மொறிஸ் ஒக்ஸ்போட் கார் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு:V.K.பத்மநாதன், ரங்கனாஸ், 74V, பஜார் வீதி, வவுனியா. 024 4589384.(35028)

## திகதி காலாவதியான பொருள்கள் அழிப்பு

தென்மராட்சி,ஓக.9

சாவகச்சேரி சுகாதாரத் திணைக்களத்தினர் சாவகச்சேரிப் பகுதி வர்த்தக நிலையங்களில் திடீர்ப்பரிசோதனைகளை நடத்தி திகதி காலாவதியான பொருள்களைக் கைப்பற்றி அழித்து வருகின்றனர். (எ-117)

# மாகாண அரச அலுவலர்கள் இடமாற்றத்துக்கு விண்ணப்பிக்கலாம்

## பொதுநிர்வாக அமைச்சுச் செயலர் அறிவிப்பு

தென்மராட்சி,ஓக.9

வடக்கு - கிழக்கு மாகாண அரச சேவை உத்தியோகத்தர்களுக்கான 2005ஆம் ஆண்டுக்கான வருடாந்த இடமாற்றத்துக்கான விண்ணப்பங்கள், மாகாண பொது நிர்வாக உள்ளூராட்சி, கூட்டுறவு, கிராம அபிவிருத்தி, வீதி அபிவிருத்தி, கைத்தொழில் அமைச்சின் செயலாளரினால் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பங்களை எதிர்வரும் 20 ஆம் திகதி பெற்று 31 ஆம் திகதிக்கு முன்னர் தமக்கு அனுப்பிவைக்கவேண்டுமென மாகாணப் பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் திருமதி க.சிவசிதம்பரம் சம்பந்தப்பட்டவர்களைக் கேட்டுள்ளார்.

ஒரே பிரதேசத்தில் ஒரே திணைக்களத்தில் அல்லது அமைச்சில் அல்லது நிறுவனத்தில் 2004ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31ஆம் திகதியளவில் தொடர்ச்சியாக ஐந்து வருடங்கள் சேவைக் காலத்தைப் பூர்த்திசெய்த சகல உத்தியோகத்தர்களும் விண்ணப்பிக்க வேண்டும் எனவும் -

ஏதாவதொரு சேவை நிலையத்தில் இரண்டு வருடங்கள் சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்த உத்தியோகத்தர் விரும்பினால் இடமாற்றலுக்கு விண்ணப்பிக்கமுடியுமெனவும் - அவர் அறிவித்துள்ளார்.

அநேக உத்தியோகத்தர்கள் மிகவும் வசதியான நிலையங்களில் ஐந்து வருடங்களுக்கு மேல் சேவையாற்றிக்கொண்டிருக்க பல அலுவலர்கள் மிகவும் கஷ்டமான நிலையங்களில் பல வருடங்களுக்கு மேல் தொடர்ந்தும் சேவையாற்றிக்கொண்டிருக்கின்றார்கள் என்றும் -

இந்நிலையில், எல்லா உத்தியோகத்தர்களுக்கும் சம வாய்ப்பினை வழங்குவதற்காகவும், உத்தியோகத்தர்கள் ஒரே திணைக்களத்தில் ஒரே சேவை நிலையத்தில் தொடர்ந்தும் கடமையாற்றுவதால் அலுவலக நிர்வாகத்தில் எழும் பிரச்சினைகளைத் தவிர்க்குமுகமாகவும், இந்த இடமாற்றத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது என்றும் - இது குறித்து அவர் விடுத்த சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ-117)

## தென்மராட்சியில் சின்னமுத்துத் தடுப்பூசி

தென்மராட்சி,ஓக.9

சாவகச்சேரி சுகாதாரத் திணைக்களத்தினரும் சாவகச்சேரி நகரசபையினரும் இணைந்து இளைஞர், யுவதிகளுக்கு சின்னமுத்து மற்றும் ஜேர்மன் சின்னமுத்து (எம்.ஆர்.) தடுப்பூசி மருந்தினை வழங்கவுள்ளனர்.

16 வயதுக்கும் 20 வயதுக்கும் உட்பட்ட இளைஞர், யுவதிகளுக்கே தடுப்பூசி மருந்து செப்ரெம்பர் மாதம் 11ஆம், 12ஆம் திகதிகளில் வழங்கப்படவுள்ளது.

தடுப்பூசி மருந்து வழங்குவது தொடர்பான பதிவுகள் அந்தந்தப் பகுதி குடும்பநல உத்தியோகத்தரிடம் (மருத்துவ மாது) மேற்கொண்டு மேற்படி திகதிகளில் ஆரம்பசுகாதார நிலையங்களில் தடுப்பூசி மருந்தினை ஏற்றிக்கொள்ளுமாறு நகரசபைச் செயலாளர் மு.செ.சரவணபவ அறிவித்துள்ளார். (எ-117)

## ஏல விற்பனை

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலய பழைய சித்திரத் தேரினுடைய இரும்புகள் ஏலத்தில் விடப்படவுள்ளன. அதாவது எதிர்வரும் சனிக்கிழமை (14-08-2004) அன்று காலை 11மணியளவில் ஏலம்கூறப்படும்.

குறிப்பு: ஏலத்தில் பெறுபவர் முழுத் தொகையையும் அன்றையதினமே செலுத்தி அப்பொருள்களை அன்றையதினமே எடுத்துக்கொள்ளல்வேண்டும்.

தொடர்புகளுக்கு:
செல்வச்சந்நிதி ஆலய
(சி-36481) திருப்பணிச்சபை.

## வைத்தியம்

செங்கண்மாரி, அல்சர், ஆஸ்துமா, வாதநோய்கள், வலிப்பு நோய், பீனிசம், தலையிடி, தலைகால் அவியல், சருமநோய்கள், மாதவிடாய்க்குத்து, இரத்தப்போக்கு, வெள்ளைக்கசிவு, கருவழிதல், மகப்பேறின்மை, குழந்தை வைத்தியம், வீரியக்குறைவு, மூலவியாதிகள், மூத்திரரோகங்களில் பிரபல்யமானவர்.

சகல வியாதிகளையும் குணப்படுத்துபவர்:

வேலணை வைத்திய கலாநிதி
**சி.இராசரத்தினம்**
121, 2ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி எண் : 222-2459
(35035)

## நெஞ்சைவிட்டு அகலாத 7ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் உதயம் 13 - 11 - 1978



மண்ணிற்காக வீரமரணம் 09 - 08 - 1997

### மேஜர் துஷா [மாலதி]

### தங்கராசா பாமினி

(கொம்மந்தறை, வல்வெட்டித்துறை)

*எங்கள் அன்புச் சகோதரி துஷாவே! எம் தானைத் தலைவனாம்*
*அண்ணன் பிரபாவின் வழியில் ஒடுக்கப்பட்ட இனத்தின்*
*விடிவிற்காய் வீரமுடன் எழுந்த எம் வீரப்பெண்ணே!*
*நீ புலியாகி பாசறை நோக்கிச் சென்றனையே!*
*கந்தகப்பொதி சுமந்து உன்கடமைதனை நிறைவேற்றி*
*காலன் அவன் கையில் நீ கரைந்து*
*ஆண்டுகள் ஏழு ஆனதம்மா!*
*கல்லறையில் மீளாத்துயில் கொள்ளும்*
*எம் சின்னவளே நாம் என்றும் உன்நினைவுகளுடன்...*

அம்மா: பரமேஸ்வரி, அத்தான: சுகுமார், அக்கா: உமா, பெறாமகன்: சங்கீத், பெறாமகள்: சிநேகா (தூஷா - சுவிஸ்), அண்ணன்: தசிதரன் (லண்டன்), அண்ணி: சுகனியா (இந்தியா), மருமகள்: ஜனனி (இந்தியா), அண்ணன்: தசிபரன் (கனடா), மச்சான்: ரூபன் (கனடா), உற்றார், உறவினர்.

கொம்மந்தறை,
வல்வெட்டித்துறை.

தகவல்:
அம்மா: **பரமேஸ்வரி**
(34777)(34-14)

எங்கள் தேசத்தின் மாவீரர்களையும் இந்நாளில் நாம் நினைவு கூருகின்றோம்.

## மரண அறிவித்தல்

### நடராசா இலட்சுமிப்பிள்ளை

(நெடுந்தீவு)



நெடுந்தீவு 5 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நடராசா இலட்சுமிப்பிள்ளை அவர்கள் 07.08.2004 இல் பிரான்ஸில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வைத்திலிங்கம் - சிவகாமிப்பிள்ளை தம்பதிகளின் மகளும் காலஞ்சென்ற பொன்னையா - செல்லம்மா தம்பதிகளின் மருமகளும் காலஞ்சென்ற நடராசா (முன்னாள் முகாமையாளர், நெடுந்தீவு பல நோ.கூ.சங்கம்) அவர்களின் அன்பு மனைவியும் கமலாம்பாள், திருநாவுக்கரசு, குணசிங்கம், இராசேஸ்வரி, காலஞ்சென்ற குணவதி, கணேசகுமார், இராசேந்திரன், நகுலேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும் சிவராசா, இரத்தினேஸ்வரி, பரமேஸ்வரி, புண்ணியமூர்த்தி, இராசேஸ்வரி, ரமணி, சத்தியமூர்த்தி ஆகியோரின் அன்பு மாமியும் காலஞ்சென்ற தையல்முத்து, கணபதிப்பிள்ளை, குமாரசாமி, சுவாமிநாதன், முத்துப்பிள்ளை, கனகசபை, முத்துக்குமாரு ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பிரான்ஸில் நடைபெறவுள்ளன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

63/2, மலர்மகள் வீதி,
அரியாலை.
(35048)(34-16-14)

தகவல்:
ந.கணேசகுமார்
(மகன்).

## பதவி வெற்றிடம்

யாழ். நகரில் இயங்கும் மொத்த விற்பனை நிலையத்துக்கு கீழ்க்காணும் பதவிகளுக்கு ஆள்கள் தேவை.

1. அலுவலக லிகிதர் (பெண்கள்)
2. விநியோக ஊழியர்கள் (ஆண்கள்)

மேற்படி பதவிகளுக்கு விண்ணப்பிப்போர் 20.08.2004 இற்கு முன் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

விளம்பர இல.: 2343,
மே/பா உதயன், யாழ்ப்பாணம். (35043)(34-14-16)

## ஓராண்டு நினைவஞ்சலி

*தோற்றம்* 23 – 04 – 1953



*மறைவு* 23 – 07 – 2003

### அமரர் சிற்றம்பலம் ராதாகாந்தி

திதி: 09.08.2004

நகர்ந்தது ஆண்டு ஒன்று
நாம் இங்கு ஆறவில்லை - இன்னும்
வேண்டியதை தரும் அந்த இறைவனிடம்
வேண்டிடுவோம் ஆத்மசாந்தி கொடு என்று
சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

உங்கள் பிரிவுத் துயரில்:
சி.சிற்றம்பலம் (காந்தி - தங்கை)
மனைவி, பிள்ளைகள் (கனடா).

புலோலி கிழக்கு,
புலோலி.
(34949)(34-14)

## தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சை-2004

### மாதிரி வினாத்தாள் இல.07 விடைகள்

### வினாத்தாள் I

01) குளத்தின் 02) உறைக்கும்
03) 1 04) 1

| | | | |
|---|---|---|---|
| 05) 4 | 06) 4 | 07) 2 | 08) 2 |
| 09) 3 | 10) 2 | 11) 3 | 12) 2 |
| 13) 3 | 14) 4 | 15) 3 | 16) 3 |
| 17) 1 | 18) 1 | 19) 1 | 20) 3 |
| 21) 2 | 22) 47 | 23) 5 | 24) 9 |
| 25) 4 | 26) 2 | 27) 3 | 28) 1 |
| 29) × | 30) ✓ | 31) ✓ | 32) 3 |
| 33) 3 | 34) 2 | 35) 2 | 36) 8.30 |
| 37) 1 | 38) 2 | 39) 3 | 40) 4 |

### வினாத்தாள் II

(1)
01) காலைக்காட்சி
02) நிகழ்காலம்
03) விண்மீன்களின்
04) சூரியன் 5) மேற்கோட்குறி
06) மெல்லமெல்ல
07) தங்கத் தகட்டுக்கு
08) நட்சத்திரங்கள்/உடுக்கள்/தாரகைகள்
09) நடுவில்/மையத்தில்
10) இருள் 11) கூட 12) வைரத்தை
13) விரிகின்றது 14) அவளை 15) துணைவி
16) வானம் 17) ஒளி 18) மலர்கள்
19) கிழக்கு 20) தாமரை

02)
01) (அ) இஸ்லாமியர்
(ஆ) திருக்குர் ஆன்
(இ)1. ரம்ழான்
2. ஹஜ்
02) (அ) இந்துக்கள்
(ஆ) வேதசிவாகமம்
(இ)1. தீபாவளி
2. நவராத்திரி
03) (அ) கிறிஸ்தவர்கள்
(ஆ) பைபிள்
(இ)1. நத்தார்
2. ஈஸ்டர்
04) (அ) பௌத்தர்கள்
(ஆ) திரிபீடகம்
(இ)1. வெசாக்
2. பொசன்

03) 01) முன்னால் வீதித்திருத்தம்
02) முன்னால் ஒளிச் சமிக்ஞை
03) முன்னால் இடப்பக்க வளைவு
04) முன்னால் பாதசாரிகள் கடவை

04) 01) 260Km 02) 376Km 03) 364Km

05) 01) வடமேற்கு 02) பசுவுக்கு
03) கிழக்கு 04) மேற்கு
05) தெற்கு 06) வீடு

06) 01) இலையான்/வீட்டுஈ 02) தும்பி
03) வெட்டுக்கிளி

07)
01) Eyes
02) Village
03) Umbrella
04) Garden

08)
01) மரங்கள் 02) மிருகக்காட்சிச்சாலை
03) இரவு 04) வண்ணத்துப்பூச்சி

09) 01) நீர்ச்சக்கரம்
02) நீரின் இயக்கசக்தி
03) மின்சாரத்தை
04) நீரின் வேகத்தை அதிகரித்தல், தட்டுகளின் எண்ணிக்கையை அதிகரித்தல்

10) 01) அலுமினியம் 02) வேம்பு
03) யூரியா 04) இறப்பர்
05) கண்ணாடி

11) 01) ரூபா 35.25
02) 151 ரூபா
03) 100 ரூபா, 5 ரூபா, 2 ரூபா, 1 ரூபா
04) 71 ரூபா
05) ரூபா 348.75

12) 01) தபாற்கந்தோர்
1. ரூபா 450 சதம் 00
2. நானூற்றைம்பது ரூபா
3. திருகோணமலை
4. க.சுதாகரன்
5. ம.கமலசிங்கம்
6. இல.25, மத்திய வீதி, விருதுநகர்
7. பொருத்தமானதிகதி/கையொப்பம்

13) பொருத்தமான கருத்துடைய வசனங்கள்

**புள்ளித்திட்டம்**

**வினாத்தாள் I**

40x2½=100 புள்ளிகள்

**வினாத்தாள் II**

| | |
|---|---|
| 01) | 20 புள்ளிகள் |
| 02) | 16 புள்ளிகள் |
| 03) | 04 புள்ளிகள் |
| 04) | 03 புள்ளிகள் |
| 05) | 06 புள்ளிகள் |
| 06) | 03 புள்ளிகள் |
| 07) | 04 புள்ளிகள் |
| 08) | 04 புள்ளிகள் |
| 09) | 04 புள்ளிகள் |
| 10) | 05 புள்ளிகள் |
| 11) | 11 புள்ளிகள் |
| 12) | 12 புள்ளிகள் |
| 13) | 08 புள்ளிகள் |
| மொத்தம் | 100 புள்ளிகள் |

# கண்ணிவெடிகளின் கதை!

நிலக்கண்ணி என்பது நிலத்துக்கடியில் அல்லது நீருக்கடியில் மறைத்து வைககப்படும் வெடிக்கும் பொருளாகும். ஆரம்பகாலங்களில் பாதுகாப்பு படையகளினாலேயே தற்பாதுகாப்பின் நிமித்தம் பயன்படுத்தப்பட்டு வந்தன. இவ்வாறான கண்ணிவெடிகள் முதலில் சிறு அறைகள் அல்லது கிடங்குகளில் மறைவாக நிரப்பிவைக்கப்பட்டன. பாதுகாப்பு அரண்களுக்கு அடியில் இம்மாதிரி ஏற்பாடுகளை செய்துவைப்பது அக்காலத்தில் வழக்கத்தில் இருந்தது. பெருமெடுப்பில் போராட்டங்கள் நடைபெறும்போது இவை வெடிக்கவைக்கப்படும்.

இன்று பாவனையிலுள்ள கண்ணிவெடிகள் தாமாகவே வெடிக்கும் தன்மை கொண்டவை. இலக்குவைக்கப்படும் வாகனம் அல்லது ஆள் அருகில் வரும்போது அல்லது தொடும்பொழுது மற்றும் கடந்துசெல்லும் பொழுது இவை வெடிக்கக்கூடியவை.

கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டுள்ள பகுதியும் கண்ணிவெடிகளும் (Mine Field) என்று அழைக்கப்படும்.

ஆள்களுக்கு குறிவைத்து வைக்கப்படும் கண்ணிவெடிகள் சிறியவை, அதிக செலவில்லாதவை. இவைகளை எளிதாகப் புதைத்துவிடலாம். கண்டுபிடிப்பது கடினம். இம்மாதிரியான வெடிகள் மிதிவெடிகள் என்று வழங்கப்படுகின்றன. ஒருவர் அதனை மிதிக்கநேர்ந்தால் பெரும்சத்தத்துடன் அது வெடிக்கும்.

நிலக்கண்ணி வெடிகளை இலகுவில் தயாரித்துவிடலாம். விஷேசப் பயிற்சி ஏதும் தேவையில்லை. அதேபோல் அவைகளைப் புதைபபதற்கு விசேட கருவிகளும் அவசியமில்லை. ஆனால், நீருக்கடியில் வைக்கப்படுபவை அதிக செலவு பிடிப்பவை. நீருக்கடியில் பழுதடையாமல் நீடித்து இருக்கவேண்டியவை.

இவை கப்பல் அல்லது கடல் கண்ணிகள் என்று அழைக்கப்படும். இவைகளை நீருக்கடியில் வைப் பதற்கு நிறையப் பயிற்சி தேவை. விசேட கருவிகள் அல்லது விமா னங்கள் தேவைப்படும்.

கடல் கண்ணிகள் முதலாம் உலக யுத்தத்தின்போது (1914-1918), இரண்டாம் உலகப் போரின் போதும் (1939-1945) பெருமளவில் பரவலாகப் பயன்படுத்தப்பட்டன. வியட்னாம் போரின்போது கடல் கண்ணிகள் பெருமளவில் பயன்படுத்தப் பட்டுள்ளன.

இரண்டாம் உலகப் போரின்போது நிலக் கண்ணிகள் பெருமள்வில் பாவனைக்கு வந்த போதிலும், அதன் பிறகு எல்லாவித போர் பிணக்குகளின்போதும் பயன்பாட்டில் வந்து விட்டன.

இன்று பல நாடுகளில் போர் ஓய்வு ஏற்பட்டு பலகாலமாகிவிட்டபோதிலும், நிலக்கண்ணிகளின் அபாயம் இருந்துகொண்டுதானிருக்கின்றது.

பலநாடுகளும், அமைப்புக்களும் பொதுமக்களுக்கு அபாயம் விளைவிக்கும் கண்ணிவெடிகளைத் தடைசெய்ய வேண்டும் எனக் குரல் எழுப்பிவருகின்றன.

கண்ணிவெடிகள் அவை பொதுமக்களைக் குறியாக வைத்துப் பயன்படுத்தப்படுகின்றனவா? அல்லது தாங்கிகள், ராணுவ வாகனங்களைக் குறியாக வைத்துப் பயன்படுத்தப்படுகின்றனவா? என்ற வகையில் இரண்டு விதமாகப் பிரிக்கப்படுகின்றன.


1990ஆம் ஆண்டில் கனடா அரசின் வெளி

## சர்வதேச ஒப்பந்தங்களின் பயன்பாடு

நாட்டுக் கொள்கையில் நிலக்கண்ணிகளை இல்லாமல் செய்வது ஒரு பிரதான பிரச்சினையாக எதிர்நோக்கப்பட்டது. 1997இல் நிலக் கண்ணிவெடிகளின் உற்பத்தியையும் இராணுவத்தில் பயன்படுத்தப்படுவதையும் நிறுத்திவிடுவதென முடிவுசெய்தது. இவைகள் பெரும்பாலும் ஆள்களைக் கொல்வதையல்ல, முடமாக்குவதையே நோக்கமாகக் கொண்டவை.

கண்ணிவெடிகளை தடைசெய்யும் ஒப்பந்தத்தைக் கனடா முனைப்புடன் ஆதரித்துவந்தது. 1997 இல் இருநூற்றி இருபது நாடுகள் இதல் கையெழுத்திட்டன. அமெரிக்கா, ரஷ்யா மற்றும் சீனா ஆகிய நாடுகள் பங்குபற்றாவிடினும் 1999 ஆம் ஆண்டு இந்த ஒப்பந்தம் சர்வதேசச் சட்டமாக அமுலுக்கு வந்தது.

ஆள்களுக்குக் குறிவைத்துப் பயன்படுத்தப்படும் மிதிவெடிகள் பெரும்பாலும் ஒருவெடி பொருளையும் ஒரு வெடிக்கவைக்கும் சாதனத்தையும் கொண்டிருக்கும். இவை ஒரு பிளாஸ்டிக், உருக்கு அல்லது கார்ட்போட் அட்டையில் சுற்றப்பட்டிருக்கும். இவை சிறிய அளவிலானவை. இவைகளின் எடை 100 கிராமிலிருந்து 2.5கி.கிராம்வரை இருக்கலாம். சமயம் இதைவிட அதிகமாகவும் இருக்கலாம். இவைகளின் வெடிக்கும் சக்தியைப்



பொறுத்து அவைகளின் சேதவிளைவு அமையும். வேறு வகையான கண்ணிவெடிகளும் உண்டு. கைக்குண்டுகளின் தன்மைகளைக் கொண்டவையாக இவை இருக்கமுடியும் இவை வெடிக்கும்போது உலோக சிதறல்களை வெளிப்படுத்தும் நிலக்கண்ணியொன்றின் மீது ஒருவர் காலை வைத்தால் அதன் விசையின் மீது ஏற்படும் அழுத்தத்தின் காரணமாக அது வெடிக்கும். மற்றவையைப் பொறுத்தமட்டில் வயர்கள் பொருத்தப்பட்டு கண்ணியின் மேற்புறமாக வயர் இழுக்கப்பட்டு அதில் விசை இணைக்கப்பட்டிருக்கும். அவ்விசை தடக்குப்பட்டால் உடனே விசை இழுக்கப்பட்டு கண்ணி வெடிக்கும்.

கிளைமோர் (Claymore) என்றழைக்கப்படும் கண்ணியானது வளைந்த அமைப்பைக் கொண்டது. 700 உருக்கினாலான உருண்டைகளும் வெடிமருந்துகளும் இருக்கும். அதிலிருந்து இழுக்கப்பட்டுள்ள வயர் முடுக்கப்பட்டதும் கண்ணிவெடிக்கும். அதிலிருந்து வெளிப்படும் குண்டுகள் சிதறடிக்கப்படும். சுமார் 50 மீற்றர் (160அடி) தூரம் அதன் தாக்கம் இருக்கும். குண்டுகள் ஒரே திசையில் விசிறப்படுவதால் தாக்குதல் நடத்தும் தரப்பினருக்குச் சேதம் விளையா

### ஒப்பந்தத்தின் பயன்பாடு

ஆள்களைக் குறிவைக்கும் கண்ணிவெடிகளைத் தடைசெய்வதற்கான ஒப்பந்தம் உருவாகி 5வருடங்களுக்கு மேலாகிவிட்டது. ஆள்களைக் குறிவைக்கும் கண்ணிவெடிகளைத் தடை செய்யும் சர்வதேச உடன்பாட்டில் ஒட்டாவா ஒப்பந்தத்தில் 141 நாடுகள்வரை சேர்நது கொண்டுள்ளன. ஏனைய நாடுகள் இம்மாதிரிக் கண்ணிவெடிகளை முற்றாக ஒழிப்பதற்கு அரசியல் மட்டத்தில் அங்கீகாரம் தெரிவித்துள்ளன.

கடந்த ஐந்து ஆண்டுகளில் உலகம் முழுவதும் இந்த உடன்படிக்கை மனித வாழ்வின் மேம்பாட்டுக்குப் பெருமளவில் உதவியுள்ளதை

தொகுப்பு
நந்தன்

செஞ்சிலுவைச் சங்கத்தின் சர்வதேசக்குழு அவதானித்து வந்துள்ளது. இந்த ஒப்பந்தம் முழுமையாகச் செயற்படுத்தப்பட்டுள்ள பகுதிகளில் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை மூன்றில் இரண்டாக அல்லது அதற்கு மேலாக வீழ்ச்சி கண்டுள்ளது. உடன்பாட்டில் சம்பந்தப்பட்ட தரப்புகள் நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதிக்குள் 3கோடியே 10லட்சம் கண்ணிவெடிகளை அழித்துள்ளன. இவ்வாறு ஆக்க ரீதியில் பெரும் முன்னேற்றம் ஏற்பட்டிருக்கும் அதேநிலையிலும் குறிப்பிடக்கூடிய அளவு சவால்களும் இருந்துகொண்டுதான் வருகின்றன. (ப)

## பரீட்சை மீளாய்வுக்கான விண்ணப்பம்

யாழ்ப்பாணம்,ஒக.9

ஜீ.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையின் பெறுபேறுகளை மீளாய்வு செய்வதற்கான விண்ணப்பங்களை இம்மாதம் 23ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மே மாதம் இடம்பெற்ற ஜீ.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையின் பெறுபேறுகள் நேற்று பரீட்சைத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டன. (ஐ-7)

## இராஜ கோபுர திருப்பணி ஆரம்பம்

புத்தளம்,ஒக.9

இலங்கையில் உள்ள பிரசித்தி பெற்ற சைவ ஆலயங்களுள் ஒன்றான புத்தளம் தொகுதியிலுள்ள உடப்பு அன்னை ஸ்ரீ திரௌபதை அம்மன் ஆலயத்தில் அமைக்கப்படவுள்ள 108அடி உயரமான இராஜ கோபுரத்திற்கான திருப்பணிகள் சுபநேரத்தில் ஆலய பிரதம குருக்களான ஸ்ரீ நிலாசக் குருக்களினால் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

சுமார் 2கோடி ரூபா செலவில் இக் கோபுரம் அமையுமென்றும் 2005ஆம் ஆண்டளவில் திருப்பணிகள் முடிவுற்று மகா கும்பாபிசேகம் இடம்பெறும் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்தப் பணிக்கு அன்பர்கள் வாரி வழங்க வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-186)

## நூலகர்களுக்கான தடைப் பரீட்சை

வலிகாமம்தெற்கு,ஒக.9

இலங்கை நூலகர் சேவை தரம் இரண்டு, தரம் மூன்று ஆகிய தரங்களைச் சேர்ந்த அலுவலர்களுக்கான வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ளது.

இப்பரீட்சைக்குத் தோற்றவிரும்பும் நூலகர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மேற்படி நூலக அலுவலர்களுக்கான வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை எதிர்வரும் நவம்பர் மாதம் 13 ஆம் திகதி கொழும்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடத்தப்பட உள்ளதாகத் தெரியவருகின்றது.

விண்ணப்பதாரிகள் தத்தமது திணைக்களத் தலைவர்களுடாக தமது விண்ணப்பங்களை இம்மாதம் 31 ஆம் திகதிக்கு முன்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்துக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைக்கவேண்டும் என இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம் விக்டர் சமரவீர அறிவித்துள்ளார். (ஐ-152)

## குறிகாட்டுவான் – நயினாதீவுக்கு புதிய பாதைப்படகு சேவைக்கு வரும்

யாழ்ப்பாணம்,ஒக.9

குறிகாட்டுவானுக்கும் நயினாதீவுக்கும் இடையில் பாதைச் சேவை ஒன்று விரைவில் ஆரம்பிக்கப்படவிருக்கின்றது.

நயினாதீவுக்குச் செல்லும் பயணிகள் தற்சமயம் படகுகள் மூலமே பயணத்தை மேற்கொள்கின்றனர். இதனால், பயண வழியில் மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர்.

இதன் காரணமாகக். குறிகாட்டுவானுக்கும் நயினாதீவுக்கும் இடையில் பாதைச் சேவை (Ferry Service) ஒன்று ஆரம்பிக்கப்படவிருக்கின்றது.

சேவையில் பயன்படுத்தப்படவுள்ள பாதை பிரிட்டனில் இருந்து எடுத்துவரப்பட்டுள்ளது. கொழும்பில் தற்சமயம் வைக்கப்பட்டுள்ள இந்தப் படகுப் பாதை விரைவில் யாழ்ப்பாணத்துக்கு எடுத்துவரப்படவுள்ளது.

இந்தப் பாதைச் சேவை மூலம் ஒரே சமயத்தில் மூன்று பஸ்களை ஏற்றிச் செல்ல முடியும். (ஐ-3)

## குரங்குபாஞ்சானில் முஸ்லிம்கள் விவசாயம் செய்யப் புலிகள் அனுமதி

திருகோணமலை,ஒக.9

கிண்ணியாவில், குரங்குபாஞ்சானில் தமது முகாம் அமைந்துள்ள இடத்தில் இருந்து 50 மீற்றர் தூரத்திற்கு அப்பால் முஸ்லிம்கள் விவசாயம் செய்ய விடுதலைப் புலிகள் அனுமதி வழங்கியுள்ளனர்.

யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பிரசன்னத்தில் கிண்ணியாவில் நேற்று நடைபெற்ற விடுதலைப் புலிகள் - முஸ்லிம் பிரமுகர்கள் சந்திப்பில் இந்த அனுமதி வழங்கப்பட்டது.

குரங்கு பாஞ்சானில் உள்ள விடுதலைப் புலிகளின் முகாமுக்கு சமீபமாக முஸ்லிம்கள் விவசாயம் செய்தல் மற்றும் விறகு வெட்டுதல் தொடர்பாக எழுந்த பிரச்சினைகள் தொடர்பாக ஆராய இச்சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

விடுதலைப் புலிகளின் திருமலை அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலன், கிண்ணியா உலாமா சபைத் தலைவர் அஸஸ், கண்காணிப்புக்குழு பிரதிநிதிகளான டாக்கின் மார்க்கிரட் ஆகியோர் இதில் கலந்துகொண்டனர்.

குரங்கு பாஞ்சான் முகாமில் இருந்து 50 மீற்றர் தூரத்தில் விவசாயம் செய்ய அனுமதிப்பதாக விடுதலைப் புலிகள் தெரிவித்தனர்.

எதிர்காலத்தில் தமிழ் - முஸ்லிம் மக்கள் தொடர்பான பிரச்சினைகளை முரண்பாட்டுக்கு இடமளிக்காமல் சுமூகமாகப் பேசித் தீர்வு காண்பது என முடிவு செய்யப்பட்டது. (ஐ-3-6-188)

## நூலகக் கட்டடத்துக்கு கல்வி அமைச்சு நிதி உதவி

கைதடி,ஒக.9

கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயத்திற்கு நூலகக்கட்டடம் அமைப்பதற்கென வடக்கு - கிழக்கு மாகாணக்கல்வி அமைச்சு பதினெட்டு லட்சம் ரூபாவை ஒதுக்கியுள்ளது.

தற்போது நூலகக் கட்டடத்திற்கான ஆரம்ப வேலைகள் நடைபெற்று வருவதாகவும் - வெகு விரைவில் கட்டடப் பணிகள் பூர்த்தியடையும் என்றும் பாடசாலையின் அபிவிருத்திச் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன. (எ-75)

## கலந்துரையாடல்

தென்மராட்சி,ஒக.9

தென்மராட்சித் தெற்கில் மீளக்குடியமர அனுமதிக்கப்படாத தனங்கிளப்பு, மறவன்புலோ ஆகிய பகுதி மக்களின் கால்நடைகள் அத்துமீறிப் பிடிக்கப்படுவது தொடர்பான கலந்துரையாடல் கைதடி கமநலசேவைகள் நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இன்று திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ள இக்கலந்துரையாடலில் சம்பந்தப்பட்டவர்களைக் கலந்துகொள்ளுமாறு இப்பகுதி விவசாய அமைப்புகள் மற்றும் மறவன்புலோ கிராம அலுவலரை கைதடி பெரும்பாக அலுவலர் செல்வி என்.ஜெகதீஸ்வரி கேட்டுள்ளார். (எ-117)

## டெங்கு குறித்து மக்களுடன் தாதியர் பயிலுநர் கலந்துரையாடல்

தென்மராட்சி,ஒக.9

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை தாதியர் பயிற்சிப் பாடசாலை பயிலுநர்கள் டெங்குக் காய்ச்சல் தொடர்பான ஆய்வுகளை நடத்திவருகின்றனர்.

குடாநாட்டில் உள்ள பல பிரதேசங்களிலும் இவர்கள் ஆய்வுகளை மேற்கொள்வதுடன் டெங்குக் காய்ச்சல் பரவுவதை தடுக்கும் முறைகள் பற்றியும் பொதுமக்களுக்கு கருத்துரைகளை வழங்குகின்றனர்.

டெங்குக் காய்ச்சல் ஏற்படின் உள்ள தாக்கங்கள் மற்றும் அவற்றின் விளைவுகள் பற்றி இவர்கள் கலந்துரையாடியதாகத் தெரிவிக்கப்பட்டது. (எ-117)

# மிதிவெடி அறிவிப்புப்பலகைகள் திருடப்படுவதைத் தடுக்க பொது அமைப்புக்கள் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்

## வெண்புறா நிறுவனம் பகிரங்கக்கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஓக.9

வன்னிப் பகுதியில் கண்ணிவெடி, வெடிபொருளகளின ஆபத்துக்கள் தொடர்பாக ஏற்படுத்தப்பட்டுள்ள விழிப்பு அறிவிப்புப் பலகைகளை திருடுவதைத்தடுக்க பொது அமைப்புக்கள், நலன்விரும்பிகள் ஒன்றிணைந்து ஒத்துழைக்க முன்வரவேண்டும்.

இவ்வாறு வன்னியிலுள்ள வெண்புறா நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யுத்த அனர்த்தங்களினால் மிக மோசமாகப்பாதிக்கப்பட்டுள்ள வன்னிப்பிரதேச மக்களையும், வன்னியூடாக வடக்கு, தெற்கு நோக்கிப்பயணிக்கும் ஏனைய பகுதி மக்களையும், கண்ணி வெடி ஆபத்துக்களில் இருந்து பாதுகாக்கும் பொருட்டு முக்கியமாக வன்னியை ஊடறுத்துச் செல்லும் ஏ9 நெடுஞ்சாலையிலும் மற்றும் பாதிப்புக்குள்ளான பகுதிகளில் உள்ள வீதிகளிலும் கண்ணி வெடி, வெடிபொருள்கள் ஆபத்துக்கள் சம்பந்தமான அறிவிப்புப்பலகைகளை நிறுவிப் பராமரித்து வருகின்றோம்.

இவ்விதமான மனித நேயப்பணிகள் பெரும் சிரமங்களுக்கு மத்தியில் எமக்குக் கிடைக்கப்பெற்ற நிதியுதவிகளுடன் எமது மூலவளங்கள், மனிதவலு ஆகியவற்றின் இணைந்த செயற்பாட்டினாலேயே நடைபெற்று வருகின்றன.

இப்பணிகளின் உன்னதமான பிரயோசனங்களை பகுத்துணர முடியாத சில தீய நலவாதிகள் தங்களின் சொந்தத் தேவைகளுக்காக இந்த அறிவிப்புப்பலகைகளை திருடிச் செல்கின்றனர். இது மிகவும் இழிவான செயல் மட்டுமல்ல. மன்னிக்க முடியாத குற்றமுமாகும். ஒரு நான்கு அடிச்சதுரமான தகரத்துண்டினதும், இரண்டு இரும்புக் குழாய்களினதும் பெறுமதியை விட அவற்றின் காரணமாக எத்தனையோ மனித உயிர்கள் காப்பாற்றப்படுகின்றன என்ற மகத்தான உண்மையினைக் குறைவாக மதிப்பிடும் மிலேச்சத்தனமான செய்கைகளில் நின்றும் விலகியிருக்குமாறு சம்பந்தப்பட்டவர்களை அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

எனவே, இவ்வாறான திருட்டு வேலைகளில் ஈடுபடுபவர்கள் இனிமேலாவது எமது மக்களின் பாதுகாப்புக்கருதி அறிவிப்புப்பலகைகளைத் திருடுவது போன்ற சமூக விரோதச் செயல்களைச் செய்யாது எச்சரிக்கை பெறவேண்டும் என்பதே இந்த அறிக்கையின் முக்கியநோக்கமாகும்.

அநேகமாக இயக்கச்சி தொடக்கம் முகமாலை வரையிலான பகுதிகளிலேயே இவ்விதமான நாசவேலைகள் இடம்பெறுவதை எம்மால் அவதானிக்கமுடிகின்றது. இப்பிரதேசங்களில் உள்ள பொது அமைப்புக்கள், நலன் விரும்பிகள் ஒன்றிணைந்து இந்த மோசமான செயல்களை நிறுத்துவதற்கு ஒத்துழைக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றோம்.

(எ-173)

## சமூக விழுமியநெறி பற்றிய நிகழ்ச்சித் திட்டம்

அச்சுவேலி,ஓக.9

பாடசாலைகள் தோறும் சமூகவிழுமிய நெறி முறைகள் மற்றும் சமூக உயர்வுகள் பற்றிய கல்வி நிகழ்ச்சித் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இலங்கை மக்கள் சமூகத்தின் கலாசார சமூக விழுமிய நெறிமுறைகள் விரைவாக வீழ்ச்சி அடைந்துசெல்வதை மீட்டெடுத்து பரஸ்பர நட்புறவையும் சமூக ஒருமைப்பாட்டையும் கட்டியெழுப்ப இந்தத் திட்டம் உதவும் எனத்தெரிவிக்கப்பட்டது.

இது விடயமாக கல்வி அமைச்சின் செயலாளர் கலாநிதி தாரா டி மெல் விடுத்த சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-11)

## கோப்பாயில் சனியன்று முத்தமிழ் விழா

கோப்பாய்,ஓக.9

கோப்பாய் பிரதேச செயலக கலாசாரப் பேரவை நடத்தும் முத்தமிழ்விழா எதிர்வரும் 14ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் ஒருமணிக்கு உதவிப்பிரதேச செயலர் திருமதி அ.சாந்தசீலன் தலைமையில் ஆவரங்கால் சிவசக்தி மணிமண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் விருந்தினர்களாக முன்னாள் பிரதேச செயலர் க.கேதீஸ்வரன், யாழ். மாவட்ட அரசியல் பொறுப்பாளர் சி.இளம்பரிதி, யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன், ஓய்வுபெற்ற பிரதம கணக்காய்வாளர் நாயகம் வே.கந்தசாமி ஆகியோர் கலந்துகொளவர்.

நிகழ்வில் கீதங்கள், நடனம், சிறப்புச்சொற்பொழிவுகள், கவியரங்கம், இசைக்கச்சேரி, வயலின்சோலோ, பட்டிமன்றம், இசைநடனம் என்பன இடம்பெறும். (எ-72)


**படிவம்**

க.பொ.த. (உ/த) வகுப்பில் கற்கும் மாணவர்கள் ஜனாதிபதி மில்லேனியம் புலமைப்பரிசில் பெறுவதற்கு விண்ணப்பிப்பதற்கான படிவம் கிடைக்கும்.

BHARATHI PATHIPPAKAM,
OFFSET PRINTERS,
430, K.K.S. ROAD, JAFFNA.

(36494)(40-11-15)

**படிவம்**

சமூகப்பணி அலுவலர் கற்கை நெறிக்கு அரச ஆசிரியர்கள் விண்ணப்பிப்பதற்கான படிவம் கிடைக்கும்.

விண்ணப்ப முடிவு திகதி: 31-08.2004.

BHARATHI PATHIPPAKAM,
OFFSET PRINTERS,
430, K.K.S. ROAD. JAFFNA.

(36496)(40-11-15)

**NE-TECH**

**புதிய பிரிவுகள் ஆரம்பம்**

*AUGUST - 18-08-2004*

இன்று முதல் பதிவுகளை மேற்கொள்ளலாம்.

- Computer Basic Course - 1 Month Rs. 750/=
- Computer HardWare Engineering - 5 Days - Intensive Rs. 1,800/=
- Computer Net Working - 5Days Intensive Rs. 1,800/=
- Diploma in MS Office - 1 Month Rs. 1,500/=

யாழ். அடைக்கல அன்னை ஆலயம் (D.L.R Church)
4ஆம், குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.
T.P: 021-2223786

(C-26489) (38-40-11-15)

**சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம் நிர்வாகசபை உறுப்பினர்கள்**

மேற்படி ஒன்றிய தலைமைச் செயலகத்தில் 07.08.2004 அன்று நடைபெற்ற மகாசபைக் கூட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட நிர்வாகக் குழுவினர் விவரம்.

தலைவர்: பிரம்மஸ்ரீ பரமேஸ்வர மனோகரக்குருக்கள்
செயலாளர்: பிரம்மஸ்ரீ கா.சந்திரசேகரசர்மா
பொருளாளர்: பிரம்மஸ்ரீ க.மகாகணபதீஸ்வரக்குருக்கள்
உபதலைவர்:பிரம்மஸ்ரீ கை.வாமதேவக்குருக்கள்
பிரம்மஸ்ரீ.கு.ரவிபாஸ்கரக்குருக்கள்
உபசெயலாளர்:பிரம்மஸ்ரீ செ.பரமானந்தக்குருக்கள்
செயற்குழு உறுப்பினர்கள்.

பிரம்மஸ்ரீ:ராம்.சபாநாதக்குருக்கள், நா.கலாதரசர்மா, க.ஜெயந்திநாதசர்மா, இ.பாலச்சந்திரக்குருக்கள், பா.சுந்தரராயசர்மா, கு.சற்குணராயசர்மா, ப.சண்முகராஜக்குருக்கள், இராஜேந்திர சுவாமிநாதக்குருக்கள், க.ஹரிஹரசுத குருக்கள், பா.நகுலேஸ்வரசர்மா.

(சி.36488)(11-15-40)

**கோழிக் குஞ்சு விநியோகம்**

தரமான பிறிமா சிவப்பு, வெள்ளைப் பேட்டுக் குஞ்சுகள், போவான் இன புறொய்லர் சிவப்பு, வெள்ளை பேட்டுக் குஞ்சுகளும் (3 1/2 மாதத்தில் முட்டையிடும்) பகிறா இன தரம்மிக்க புறொய்லர் குஞ்சுகள் விலை 45/=

(ஒவ்வொரு புதன்கிழமையும் பெற்றுக்கொள்ளலாம்)

தொடர்பு:-

- தம்பிப்பிள்ளையும் மைந்தரும் நகைமாடம், யாழ்ப்பாணம். T.P: 3353.
- கிளை Y.A.சுரேஸ் கோழிப்பண்ணை கிராமக்கோட்டுச் சந்தி, பருத்தித்துறை. (T.P.: 077-6103835)
- சிவகணநாதன் பண்ணை, மாலு சந்தி, நெல்லியடி.

(35050)(40-11-15)

ஹாட்லிக் கல்லூரி பழைய மாணவர் மன்றம்

**பொதுக் கூட்டம்**

காலம் : 22.08.2004 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணி
இடம் : கல்லூரி மண்டபம்

மன்ற விதிகளின் நிகழ்ச்சி நிரலுடன் கூட்டம் நடைபெறும்.
பிரேரணைகள் இருப்பின் அனுப்பிவையுங்கள்.
உறுப்பினர் தவறாது வருக.

*பழைய மாணவர் மன்றம்,*
*ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை.* (C/36492) இணைச் செயலர்.

**சங்கத்தானை மகளிர் பயிற்சி நிலையம்**

**புதிய பிரிவுகள் ஆரம்பம்**

- ❊ தையல்
- ❊ மணப்பெண் அலங்காரம் (இந்து, கிறிஸ்தவம்)
- ❊ சிகை அலங்காரம் ❊ கேக் ஐசிங் (Fondan, Glace, Water ஐசிங்)
- ❊ சாறி, பஞ்சாபி Painting வேலைப்பாடுகள்
- ❊ பேசியல்
- ❊ கண்ணிமை சீர்செய்தல் ❊ முத்து ஆபரண வேலை போன்றன

புதிய பிரிவுகள் ஆரம்பம் 14.08.2004 சனிக்கிழமை காலை 10 மணி

**மகளிர் பயிற்சி நிலையம்,**
சங்கத்தானை, சாவகச்சேரி
T.P.:077-6032193

(சி-36497)(34-40-15-11)

**சேவைநலம் பாராட்டி வாழ்த்துகின்றோம்**

**யா/யாழ். இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை**



தனது 34 ஆண்டுகால (1970-04.08 - 2004.05.23) ஆசிரியப் பணியில் எமது பாடசாலையில் 2003.04.04 தொடக்கம் 2004.05.23 வரை பகுதித் தலைவராக அரும்பணியாற்றி இளைப்பாறும்

திருமதி **அகிலேஸ்வரி பரமலிங்கம்**

அவர்கள் பாடசாலையினதும் மாணவர்களினதும் வளர்ச்சிக்குப் பெரிதும் பங்காற்றியவர். சேவை எண்ணம்கொண்ட எமது ஆசிரியரை பாராட்டி, அவரது ஓய்வுக்காலம் சிறப்புற அமைந்து அவர் நீடூழி காலம் மகிழ்வுடன் வாழ இறைவனை வேண்டி வாழ்த்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பழைய மாணவர் சங்கம்.

(35051) (38-40-11-15)


**மரண அறிவித்தல்**

**வேலுப்பிள்ளை கந்தசாமி**

(ஓய்வுபெற்ற இரத்தவங்கி ஊழியர், யாழ். போதனா வைத்திய சாலை)

அராலி தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை கந்தசாமி நேற்று (08.08.2004) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை சின்னம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனும், தில்லைநாயகியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற நடராசா தம்பதிகளின் அன்பு மருமகனும் லகுரஞ்சினி, சுதாகரன், விஜயகுமார், மோகனகுமார் ஆகியோரின் அன்புத் தந்தையும் சற்குணானந்தன், பாமினி, கீதா ஆகியோரின் அன்பு மாமனாரும் சந்திரிகா, சோபிகா, சயீரூகிதா, மிதுசன், கீர்த்தனன் ஆகியோரின் அன்புப் பேரனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.08.2004) திங்கட்கிழமை அன்று மு.ப. 11.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக பூதவுடல் பூனாவடை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

*அராலி தெற்கு,*
*வட்டுக்கோட்டை.*

தகவல்:
க.விஜயகுமார்
(மகன் குட்டித்தம்பி),
அம்பாள் இரும்பகம்,வட்டுக்கோட்டை.

(35053)(40-11-15-33)


*324, Palaly Road, Jaffna.* **ACS Exams In Information Technology**

**ACS IT Examஇற்கான கற்கை நெறிகள்**

**Australian Computer Society Exams**

- MCS நிறுவனம் சர்வதேச தரம் வாய்ந்த Australian Computer Societyஇன் தகவல் தொழில்நுட்ப கற்கை நெறிகளை ஆரம்பிக்கப்படவுள்ளதை தெரிவிப்பதில் மகிழ்வடைகின்றது.
- மேற்படி கற்கைநெறிக்கான பரீட்சைகள் ஒவ்வோர் ஆண்டும் மே, நவம்பர் மாதங்களில் Australian Computer Society இனால் நடாத்தப்படும்.
- 8 Moduleகளை கொண்ட இக்கற்கை நெறியினை பகுதி பகுதியாக ஒரே ஆண்டிலோ அல்லது 2 ஆண்டுகளிலோ தோற்றமுடியும்.
- கணனி சார்ந்த தொழில் வாய்ப்புக்களுக்கு ACS தகுதி உடையோரே கணனி பட்டதாரிகளுக்கு சமமாக நோக்கப்படுகின்றனர்.
- இக்கற்கை நெறியைப் பயில்வதற்கு A/Lஇல் ஒரு பாடம் மட்டும் சித்தியடைந்திருந்தால் போதுமானது.



மேலதிக விபரங்களிற்கு MCS, 324, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.

Supported by United Nation Development Project/Jaffna Rehabilitation & Resettlement Project

## தவறிவிட்டன

08.08.2004 அன்று செல்வராசா உதயகுமார் பாரதி வீதி, பத்தைமேனி, அச்சுவேலி என்பவருடைய மணிபேர்ஸும், தேசிய அடையாள அட்டையும் தொட்டிலடியில் இருந்து யாழ்ப்பாணம் வரும் வழியில் தவறிவிட்டன. இதைக் கண்டெடுத்தவர்கள் தொட்டிலடி காக்கார மணியத்திடம் ஒப்படைக்கவும் அல்லது யாழ்ப்பாணம் மரக்கறிக்கடை - பெரியதம்பி, இல.27 என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும்.

(35054)(29-17-18)

## திருத்தம்

நேற்றைய உதயனின் 10 ஆம் பக்கத்தில் பிரசுரமாகிய- நல்லூர் குறுக்குத்தெரு 82ஆம் இலக்கத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகம் விஜயரட்ணம் என்பவரின் மரண அறிவித்தல் விளம்பரத்தில் காலஞ்சென்றவரின் மைத்துனியான சு.சிவயோகேஸ்வரி (ஆஸ்திரேலியா) என்பவரது பெயர் தவறுதலாக விடுபட்டுவிட்டது அதனையும் சேர்த்து வாசிக்கவும்.

## கண்ணீர் அஞ்சலி



எமது சபையின் நிர்வாக சபை உறுப்பினர் சிவஸ்ரீ ஜெயராஜ் ஐயாவின சகோதரியும் எமது சபையின் கிழக்கு மாகாணக் கிளையின் உப தலைவர் சிவஸ்ரீ ச.நித்தியானந்தக் குருக்கள் அவர்களின் பாசமிகு மனைவியுமான

**ஸ்ரீமதி செல்வமதி நித்தியானந்தக்குருக்கள்**

அவர்களின் திடீர் மறைவையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன், அவரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

அகில இலங்கை சைவக்குருமார் அர்ச்சகர் சபையினர்.


## பொருளியற்கல்லூரி

நாவலர் றோட், யாழ்ப்பாணம்.
K.K.S. றோட், இணுவில்.

இரு இடங்களிலும் அதியுயர்ந்த பெறுபேற்றினைப் பெற்ற மாணவர்களை வாழ்த்தி, புதிய பிரிவு ஆரம்பமாகின்றன.

### A/L Day Class

கலை, வர்த்தகம்

| பாடம் | யாழ்ப்பாணம் | இணுவில் |
| --- | --- | --- |
| பொருளியல் | வரதராஜன் | வரதராஜன் |
| கணக்கீடு | முகுந்தன் | முகுந்தன் |
| வணிகக்கல்வி | முரளி | முரளி |
| தமிழ் | மீரா | பாலா |
| இந்துநாகரிகம் | ஜோதீஸ்வரன் | சுரேஸ் |
| அளவையியல் | R.P. சர்மா | R.P. சர்மா, ஜெயசுரேஸ் |
| புவியியல் | குமரன் | குமரன் |
| நாடகமும் அரங்கியலும் | சுகந்தன் | சுதன் |
| கிறிஸ்தவம் | வசந்தன் | வசந்தன் |
| இந்துசமயம் | தரன் | தரன் |
| அரசியல் | ரஜீவன் | ரஜீவன் |
| வரலாறு | பத்மன் | பத்மன் |

ஆரம்பம்: 11-08-2004 புதன்
இணுவில் -8.00 மணி யாழ்.நகரில் 8.00(ப.நே.)
அனுமதியினைப் பெற்றுக்கொள்ளவும். (35054)(29-17-18)


# மரண அறிவித்தல்கள்

## திருமதி வரப்பிரகாசம் ஞானம்மா

கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் பரந்தனை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வரப்பிரகாசம் ஞானம்மா அவர்கள் நேற்று (08-08-2004) ஞாயிற்றுக்கிழமை பரந்தனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மரியாம்பிள்ளை வரப்பிரகாசத்தின் அன்பு மனைவியும் செல்வராசா (அமெரிக்கா), தவராசா (தவம்), திருமதி மேரிகொன்ரெக்சன் துரைராசா ஆகியோரின் அன்புத் தாயாரும் மேரி றோசனின் (அமெரிக்கா), மேரிகிறேஸ், ஆசீர்வாதம் வின்சன் துரைராசா (C/o 5 ஆம் வட்டாரம் - பரந்தன், ஓய்வுபெற்ற திட்ட முகாமையாளர், நிர்வாக அலுவலர் கறோட் (Karod) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் சந்தியாம்பிள்ளை இராசையா, காலஞ்சென்ற அருட்சகோதரி லிட்பீசியா, திருமதி நேசம்மா, காலஞ்சென்ற ராசம்மா ஆகியோரின் பாசமிகு சகோதரியும் லிபஸ (லண்டன்), எமிலி, வியந், நிசாந், லிமலேஸ், பமிலா (அமெரிக்கா), கிராண்ட் (அமெரிக்கா), ஜெனித்தா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் ஆ.வி. துரைராசா (C/0 5 ஆம் வட்டாரம், பரந்தன் அவர்களின் இல்லத்திலிருந்து நண்பகல் 12மணிக்கு பரந்தன் புனித அந்தோனியார் தேவாலயத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு, திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் அன்னாரின் சொந்த இடமான கரவெட்டிக்கு எடுத்துச்செல்லப்படும். அன்னாரின் நல்லடக்கம் பற்றிய அறிவித்தல் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*'அமலகம்'*
*கரவெட்டி வடக்கு, கரவெட்டி.* (சி-36502)(29-17-18)
தகவல்: ஆ.வி.துரைராசா.

## திருமதி நல்லம்மா கணபதிப்பிள்ளை

யாழ்ப்பாணம், வேலணையைப் பிறப்பிடமாகவும், வவுனியா பூந்தோட்டத்தை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திருமதி நல்லம்மா கணபதிப்பிள்ளை அவர்கள் நேற்று (08.08.2004) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னாார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - நாகம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான பொன்னப்பா (ஓய்வுபெற்ற பொலீஸ் அதிகாரி) - நாகம்மா தம்பதிகளின் அருமை மருமகளும் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளையின் (ஓய்வுபெற்ற சுங்க அதிகாரி) அன்பு மனைவியும், அருந்தவராணியின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற குணநாயகத்தின் (முன்னாள் உதவி அரச அதிபர்) அருமை மாமியாரும், கிருபரன்(U.K.), தயோஷினி(U.K.), நிர்மலன்(U.K.) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், நிருஷா(U.K.), நிலோஜா(U.K.), நிரோஷா(U.K.) ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (09.08.2004) திங்கட்கிழமை நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் 2 மணிக்குத் தகனக்கிரியைக்காக பூந்தோட்டம் இந்து மாயானத்துக்கு எடுததுச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள அனைவரும ஏற்றுக்கொள்ளவும்.

*58, பாடசாலை வீதி,*
*பூந்தோட்டம்,*
*வவுனியா. T.P. : 024 2224020* (35066)(22-29-17-18)
தகவல்: அருந்தவராணி குணநாயகம் (மகள்).


## மீள் பரீட்சார்த்திகள் கவனத்துக்கு!

A/L கணித, விஞ்ஞான மாணவர்களிற்கு விசேட ஒழுங்குகளுடன் கூடிய

### CHEMISTRY DAY CLASS

By : அன்பழகன் B.Sc.

திங்கள் முதல் வெள்ளி வரை
8.00-9.15 a.m.

- ★ அலகு ரீதியான மீட்டல்
- ★ மாதிரி வினாக்கள்
- ★ அலகு ரீதியான வினா விடை
- ★ அச்சடிக்கப்பட்ட பாடக்குறிப்புகள்
- ★ 20இற்கு மேற்பட்ட தொடர் கருத்தரங்குகள்

Day Class மாணவர்களிற்காக புதிதாக ஆரம்பமாகும் அலகுகள்

Sat., Sun., 10 - 11 ⇒ Physical பிரிவு I
Sat., Sun., 11 - 12 ⇒ Inorganic Chemistry
Sat., Sun., 12 - 01 ⇒ Physical பிரிவு II
Sat., Sun., 01 - 02 ⇒ Thermo Chemistry
Fri., 03-05 p.m. ⇒ Organic Chemistry

NEW SCIENCE CENTRE
யாழ்நகர். (C/36501)(22)

## NEW SCIENCE COLLEGE

இணைந்த கணிதம்

A/L 04 Repeat

புதிய பிரிவுகள் ஆரம்பம்
Mon.,Tue.,Wed.,Thu., Fri., 7.00-8.00(a.m.) (ப.நேரம்)
ஆரம்பம் : 11.08.2004(Wed.)

P.செந்தில்நாதன் B.Sc. (35063)(22)

தரம் 5 மாணவர்களுக்கான 5 நாள் இலவச

புலமைப்பரிசில் வினாவிடை வகுப்பு
காலம்: இன்று (09.08.2004) திங்கள் முதல் வெள்ளி வரை
மாலை 6.30 முதல் 9.00 மணி வரை (ப.நே.)
★ குறிப்பிட்ட அனுமதிகள் மட்டும் வழங்கப்படும்.
★ அனுமதிக்கு முந்துங்கள்.

நாவலர்
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (35065)(29)

## BARATHY

சித்தன்கேணி

இப்பிரதேசத்தில் அதியுயர்ந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களை வாழ்த்தி

### A/L Day Class

புதிய பிரிவு ஆரம்பம்: 11.08.2004

| | | |
| --- | --- | --- |
| பொருளியல் | - | உதயன் |
| கணக்கீடு | - | முகுந்தன் |
| வணிகக்கல்வி | - | பசில் |
| தமிழ் | - | பாலா |
| அளவையியல் | - | R.P. சர்மா |
| இந்துநாகரிகம் | - | சுரேஸ் |
| புவியியல் | - | குமரன் |
| இந்துசமயம் | - | தரன் |
| நாடகமும் அரங்கியலும் | - | சுதன் |
| கிறிஸ்தவம் | - | வசந்தன் |
| அரசியல் | - | ரஜீவன் |
| வரலாறு | - | பத்மன் |

அனுமதியினைப் பெற்றுக் கொள்ளவும்.
(35058)(29-17-18)

## ராஜா யாழ்ப்பாணம்



சிலதினங்கள் மட்டும்
சிம்பு, ரம்யாகிருஷ்ணன், மும்தாஜ் நடித்த
குத்து
புதியநேரம்: 10.30, 2.30, 6.30, 9.30 (சி-36364)(32)

## லக்சுமி இணுவில்

இன்று முதல் சேரன், சினேகா, கனிகா, கோபிகா, இன்னும் பலர் நடிப்பில்
ஆட்டோகிராஃப்
தினசரி புதிய நேரம் 11.00, 3.00, 7.00 (புதிய நேரம்). (35060)(29)

## நாகம்ஸ் சுன்னாகம்



அநேக ரசிகர்களின் வேண்டுகோளுக்கிணங்க இன்று மட்டும் ரஜனிகாந்த, நக்மா, ரகுவரன், ஜனகராஜ் நடித்த
பாட்ஷா
காட்சிகள்: 11.00,3.00,7.00(பு.நே.)
நாளை முதல் சரத்குமார் நடித்த
மாயாவிதன்

## நிர்மலா சங்கானை

அர்ஜுன், ரோஜா நடித்த
ஆய்த பூஜை
வெள்ளி, சனி, ஞாயிறு
தினசரி 11.00, 2.45, 6.00 பு.நே.
Past Perfect [இரவு 8.48 பு.நே.]


# மரண அறிவித்தல்கள்

## வேலுப்பிள்ளை கதிரவேலு

(ஓய்வுபெற்ற லிகிதர், யாழ் போதனா வைத்தியசாலை)

அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை கதிரவேலு அவர்கள் நேற்று (08.08.2004) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை - அன்னப்பிள்ளை தம்பதிகளின் புதல்வனும், பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், வசந்தா, கிசோர்த்தா (சுவிஸ்), விநோதினி (ஸ்ரீலங்கா ரெலிகொம்), தபோதினி (காலநடை வைத்திய அதிகாரி) ஆகியோரின் தந்தையும் சிறிஸ்கந்தராசா, சிறிகீர்த்திகா, சுந்சுதன் ஆகியோரின் மாமனாரும் கோகுலமேனன், நவாணி, சேரன், வர்ந்தனி, சுபன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*துரைராஜா அவனியூ,*
*சந்நிதி கோயில் வீதி,*
*அச்சுவேலி.* (C/36503)(35-29-17-18)
தகவல்: குடும்பத்தினர்.

## சுப்பிரமணியம் கிருஷ்ணர்

(ஓய்வுபெற்ற கூட்டுறவுப் பரிசோதகர்)

கந்தரோடையைப் பிறப்பிடமாகக் கொண்ட சுப்பிரமணியம் கிருஷ்ணர் 07.08.2004 சனிக்கிழமை அமெரிக்காவில் காலமானார்.



அன்னார் சரஸ்வதியின் அன்புக் கணவரும் பாலசுப்பிரமணியம் (அமெரிக்கா), பாலச்சந்திரன் (அமெரிக்கா), சிவானந்தன் (கனடா), சர்வானந்தன் (கனடா), தனலட்சுமி (அமெரிக்கா) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் பா.மணி, பா.ராஜாம்பாள், சி.கிரிஜா, ச.ஜமுனா, Dr.K.தேவகாந்தன் ஆகியோரின் அன்பு மாமனாரும் முரளி, வித்தியா, அனுஷா, கிரிஷாந்தி, ஜிலோஜினி, அம்பிகா, ரேணுகா, கிஷானி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (08.08.2004) ஞாயிற்றுக்கிழமை நடைபெற்று, பூதவுடல் அமெரிக்காவில் உள்ள புளோரிடாவில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.56, முதலாம் ஒழுங்கை,*
*பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.* (35061)(29-17-18)
தகவல்: க.நாமநாதன்.

## ஸ்ரீமதி செல்வமதி நித்தியானந்தக்குருக்கள்

(குண்டுமணி)



மண்கும்பாண், வெள்ளைப்புற்றடி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் கோயிலடியைப் பிறப்பிடமாகவும், மட்டக்களப்பு, பெரியநீலாவணையை வசிப்பிடமாகவும் தற்போது கல்வியங்காட்டில் வசிப்பவருமான ஸ்ரீமதி செல்வமதி நித்தியானந்தக்குருக்கள் அவர்கள் நேற்று (08.08.2004) ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் ச.நித்தியானந்தக்குருக்களின் அன்பு மனைவியும் மதிரெத்தினம், அமரத்துவமடைந்த திஞானசம்பந்தர் ஐயர் தம்பதிகளின் ஏகபுத்திரியும் அபர்ணா, நிராகுலன், நிசாகரன், நிமேகாந், நிமல்ராஜ ஆகியோரின் பாசமிகு தாயாரும் தி.தியாகராஜாக்குருக்கள் (மட்டு. காரைதீவு), தி.ஜெயராஜ் ஐயா (மண்கும்பான்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (08.08.2004) ஞாயிற்றுக்கிழமை கல்வியங்காட்டில் நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

*கலைமகள் வீதி,*
*கல்வியங்காடு.* (35062)(29-17-18)
தகவல்: ச.நித்தியானந்தக்குருக்கள் (கணவர்).

## திருமதி அன்னம்மா குணரத்தினம்

(குரும்பசிட்டி)



குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகவும் தற்போது 179/3, பிறவுண் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அன்னம்மா குணரத்தினம் அவர்கள் நேற்று (08.08.2004) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற குணரத்தினத்தின் அன்பு மனைவியும் மங்களராணி (முன்னாள் ஆசிரியர், வயாவிளான் ம.ம.வி), மங்களவதனி (ஆசிரியர், யாழ. இந்து மகளிர் ஆரம்ப் பாடசாலை) ஆகியோரின் அருமைத் தாயாரும் காலஞ்சென்ற ஆ.மகாதேவன் (முன்னாள் இரசாயனவியல் விரிவுரையாளர், பலாலி ஆசிரியர் கலாசாலை) மற்றும் அ.உதயகுமார் (கோப்பாய் றோ.க. பாடசாலை) ஆகியோரின் மாமியும் சிவரூபன், சுவஸ்திகாவின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.08.2004) திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*179/3, பிறவுண் வீதி,*
*யாழ்ப்பாணம்.* (35057)(29-17-18)
தகவல்: திருமதி ம.மங்களராணி.

## தாமோதரம்பிள்ளை வேல்நம்பி

(முன்னாள் உதவி அரசாங்க அதிபர்)

புத்தூரைப் பிறப்பிடமாகவும் கோப்பாய் தெற்கில் வசித்தவருமான தாமோதரம்பிள்ளை வேல்நம்பி அவர்கள் நேற்று (08.08.2004) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சந்திரசேகரம் தாமோதரம்பிள்ளை - தங்கம்மா ஆகியோரின் பாசமிகு ஏகபுத்திரரும் நல்லநாயகி அம்மாவின் அன்புக் கணவரும் திருமதி சாந்தநாயகி, செல்வி சரஸ்வதிப்பிள்ளை ஆகியோரின் விருப்புடைச் சகோதரனும் கந்தையா குமாரசுவாமி (முன்னாள் பால் விநியோக மேற்பார்வையாளர்), சதா லோகேஸ்வரன் (சட்டத்தரணி) ஆகியோரின் அருமை மைத்துனரும் விக்னேஸ்வரன் (சட்டத்தரணி), டாக்டர் மகேசன் (ஆலோசகர், யாழ். போதனா வைத்தியசாலை), திருமதி பிரவாகினி, எண்குணன் ஆகியோரின் பாசமிகு மாமனாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கோப்பாய் தெற்கு இல்லத்தில் இன்று (09.08.2004) பிற்பகல் இரண்டு மணிக்கு நடைபெற்று, பூதவுடல் குடும்ப மயானத்திற்கு தகனத்திற்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கோப்பாய் தெற்கு,*
*கோப்பாய்.* (சி-36499)(29-17-18)
தகவல்: சதா லோகேஸ்வரன் (மைத்துனர்).

## ஜி.சீ.ஈ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கணிதப் பிரிவு மாணவனான நல்லவரோதயன் ஹயானந்த் என்பவரே 3பாடங்களிலும் 'ஏ' சித்தி பெற்று மாவட்ட மட்டத்தில் மூன்றாவது நிலையையும் (2.706) தேசிய மட்டத்தில் 26ஆவது இடத்தையும் எட்டியுள்ளார். இவர் ஆங்கில மொழியிலும் 'பி' சித்தி பெற்றுள்ளார்.

இவருடன் சேர்த்து சென்ஜோன்ஸ் கல்லூரி மாணவர்கள் ஐவர் 3'ஏ' சித்தி பெற்றிருக்கின்றனர்.

யாழ். மத்திய கல்லூரியில் இருந்தும் மேலும் இரண்டு மாணவாகள் 3'ஏ' சித்தி பெற்றிருப்பது தெரியவந்திருக்கிறது.

எஸ்.துஸ்யந்தன் (கலை), எஸ்.மதனரூபன் (வர்த்தகம்) ஆகிய இருவருமே 3'ஏ' சித்தி பெற்றிருக்கின்றனர் என்று மத்திய கல்லூரி அதிபர் அறிவித்திருக்கிறார். இங்கு 3'ஏ' சித்தி பெற்றிருக்கின்றனர் என்று மத்திய கல்லூரி அதிபர் அறிவித்திருக்கிறார். இங்கு 3'ஏ' சித்தி பெற்றோரின் எண்ணிக்கை இவர்களுடன் சேர்த்து மூன்றாகும்.

யாழ். இந்துக் கல்லூரியில் 11 மாணவர்களும் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் 6 பேரும் அதிவிசேட சித்தி (3ஏ)பெற்றிருப்பது தெரிந்ததே.

நேற்றுக் கிடைத்த பெறுபேறுகளின்படி யாழ். மாவட்டத்தில் மொத்தமாக 61 பேர் 3'ஏ' சித்தி பெற்றுள்ளனர்.

இந்தப் பரீட்சைப் பெறுபேறுகள் நேற்று யாழ்ப்பாணத்துக்குக் கிடைத்தன. யாழ். மாவட்டத்தில் ஏனைய பாடசாலைகள் பெற்ற முன்னணிப் பெறுபேறுகள் பின்னர் உதயனில் வெளியாகும். (ஐ-3-72-202-203)

## வன்னியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

★ முரசுமோட்டை முருகானந்தா ம.வி. - சுநதரலிங்கம் பாஸ்கரன், குணரத்தினம் சுவேந்திரகுமார்.

**முல்லைத்தீவு**

★ புதுக்குடியிருப்பு ம.வி. - செல்வன் கீரன், சிவலிங்கம் சிவரூபன், சிவானந்தராசா அர்ச்சனா, நாகேஸ்வரன் ஜெயதீபன், நாகதம்பி ரதீகரன், சிவலிங்கம் சுரேஷ்.

★ வற்றாப்பளை ம.வி. - சண்முகநாதன் அனுஷியா.

★ வித்தியானந்தா கல்லூரி - செல்லையா ஜீவிதா.

★ முல்லைத்தீவு ம.வி. - அன்ரன் பெனடிக் யூடிகுமார். (ஐ-3)

## இராணுவ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேறு சில வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

இராணுவத்தின் சேவைப் பிரிவில் சேர்ந்து பணியாற்றிய ஹெந்தரவிதான, இராணுவ உளவுப் பிரிவில் லெப்டினன்டாக இணைந்தார். அப்போது முதல் பிரிகேடியர் தரநிலையில் புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளராகும் வரை அந்தப் பிரிவிலேயே அவர் பணியாற்றிவருகின்றார்.

அவருக்கு நேரடியாக யுத்தகள அனுபவம் இல்லை என்றும் -

அதனாலேயே அவரையும் தாண்டி யுத்தகள அனுபவம்மிக்க பிரிகேடியர் முனசிங்கவை மேஜர் ஜெனரலாக நியமிக்க இராணுவத் தலைமையகமும் அரசும் முடிவு செய்தன என்றும் கூறப்பட்டது. (ஐ-க)

## ஜே.வி.பி கட்சிக்குள்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதுவரை காலமும் கட்சி வளரவேண்டும்; ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்ற வேண்டும் என்ற ஒரே சிந்தனையுடனேயே தீவிரமாக இவர்கள் செயற்பட்டு வந்தனர். ஆனால், நிலைமை இப்போது தலைகீழ்.

கட்சியின் மூத்த உறுப்பினர்கள் பலர் நாடாளுமன்றத்தில் அமைச்சர்களாகவும் பிரதி அமைச்சர்களாகவும் வந்துள்ளனர். இதேபோன்று மாகாணசபைகளிலும் ஏதாவது ஓர் அமைச்சுத் தன்னும் தமது பிரதேச இளைஞர்களுக்குக் கிடைக்கும் என்ற எதிர்பார்ப்புடன் கீழ்மட்டத் தொண்டர்கள் மாகாணசபைத் தேர்தல்களின் போது செயற்பட்டனர்.

ஆனால், ஜே.வி.பி. தலைமை கீழ் மட்ட உறுப்பினர்களுக்கு அதற்கான சந்தர்ப்பத்தை வழங்க மறுத்துவிட்டது. மாகாணசபைகளின் பொறுப்புக்களை ஏற்பதில்லை என ஜே.வி.பி. முடிவுசெய்துவிட்டது. தலைமைப்பீடத்தின் இச் செயல், கட்சியின் இளவட்ட உறுப்பினர்கள் மற்றும் ஆதரவாளர்கள் மத்தியில் எரிச்சலை மூட்டியுள்ளதாம்.

72 பேர் மாகாணசபை உறுப்பினர்களாக வந்தும் ஏழு பேருக்கு கூட அமைச்சர்களாகும் வாய்ப்புக் கிடைக்கவில்லையே என்ற ஆதங்கம் அவர்களுக்கு.

இதேவேளை, முன்பு திறந்த புத்தகமாகச் செயற்பட்ட ஜே.வி.பி. தலைமை, அண்மைக்காலமாக - சோமவன்ஸ அமரசிங்கவின் வரவின் பின் - ஐ.தே.க., ஸ்ரீ.ல.சு.கட்சிகள் போன்று மூடுமந்திரமாகச் செயற்பட ஆரம்பித்துவிட்டதாக இப்புதிய தலைமுறைகள் வெளிப்படையாகக் குற்றம் சுமத்த ஆரம்பித்துவிட்டனவாம்.

நாடாளுமன்ற உறுப்பினர்களும் மாகாணசபை உறுப்பினர்களும் தமது மாதாந்த சம்பளத்தில் ஒரு குறிப்பிட்ட பகுதியை மட்டும் தமது சொந்த செலவுகளுக்கு எடுக்கமுடியும். ஏனைய எஞ்சிய பகுதி கட்சி வளர்ச்சி நிதிக்கு வழங்கப்படவேண்டும் என்பதும் கண்டிப்பான உத்தரவும் கட்டளையுமாகும்.

இதேவேளை, நிதி, நிர்வாகம் தொடர்பாக எதுவும் கேட்கமுடியாது என்ற கட்டுப்பாடும் உண்டாம். ஆனால், புதிய தலைமுறையினர் கட்டுப்பாட்டை முறித்துக் கேள்வி கேட்ட ஆரம்பித்துவிட்டனர். றோகண விஜயவீர, லொக்கு அத்துல போன்றவர்களின் காலத்திலும் அதற்குப் பின்னரும் வங்கிகளில் கொள்ளையடிக்கப்பட்ட தங்க நகைகளுக்கு என்ன ஆயிற்று?, அவை எங்கே?, யாரிடம் இருக்கின்றன? அவற்றின் பெறுமதி என்ன?, இதில் ஏதாவது மோசடி நடந்துள்ளதா? - என்ற கேள்விகளையும் கிளப்பிவிட்டுள்ளனர் கட்சியின் மூத்த உறுப்பினர்கள் சிலர்.

இந்தக் கேள்வி எழுப்பும் இளைஞர் கூட்டத்தைக் கட்சியின் மூத்த உறுப்பினர்கள் சிலரே பின்னால் நின்று தூண்டிவிடுகின்றனர் எனக் கருதி கட்சியின் உயர்பீடம் கொதிப்படைந்துள்ளதாம்.

இளவட்டங்களால் எழுப்பப்பட்ட இக்கேள்விகளுக்கு கட்சி வட்டாரத்திலும் வரவேற்புக் கிடைத்துள்ளதாம்.

தங்க நகை விவகாரங்களுடன் சோமவன்ஸ நேரடியாகத் தொடர்புடையவர் என்பதால் அவரே இவ்விடயங்களில் பதில்சொல்ல வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளாராம். இதனால் ஜே.வி.பிக்குள் தலைவர் சோமவன்ஸவுக்கு ஆதரவான ஒரு குழுவுக்கும் நியாயம் கேட்கும் குழுவுக்கும் இடையில் மோதல்கள் ஆரம்பித்துவிட்டனவாம்.

எனினும், தலைவர் சோமவன்ஸ சுகவீனம் காரணமாக வெளிநாடு சென்றுவரத் தயாராகிக் கொண்டிருக்கின்றார். (ஐ-க)

## மட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

றப் புலனாய்வுத் துறையினருக்கு ஏற்பட்டுள்ளது.

உருளைக்கிழங்குப் பொரியல் பார்ஸலே தாம் எடுத்து வந்து கைதிக்குக் கொடுத்ததாக அவர் தெரிவித்துள்ளார்.

கைதுசெய்யப்பட்ட அதிகாரி பதில் நீதிவான் சந்திரன் சின்னையா முன்னிலையில் நேற்று ஆஜர் செய்யப்பட்டார். அவரை இன்று வரை விளக்கமறியலில் வைக்கும்படி பதில் நீதிவான் உத்தரவிட்டார். (ஐ-3)

## யாழ். சிறையில்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிறைச்சாலையில் பணிபுரியும் 30 ஊழியர்களும் இன்று சுகவீன லீவுப் போராட்டத்தில் ஈடுபடவிருப்பதாக அறிவித்துள்ளனர் என்றும் - அவர் கூறினார்.

இதேவேளை -

சிறைச்சாலைக் காவலர்கள், கைதிகளுக்கு நேற்று காலை உணவு வழங்கச் சென்ற சமயம் கைதிகள் மறுக்கவே அங்கு களேபரம் ஏற்பட்டது என்று சிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரிகள் இன்று சிறைச்சாலைக்குச் சென்று நிலைமைகளை ஆராயவுள்ளனர்.

இதேவேளை -

யாழ். சிறைச்சாலையில் இன்று எந்தவிதப் போராட்டத்திலும் தாம் ஈடுபடப்போவதில்லை என்று யாழ். சிறைச்சாலை பணியாளர்களில் ஒரு பகுதியினர் தெரிவித்துள்ளனர். (ஐ-3-7)


**கிறிஸ்ரல் சென்ரர் நெல்லியடி**

**A/L DAY CLASS**

ஆரம்பம்: இன்று மு.ப. 9.00 மணி
கணிதம், உயிரியல், வர்த்தகம், கலை
யாழ்.நகர் ஆசிரியர் குழு

| | |
|---|---|
| பௌதிகம் : ஸ்பெல்மன் | பொருளியல் : உதயன் |
| இரசாயனவியல்: பத்மநாதன் | வணிகக்கல்வி : பசில் |
| இ.கணிதம் : ரஜனி | கணக்கீடு : சயந்தன் |
| உயிரியல் : ஞானேந்திரன் | தமிழ் : பத்மநாதன் |
| புள்ளிவிபரவியல்:தவசேகர் | இந்து நாகரிகம் :பத்மராஜா |
| ஆங்கிலம் : ஜெயக்குமார் | புவியியல் : கிரீதரன் |
| | நாடகமும் அரங்கியல் : வரதன் |
| | கிறிஸ்தவம் : ஞானம் |
| | வரலாறு : சுதன் |
| | அளவையியல் : சந்திரன் |

(சி-36472)(18-17-32)

**தொழிற் பயிற்சிகள்**

வெளிநாடுகளில் இலகுவான முறையில் வேலைவாய்ப்பைப் பெறக்கூடியவாறு பயிற்சி அளிக்கப்பட்டு பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.

★ RADIO, T.V, VIDEO DECK REPAIRING
சகல இனறேடியோ, ரீ.வி,டெக் மற்றும் எலக்ரோனிக் உபகரணங்கள் ,COMPUTER, MONITOR, UPS, PRINTER, SCANNER என்பன திருத்தும் முறை ஆரம்பத்திலிருந்து பயிற்சியளிக்கப்படும. *(காலம் 10மாதங்கள்)*

★ MOTOR REWINDING AND ELECTRICAL WIRING
சகல இன மோட்டார், (F)பான், ரான்ஸ்போமர்கள் றிவைண்டிங் செய்யும்முறை மற்றும் வீட்டு மின்னிணைப்பு Single phase, Three phase இணைப்பு முறை என்பன பயிற்சி அளிக்கப்படும். *(காலம் 7மாதங்கள்)*

★ AIR CONDITIONING AND REFRIGERATION
சகல இன குளிர்சாதனப்பெட்டி மற்றும் எயார் கொண்டிசன வாகனங்களுக்குரிய AC என்பன திருத்தும்முறை ஆரம்பத்தில் இருந்து பயிற்சியளிக்கப்படும். *(காலம் 7மாதங்கள்)*

★ MOTOR CYCLE, WATER PUMP, MECHANISAM சகல இன மோட்டார் சைக்கிள்கள், ஸ்கூட்டர், நீர்இறைக்கும் இயந்திரம் திருத்தும்முறை ஆரம்பத்தில்இருந்து பயிற்சியளிக்கப்படும. *(காலம் 6மாதங்கள்)*

★ DIPLOMA IN ELECTRICAL & ELECTRONIC TECHNOLOGY *(காலம்12மாதங்கள்)*

**புதிய பயிற்சிகள் ஆரம்பம்** 16.08.2004(கிழமை நாள்களில்)
14.08.2004 (சனி, ஞாயிறு நாள்களில்)
தனிப்பட்ட வகுப்புகள் நடைபெறுகின்றன.
மேலதிக விவரங்களுக்கு

**JAFFNA TECHNICAL INSTITUTE** - DIRECTOR
NO.367, நாவலர் வீதி, இலுப்பையடிச் சந்தி, யாழ்ப்பாணம். T.P.: 222 3335
கிளை: இல.07, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
(35018)(35-18-17-32)


## மரண அறிவித்தல்

### ஜெயசிங்கம் (மயிலம்மான்)

நெல்லியடி, கரவெட்டியைச் சேர்ந்த ஜெயசிங்கம் (மயிலம்மான்) அவர்கள் நேற்று (08-08-2004) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் சாந்தாவின் அன்புக் கணவரும், துஷ்யந்தனின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09-08-2004) திங்கள் காலை 10 மணியளவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: சு.சிவராஜா விஷ்ணுபவன், யாழ்ப்பாணம்.

*கரவெட்டி மத்தி, கரவெட்டி.* (85067)(18-17-32)


**NEW SCIENCE COLLEGE**
*கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.*
2005 A/L பௌதிக இரசாயனம்
திரு.மகேஸ்வரன் B.Sc PGD Mphil Edu.
திங்கள் 3.00 p.m., செவ்வாய் 6.00 a.m.
ஆரம்பம்: 09-08-2004 திங். 3.00 p.m.
(35045)

**SUBRA (14)**
*சித்தன்கேணி*
**A/L Day Class**
ஆரம்பம்: 11-08-2004
புதன் காலை 7.00
அனுமதிக்கு முந்துங்கள்.
(36482)

**இறுதி மாதிரிப் பரீட்சை தரம்-5**
15 ஆம் திகதி நடைபெறவுள்ள புலமைப் பரிசில் பரீட்சைக்கான முற்றிலும் எதிர்பார்க்கப்படும் வினாக்கள் அடங்கிய
*இறுதி மாதிரிப் பரீட்சை*
நல்லூர் சயன்ஸ் அக்கடமியில்
புதன் பி.ப. 4.00 மணிக்கு (11-08-2004)
உங்கள் பிள்ளைகளைத் தவறாது கலந்து சித்திபெறச் செய்யுங்கள்.
ஆக்கம். திரு.கணேசலிங்கம் (B.Ed. Hons)
(ISA திருமலை, NSA பிரதம பரீட்சை மதிப்பீட்டாளர் பதிவுகள் இன்றும் நாளையும் மட்டும் ஏற்கப்படும்.
7 ஆம் திகதி பரீட்சை எழுதியோருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
(35047)

**CHEMISTRY** நாவலர், ஆனைப்பந்தி
**DIAS PAPER CLASS**
★அலகு ரீதியான ★ஆண்டு ரீதியான (1979-2004)
Tu.,we.,Th. (6.30-8.00), Tu.,We.,Th.(2.00)
(34888)

**NEW SCIENCE HALL**
**இரசாயனவியல்** வகுப்புகள்
ஆசிரியர் க.சிவத்திரன் B.Sc. (Hons)
(மீள்பரீட்சார்த்திகளுக்கானது)
1) அலகுரீதியான கடந்தகால வினா-விடை வகுப்பு
திங்கள் தொடக்கம் வெள்ளிவரை (DAY CLASS)
பிரிவு I 8.30 - 9.45 } பொது இரசாயனம்
பிரிவு II 9.45 - 11.00 } நடைபெறுகின்றது.
2) மாதிரி வினாவிடை வகுப்பு
பிரிவு I செவ்., வியா. 7.30 - 8.30
பிரிவு II செவ்., வியா. 11.00 - 12.00
3) அசேதன இரசாயனம் (Theory) திங்கள் 4.30 - 6.30
4) சேதன இரசாயனம் (Theory) வியாழன் 4.30 - 6.30
குறிப்பு:- I : யாவும் புதிய நேரப்படி
II : ஆரம்பம் 11.08.2004 புதன்
III : பௌதிக இரசாயனம் (Theory) வெகுவிரைவில்
IV : Beacon Study Centre வதிரியில் அலகுரீதியான கடந்த கால வினா-விடை வகுப்பு சனி 8.30 - 9.30, ஞாயிறு 7.30 - 8.30
V : EESAN கோண்டாவிலிலும் அலகு ரீதியான கடந்தகால வினா-விடை செவ்., புதன் 6.00 - 7.00
(35034)(17-32-18)

**NEW SCIENCE HALL**
*கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.*
மீள்பரீட்சார்த்திகளுக்காக
திங்கள் முதல் வெள்ளிவரை

| | |
|---|---|
| 7.00-8.00 | உயிரியல் திரு.குணசீலன், திரு.கெங்காதரன் |
| 8.00-9.15 | இரசாயனவியல் பிரிவு 1 திரு.சிவத்திரன் / பௌதிகவியல் பிரிவு 2 திரு.குகன் |
| 9.15-10.30 | இரசாயனவியல் பிரிவு 2 திரு.சிவத்திரன் / பௌதிகவியல் பிரிவு 1 திரு.குகன் |
| 10.30-12.30 | இணைந்த கணிதம் - திரு.செந்தில்ராஜ் / பௌதிகவியல் : திரு.குகன் |
| 7.00-8.00 | திங்கள் } காந்தப்புலம் |
| 10.30-11.30 | புதன் } காந்தப்புலம் |
| 4.00-6.00 | செவ்வாய்- சடப்பொருள்களின் இயல்பு |
| 4.00-6.00 | புதன் - வெப்பவியல் |
| | இரசாயனவியல் : திரு.சிவத்திரன் |
| 7.00-8.00 | செவ்வாய் } மாதிரி வினா-விடை |
| 10.30-11.30 | வியாழன் } மாதிரி வினா-விடை |
| 4.00-6.00 | திங்கள்-அசேதன இரசாயனம் |
| 4.00-6.00 | வியாழன்-சேதன இரசாயனம் |

(35044)(18-17-32)

**CATWAS. COM**
**Computer Academy**
15.08.2004 புதிய பிரிவு ஆரம்பம்
மாணவர்களே A/L பரீட்சைப் பெறுபேறுகள் கிடைத்துவிட்டனவா? பல்கலை அனுமதி சந்தேகத்துக்கிடமாக உள்ளதா? கவலை வேண்டாம் உடனடி வேலை வாய்ப்பைப் பெற்றுத்தரக்கூடிய தகவல் தொழில்நுட்பத்துறையில் இணைந்து கொள்ளுங்கள். நீங்களும் ஒரு தொழில் நுட்பவல்லுநராகலாம். அதற்கான பயணத்தை இன்றே எம்முடன் இணைந்து ஆரம்பியுங்கள்.
**Diploma Course**
- Diploma in Microsoft Office 1750/=
- Diploma in Desktop Publishing 2000/=
- Diploma in Hardware 1500/=
- Web page Designing 3000/=
- Diploma in Video Mixing 2500/=

விண்ணப்பங்கள் யாவும் 15.08.2004 இற்கு முன்னர் நேரடியாகவோ அல்லது தபால் மூலமோ அனுப்பிவைக்கவும்.
**Certificate Course**
- Ms Word XP - Ms Excel XP - Ms Power Point XP
- Ms Access XP - Page maker - Corel Draw - Photo shop
- Cool 3D - Premiere - Studio

No.26, Somasundram Avenue, Chundikuli, Jaffna. T.P.: 021-222-3805
(சி-36486)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 09.08.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.